பாரதி போற்றிய

# அருளம்பல சுவாமிகள்



கலாநிதி நா. ஞானகுமாரன்

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபை

# பாரதி போற்றிய

# அருளம்பல சுவாமிகள்

— கலாநிதி நா. ஞானகுமாரன் —

சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியற்றுறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம், இலங்கை.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபை

வியாபாரிமூலை,

பருத்தித்துறை.

*Title of the Book* :- Bharathy portia Arulampala Swamikal.

*Author* :- Naganathan Gnanakumaran,
B. A (Hons), M.A (Jaff), Ph. D. (Jabalpur).

*Address* :- V. M. Road, Arthiady, Point Pedro, Sri Lanka

*Edition* :- First Edition, 1992.

*Copyright* :- To the Author.

*Publisher* :- Jalpanaththu Swamikal Sabai.
Viyaparimoolai, Point Pedro.

*printer* :- Kumaran Press, Colombo, 12

*Cover design* :- A. Morayas

ISBN 955 - 9158 - 00 - 7

நூல் : பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்

ஆசிரியர் : கலாநிதி நாகநாதன் ஞானகுமாரன்

முகவரி : வி. மு. வீதி, ஆத்தியடி, பருத்தித்துறை
இலங்கை.

பதிப்பு : முதலாம் பதிப்பு 1992.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : யாழ்ப்பாணத்து சுவாமிகள் சபை.
வியாபாரி மூலை, பருத்தித்துறை.

அச்சகம் : குமரன் அச்சகம், கொழும்பு 12

அட்டைப்படம் : ஏ. மொறயஸ்

50-00

යාපනය විශ්ව විද්‍යාලය
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
UNIVERSITY OF JAFFNA

තිරුනෙල්වෙලි,
යාපනය.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
Thirunelvely,
Jaffna,
Sri Lanka.

Professor A. THURAIRAJAH
B. Sc. Eng. (SL): Ph. D. (Cantab);
C. Eng., F. I. E. (SL): F. I. C. E: N. A. S. (SL):
Vice - Chancellor

Telephone: 0252834

*20 - 11 - 1991.*

# வாழ்த்துரை

நூற்றாண்டு காலமாக எண்ணிறந்த சுவாமிகளும் சித்தர்களும் வாழ்ந்து மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வளமூட்டி வளப்பங்கண்டது எமது ஈழத்திருநாடாகும். இவ்வாறான பெருமையுடைய இத் திருநாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள வதிரியில் தோன்றிய அருளம்பல சுவாமிகளின் வாழ்க்கை பற்றிய செய்திகளைத் தாங்கிய இச்சிறு நூல் சுவாமிகளின் சமாதி எய்திய ஐம்பதாவது ஆண்டை நினைவிலிருத்தும் முகமாக வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

1942ம் ஆண்டு வியாபாரிமூலையில் சமாதியடைந்த அருளம்பல சுவாமிகளின் செய்திகள் கற்றோர் உலகில் சிறப்புற இதுவரை வெளிவராதது ஆச்சரியத்துக்கு உரியதே. எம் பழம்பெரும் பண்பாட்டின் விழுமியங்களைப் பேணிக்காப்பது ஈழத்தவர்கள் அனைவரதும் இன்றியமையாத கடமையாகும். இந்த வகையில் சுப்பிரமணிய பாரதியினால் ''ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்து சாமி'' என விதந்து பாடப்பெற்ற புகழுக்குரிய சுவாமிகள் யாரெனும் வினாவிற்கு இந்நூல் விடைபகர முயல்வது வரவேற்கத்தக்கதாகும். இவ்

வாறான ஆய்வுகள் பலவும் ஊக்குவிக்கப்பட்டு எம் பழம் பெரும் பண்பாடு கலை, கலாச்சாரப் பெறுமானங்களை வெளிக்கொணர்வது ஆரோக்கியத்திற்கு உகந்ததாகும்.

அருளம்பல சுவாமிகளால் எழுதிப் பதிக்கப்பெற்ற பதினான்கு நூல்களும் கற்றோரால் ஆய்வுக்குட்படுத்த வேண்டியனவாகும். இவை தவிர இதுவரை அச்சேறாது உள்ள சுவாமிகளின் கையெழுத்துப் பிரதிகளையும் அச்சேற்ற வேண்டியது காலத்தின் இன்றியமையாத் தேவையுமாகும்.

இன்றைய காலச்சூழலையும் பொருட்படுத்தாது இவ்வாறான அரும் பணியில் ஈடுபட்டு இந்நூலை வெளிவரச்செய்த அருளம்பலசுவாமிகள் நினைவுச்சபையினர்க்கு எனது மனமார்ந்த நன்றிகள். ஆன்மீக வெளிப்பாட்டின் உயர்வினை அருளம்பல சுவாமிகளின் வாழ்வூடாக எடுத்தாளும் இந்நூல் அனைவரும் படித்துப் பயன்பெறத்தக்கது. இந்நூலாசிரியரான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானகுமாரனைப் பாராட்டுவதோடு தொடர்ந்தும் இவ்வாறான பணிகளில் அவர் ஈடுபட வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் அ. துரைராசா
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



நிஷ்டையில் இருந்தபோது எடுத்த படம் (1913)

முன்னுரையாக ஒரு குறிப்பு

# யாழ்ப்பாணத்துச் சுவாமிகள்

# —சித்தர் மரபு வளத்துக்கான ஒரு பலகணி

"தோழரே! எந்நாளும் எனக்குப் பார்மேல்
மங்களஞ்சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர்கோன், யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்
சங்கரனென் றெப்போதும் முன்னே கொண்டு
சரணடைந்தால் அது கண்டீர் சர்வசித்தி"
— பாரதியார்

இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட தொடர்ச்சி வளமுள்ள ஓர் இலக்கியப் பாரம்பரியத்தின் வரலாறு கண்ட இரண்டாவது திருப்புமுனையாக அமைந்த ஒரு மகாகவியின் பக்திப்பணிவு வாசகம் இது.

இந்த யாழ்ப்பாணத்துச்சாமியைச் சிவனாகவே கொண்டு அவனிடத்து 'ஒடுங்குதல்' வேண்டுமெனப் பாரதி கூறுகின்றான்.

அத்துணைப் பெரும் புகழ் கொண்ட யாழ்ப்பாணத்துச்சாமி என இனம் கண்டறியப்பட்டவரான அருளம்பலசுவாமிகள் பற்றிய அறிமுக வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் இச் சிறுநூல்.

இந்நூலின் ஆசிரியர் நமது புலமைவளத்துக்கான எதிர்கால நம்பிக்கைகளில் ஒன்றாக உள்ளவர், மெய்யியல்துறை விரிவுரையாளர். மறைஞானப் பாரம்பரியத்தைத் தனது அறிவுத்தேடல் முயற்சிகளுள் ஒன்றாகக் கொண்டவர்.

சுவாமிகளின் பிறப்பு நூற்றாண்டைத் தொடர்ந்து (188!) வியாபாரிமூலையிலும், பருத்தித்துறையிலும் கிளம்பியுள்ள மீள் கண்டுபிடிப்புந்துதலின் வெளிப்பாடாக இச்சிறு நூல் அமைகிறது. சுவாமி பற்றிய ஆராய்ச்சியின் அச்சாரமாக இந்நூல் வெளிவருகிறது. வரவேற்கவேண்டியது புலமையுலகின் கடமை. அந்த வரவேற்புக்கான அருகதை நிறைய உடையது இது.

யாழ்ப்பாணத்துச்சாமி பற்றிய இந்த 'அச்சவாரத்தின்' மீதி தரப்படவேண்டிய தொகையாது? அதுதான் இந்த முன்னுரையின் சிரத்தையாகும்.

அருளம்பலசுவாமியார் பற்றிய ஆய்வுகள் நமக்கு மூன்று மட்டங்களில் மிக மிக முக்கியமாகின்றன.

(1) தமிழர் பண்பாட்டின் குறிப்பாக ஈழத்தமிழர் மதப்பண்பாட்டில் சித்தர்கள் பெறும் இடம்.

(2) மறைஞானத் தத்துவமுடையோரின் எழுத்துக்களில் காணப்படும் இலக்கியப் (குறிப்பாக நடையியற்) பண்புகள்

(3) மகாகவி பாரதியின் ஆன்மீக ஆளுமை உருவாக்கத்தில் யாழ்ப்பாணத்துச் சாமியாருக்கு உள்ள இடம்.

நாம் நமது கல்வியமைப்புக்கள்மூலம் சைவசித்தாந்த முனைப்புள்ளதும் ஆகம நெறிப்பட்டதுமான ஒரு மதநோக்கு முறைமையையே மெய்யான இந்து முறைமை என நிறுவ முயன்றாலும் நமது மதப் பண்பாட்டில் இந்த நெறி முறைமைகளுக்குள் அடங்காத (நாம் முயன்றும் அடங்காத) ஞானியரைக் காண்கின்றோம். அவர் பணிக்கு நமது மதவாழ்க்கையில் முக்கிய இடமுண்டு. அவர்களுக்கு நமது மத வாழ்க்கையில் முக்கிய இடமுண்டு இஞ்ஞானியர் சாதாரண மத நடத்தை நியமங்களை மேற்கொள்வதில்லை. மிகக் குறைந்த மட்டத்தில் 'சித்து'க்களில் வல்லவர் சாதாரணமட்டத்தில் வருபொருளுரைப்பவர்களாகவும், மிக உயர்ந்த மட்டத்தில் மந்திர சக்தியுள்ள வாக்கு வரமுடையோராகவும் இவர்கள் போற்றப்படுவதுண்டு. இவர்கள் மறைந்த பின்பு தெய்வ நிலைப் படுத்தப்பட்டு வணங்கப்படுவார்கள். இத்தகையோரை நமது நியமக்கருத்து நிலைகட்குள் இணைத்து நோக்கும் புலமை முயற்சிகள் பல உள்ளன. மக்களின் மத நம்பிக்கைகளில் இத்தகைய சித்தர் பெறும் இடம் பற்றி விரிவாக ஆராயப்படல் வேண்டும்.

இவ்வாறு கூறும்பொழுது அவ் ஆய்வு எத்தகைய முறைமையில் அமைந்திருக்கும் என்பதை நோக்குதல் அவசியம். மதத்தின் சமூகவியல் பற்றிய நோக்கும், ஞானியர்களின் நடைமுறை பற்றுகள் பற்றிய உளவியல் ஆய்வும் இது தொடர்பாக முக்கிய இடம் பெறுவன. அத்தகைய ஆய்வுக்கு ஞானியின் வாழ்க்கை வரலாறானது ஒரு தரவாக இருக்குமல்லாது அதுவே அந்த ஆய்வாகி விடாது. தமிழ் நாட்டின் சித்தர் பாரம்பரியம் பற்றி இத்தகைய ஓர் ஆய்வு முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் போற்றப்படும் சில முக்கியமான 'சுவாமிகள்' (சித்தர்கள், யோகிகள்) உள்ளனர். ஈழத்தின்

இந்து மதவாழ்க்கை வளத்திற்கு இவர்கள் தொழிற்பாடுகள் எத்துணை முக்கியமானவை என்பதை விரிவாக ஆராய்தல் நமது கடனாகின்றது.

சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் அம் முயற்சிக்கான அடிப்படைத் தரவு மாத்திரமே. இத்தரவினை தளமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். பிறமத மறைஞானப் பாரம்பரியம் பற்றிய அறிவு இவ்வாய்வுக்கு பெருந்துணையளிப்பதாகும்.

இரண்டாவதாக முக்கியத்துவம் பெறுவது சித்தர்கள் ஞானிகள் பயன்படுத்தும் மொழியாகும். இவர்களினது ஆக்கங்களௌ பாடற் பகுதிகளும் உரைப்பகுதிகளும் உள்ளன. இந்த மொழிகளை விளங்கிக் கொள்வது சிரமமாகும். அந்த அனுபவத்தினை நாம் சித்தர்கள் பாடல்களை வாசிக்கும் பொழுது நிறையப் பெற்றுள்ளோம்.

உ+ம் : தாவாரமில்லைத் தனக்கொரு வீடில்லைத்
தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்.

மறைஞான அனுபவத்தின் அச்சாணியான அமிசம் குறிப்பிட்ட ஞானியின் ஆன்ம (உயிர்ப்பு) அநுபவமாகும். அது மிக மிகக் கூரியதான 'சித்த' நிலைப்பட்டது. அதனைச் சொல்லாற் சுட்ட முடியாது. சொல்லாற் சுட்டக்கூடிய அநுபவமென்றால் அது யாராலே எப்போதே ஏற்கனவே 'பெற்று'க்கொள்ளப்பட்ட அநுபவமேயாகும். மறைஞான அநுபவமோ அத்தகையதல்ல. ஆனால் அந்த அநுபவத்தை அந்த மறைஞானி எப்படியோ சுட்டிக் காட்ட விரும்புகின்றான். அதற்கென உள்ளது ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட நியமனக் கருத்துடைய சொற்களே. சொற்களாற் சுட்ட முடியாததைச் சொற்களாற் சுட்டுவது எப்படி? இதற்குப் பெரும்பாலும் இரண்டு வழிகள் உள்ளன.

(1) புதிய சொற்சேர்க்கைகளைக் கையாளுவது;

(2) ஏற்கனவே உள்ள சொற்களை உருவகங்களாகக் ( Metaphor ) கொள்வது.

ஒவ்வொரு ஞானியின் அனுபவமும் ஆளுமைத் தனித்துவமுடையதாதலால் அவரவர்கள் பயன்படுத்தும் 'மொழிகளுள்' வெவ்வேறு தன்மையான உள்ளார்த்தமுள்ள உருவகங்களாகவே அமையும் (உ+ம்) அருளம்பலம் சுவாமிகளின் 'கற்புநிலை' எனும் நூல் தலைப்பு) இதனால் மறைஞான அநுபவம் பெற்றோர்களுடைய மொழிநடையில் ஓர் அசாதாரணமான தன்மை இருக்கும். சொற்கள் அவற்றுக்குரிய

சாதாரண பொருளில் வராமல் ஒரு 'விசேட' கருத்தில் உருவாக்கப்பட்டு வரும். இந்த சொற் பிரயோகத்தை ஆராய்வது மிக்க பயனுள்ள ஓர் இலக்கிய முயற்சியாகும்.

அருளம்பல சுவாமிகளது உரைநூல்களும் பாடல்நூல்களும் இத்தகைய ஆய்வுக்கு முக்கியமான சான்றுகளாக அமையும். ஏனெனில் பள்ளிப் படிப்பிலே அதிகதூரம் செல்லாத ஒருவன் மறைஞான அனுபவங்களை எத்துணை லாவகமாக எடுத்துக் கூறுகின்றார் என்பதை அறிவதற்கு அவரது நூல்கள் பெரிதும் உதவுகின்றன.

ஆங்கில இலக்கிய மரபில் கௌலி (Cowley) டொன் (Donne) போன்ற (ஞானத்) திருவடியாளரின் கவிதைகளை ஆராயும்பொழுது 'பௌதிக அதீதக் கவிதை' எனும் தொடரைப் பயன்படுத்துவர்.

இந்திய மரபிலோ மறைஞானக் கவிதை மரபு மிக்க வளமுள்ளதாகும். இஸ்லாமிய ஆஃபி மறைஞானச் செல்வாக்கு இதில் முக்கிய இடம் வகிக்கின்றது. தாயுமானவரையும் மஸ்தான் சாகிபுவையும் ஒப்பு நோக்கும்பொழுது இவ்வுண்மை புலப்படும்.

மறைஞான மொழியின் செழுமை நிலை நின்று அருளம்பல சுவாமிகளை ஆராய்தல் மிக முக்கியமாகும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமியைப் பத்தொடு பதினொன்றாய் பார்க்காது தமிழ்ச் சித்தர் மரபின் ஒரு முக்கிய புருடராக நோக்க வேண்டுவதற்குக் காரணம் சுப்பிரமணிய பாரதியார் இவரைத் தன் ஞான குருமாருள் ஒருவராகக் கொள்வதாகும். சீடனாலும் குருவுக்கு மதிப்பு என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமியார் என்ற பிரச்சினையை கிளப்பியவர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக விளங்கிய அ. ந. கந்தசாமி அவர்கள். பொ. சபாபதிப்பிள்ளையின் பதிற்குறிப்பு உண்மையை வெளிக்கொணர்ந்தது. இந் நூலாசிரியர் குறிப்பிடுவது போன்று அந் நாட்களில் முற்போக்கு எழுத்தாளர் சங்க நடவடிக்கைகளை எதிர்த்தோர் சாமியின் புகழையே மறுதலித்தனர். அந்தக் காலத்து காழ்ப்புணர்வுகளில் இருந்து விடுபட்டு தமிழ் இலக்கிய வரலாற்றிற்கே முக்கியமான இப்பிரச்சினையை காய்தல் உவத்தலின்றி நோக்குதல் அவசியமாகும்.

அருளம்பல சாமியாரே பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சாமியார் என்பது ஈழத்து நிலை நின்றே எடுத்துக் கூறப்பட்டது; தமி

ழகத்துப் பாரதி ஒருவராவது இவ்விடயம் பற்றி ஆழமாக நோக்கியதாகத் தெரியவில்லை. பாரதி நூற்றாண்டு விழாப்போது கூட 'பாரதியின் ஆன்மீக ஆளுமை உருவாக்கம்' பற்றி விரிவாக நோக்கப்படவுமில்லை ஆராயப்படவுமில்லை.

இது பற்றிய தமிழகத்துச் சான்றுகளையும் தேடியெடுத்து ஈழத்துச் சான்றுகளுடன் ஒருங்கு வைத்து நோக்குவது அவசியமாகும். புதுவைப் பல்கலைக்கழகம் இப்பணியை மேற்கொள்ளக்கூடிய நிலையிலுள்ளது. சுமுகமான சூழ்நிலைகள் ஏற்பட்டதும் இவ்வாய்வினை ஊக்குவது எமது கடமையாகின்றது.

ஆனால், இப்பொழுதுள்ள நிலையில் அருளம்பல சுவாமிகளை பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி எனக் கொள்வது தவறாகாது என்பதே பொதுப்படையான கருத்தாகும். சுவாமிகளின் நூற்கள் சில புதுவையிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளமை நல்லதொரு சான்று. பாரதி மறைவு முதல் மஹாகவி வரை (1985) என்ற நூலுக்கான (சு.மார்க்குடன் இணைந்து நான் எழுதியது) ஆய்வில் ஈடுபட்டிருந்த பொழுது பாரதி புதுவையில் இருந்து சில தடவைகள் நாகை வரை சென்று திரும்பி வந்துள்ளமையை அறியக்கூடியதாக இருந்தது. புதுவையிலிருந்த பாரதியார் நாகப்பட்டினத்திலிருந்து சாமியை எவ்வாறு கண்டிருப்பார் என்பது இப்பொழுது ஒரு புதிரன்று.

இவ்வாய்வுகளை வரன்முறையான ஆய்வு முறைகளுக்கேற்ப மேற்கொள்ளும் பொழுது தமிழிலக்கிய விமர்சன வரலாற்றில் இப்பொழுது நிரப்பப்படாத ஒரு பகுதி நிறைவெய்தும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் — கார்த்திகேசு சிவத்தம்பி
யாழ்ப்பாணம்
21 - 11 - 1991

# முகவுரை

தமிழும் சைவமும் எமது இனத்தின் இரு கண்கள் போன்றவை. இவற்றில் எதை இழப்பினும் எம்மவர் வாழ்வு மங்கிவிடும். இவற்றைக் காக்கவும் வளர்க்கவும் தொண்டாற்றிய பெரியோர்களை நினைவு கூரல் மிக மிக அவசியமானது. அது எமது கடமையுங்கூட. அவ்வகையில் சைவத்திற்கும், தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றி, யாழ்ப்பாணத்திற்கே பெருமை தேடித் தந்த யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பலம் அவர்களை நாம் நினைவு கூரல் அவசியம்.

பல்வேறு ஊர்களில் நடக்கும் அறிஞர்களதும், ஞானியர்களதும் நினைவுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது, எமது ஊரில் வாழ்ந்து மறைந்த பல அறிஞர்களுக்கு ஏற்ற கௌரவத்தை வழங்கத் தவறிவிட்டோமே எனும் ஆதங்கம் ஏற்படுவது உண்டு.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் தலைமையாசிரியராக இருந்ததுடன் பல ஆங்கிலப் பாடநூல்களையும், சில சைவ நூல்களையும் எழுதிய திரு. வே. தா. சி. சிவகுருநாதன் சிறந்த சொற்பொழிவாளராகவும், எழுத்தாளராகவும், விமர்சகராகவும் விளங்கிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளரான கற்கண்டுப் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, ஐம்பதிற்கு மேற்பட்ட பாட நூல்களையும் பல கவிதை நூல்களையும் ஆக்கிய ஈழத்தின் ஆற்றல் மிக்க கவிஞர் யாழ்ப்பாணன் (திரு. வே. சிவக்கொழுந்து) போன்றோர் அவர்களிற் சிலர்.

இவ் வரிசையில் முக்கிய இடத்தைப் பெற வேண்டியவர் எமது ஊரான வியாபாரி மூலை தந்த ஆத்மஞானியாகிய அருளம்பல சுவாமிகள் ஆவர். ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முதன்மையான இடத்தைப் பெறுபவர் இவர். இவரது ஆத்மஞான மழையில் எமது ஊரவர்கள் மாத்திரம் ஊறித் திளைக்கவில்லை. தமிழ் நாட்டவர்களும் அவரது ஞான ஒளியில் கட்டுண்டு உய்தனர். உலகம் போற்றும் கவிஞனான மகாகவி பாரதியும் 'சங்கரன் எனக்கொண்டு' அவரைச் சரணடைந்தார். தனது ஞானகுருவாக ஏற்றுக்கொண்டார். 'யாழ்ப்பாணத்துச் சுவாமி' என்று அவரைப் புகழ்ந்து பாடியுள்ளார். 'யாழ்ப்பாணம்' என்ற சொல் பாரதியின் பாடல்களில் எடுத்தாளப் படுவதற்குக் காரணமாயிருந்த அருளம்பல சுவாமிகளுக்கு ஈழம் முழுவதுமே கடன்பட்டு நிற்கிறது.

சித்தராய், சித்திர வரைஞராய், கைவினைப் பொருள் கலைஞராய், கவிஞனாய், தத்துவஞானியாய் விளங்கிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகளாகிய அருளம்பல சுவாமிகளை ஈழத்தமிழினம் உரிய முறையில் கௌரவிக்கவில்லை.

அருளம்பல சுவாமிகளின் நினைவு மக்கள் நினைவில் என்றும் நிலைக்கவும், காலத்தால் மறக்கப்படாதிருக்கவும் அவரது வாழ்வும், பணிகளும் நூலுருவில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற உணர்வு எழுந்தது. இவ்விடயத்தில் ஒருமித்த கருத்தையுடைய ஆசிரியர் திரு. கி. சிவநேசனும் துடிப்புமிக்க இளைஞர் திரு. சு. சுரேஸ்குமாரும், நானும் இன்னும் சிலரும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபையூடாகச் செயற்பட்டோம்.

சுவாமிகள் மறைந்து ஐம்பது வருடங்களின் பின்னரே தகவல்களைச் சேகரிக்கப் புறப்பட்டோம். அவரது சீடர்களும் மறைந்து விட்டனர். தகவல்கள் அறிந்த ஊரவர் பலரும் பசுமைகளைத் தேடி இடம்பெயர்ந்து விட்டனர். போக்குவரத்துகளும் தொடர்புகளும் அறுந்துவிட்ட போர்ச் சூழல் இவற்றின் மத்தியிலும் பல புதிய தகவல்களையும், ஆதாரங்களையும், மறக்கப்பட்ட ஆவணங்களையும் தேடிச் சேகரித்தோம். ஆயினும் சுவாமிகள் பற்றிய தகவல்களைப் பூரணமாகப் பெறமுடியவில்லை என்பதும் உண்மையே. சுவாமிகளின் வாழ்க்கைச் செய்திகள், ஆக்கங்கள், கடிதங்கள், தகவல்கள் ஆகியவற்றைப் பேணி வைத்திருப்போர் எமக்கு உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

கிடைத்த தகவல்களையாவது நூலுருப் பெறச் செய்ய வேண்டும் என்ற எமது விருப்பத்திற்கு யாழ். பல்கலைக்கழகம் வேண்டிய ஒத்துழைப்பைத் தந்தமை குறிப்பிடத்தக்கது. அங்கு கூட்டிய ஒரு ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக மெய்யியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானகுமாரின் உதவியும் எமக்குக் கிடைத்தது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றி வெளிவந்த சகல ஆய்வுகளும், கட்டுரைகளும் திரு. பொ. சபாபதிப்பிள்ளை அவர்கள் 'ஸ்ரீலங்கா' ஏப்ரல் 1962 இதழில் எழுதிய கட்டுரையை அடிப்படையாக வைத்தே எழுந்தன.

ஆனால் கலாநிதி நா. ஞானகுமாரின் ஆக்கமோ, இன்றுவரை கிடைத்த அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியபோதும் ஒரு நடுநிலை ஆய்வாளனின் ஆக்கமாகவே அமைந்துள்ளது. எமக்குக் கிடைத்த நம்பிக்கைக்குரிய சில தகவல்களைக்கூட போதிய ஆதாரமற்றவை எனத் தனது ஆய்வின்போது ஒதுக்கியுள்ளமை அவர் மீது நாம் மேலும் நம்பிக்கை கொள்ள வைக்கிறது.

கலாநிதி ஞானகுமாரன் மிகுந்த ஈடுபாட்டுடனும், அக்கறையுடனும் கடினமாக உழைத்தார். தகவல்களை ஒழுங்குபடுத்தினார்,

தெளிவான ஆதாரங்களை முன்வைத்தார். புதிய சிந்தனைகளுக்கு இடமளித்தார். சிறந்ததோர் ஆய்வாக தெளிந்த முடிவுடன் கட்டுரை எழுதியுள்ளார். அவருக்கு எமது சபையின் நன்றிகள் என்றும் உண்டு.

பேராசிரியர் கா. சிவத்தம்பி என்றுமே எமக்கு நெருக்கமானவர். 1963 ம் ஆண்டில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் வியாபாரிமூலையில், பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பலம் அவர்களே என்பதை ஏற்றுப் பகிரங்கப்படுத்தி 07.05.63 அன்று நடாத்திய மகாநாட்டிலும் அது தொடர்பான நிகழ்வுகளிலும் முக்கிய பங்காற்றியவர். சுவாமிகளின் ஆக்கங்களும் வாழ்வும் பல கோணங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டும் எனப் பெரிதும் விரும்புபவர். ஓய்வு நேரமே அற்ற நிலையில் தமது உடல்நலக் குறையையும் பொருட்படுத்தாது தனது கருத்துக்களை முன்னுரையாகத் தந்துள்ளார். அவருக்கு எமது நன்றிகள்.

சுவாமிகளின் முக்கிய சீடர்களில் ஒருவராக வாழ்ந்து, சுவாமிகளின் சமாதி ஆலயத்திலும் அரும் சேவையாற்றியவர் தம்பசெட்டி பொ. சபாபதிப்பிள்ளை அவர்களாவர். அவரின் சேவை அளப்பரியது. பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமி என்ற கட்டுரையை ஸ்ரீலங்கா இதழில் எழுதியதோடு 'புற்றளைக்கரசே' எனும் தலைப்பில் சுவாமிகள் பற்றிய நூலையும் வெளியிட்டவராவார். அவர் பேணி வைத்திருந்த சுவாமிகள் பற்றிய தகவல்களை கேட்டதும் தந்துதவிய அவரின் மகள் திருமதி நீலலோஜனி நவரட்ணராசா அவர்கட்கு எம் நன்றிகள்.

சிவஞானப்பிரகாச சபையின் ஊடாக யாழ்ப்பாணத்துச் சுவாமிகளின் நினைவுகளைப் பேணி வைத்தவர் சுவாமிகளின் அடியார்களில் ஒருவராகிய அமரர் சொக்கநாதபிள்ளை அவர்கள் எமது தேவை அறிந்து எமக்குப் பலவழிகளிலும் உதவி வழங்கியவர் திருமதி சொக்கநாதபிள்ளை அவர்கட்கும் சபை என்றும் நன்றி கூறுகிறது.

சுவாமிகளின் தகவல்களைச் சேகரிக்கப் புறப்பட்டபோது, பல தடவையும் எமக்குச் செவ்வி தந்து, தமது தள்ளாத நூறு வயதிலும் எமக்கு உதவியவர் சுவாமிகளின் இளைய சகோதரியான திருமதி சின்னாச்சிப்பிள்ளை அவர்களோடு இணைந்து எமக்கு வேண்டிய தகவல்கள் தந்தவர் சுவாமியின் பேத்தியான திருமதி ம. திருநாவுக்கரசு அவர்கள்— இவர்கட்கும் எமது நன்றிகள்.

சுவாமிகளின் தாய்வழிப் பிறப்பிடமான வதிரியை தமது வதிவிடமாகக் கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆ. துரைராசா எமக்கு சிறந்ததோர் வாழ்த்துரையைத் தந்துள்ளார்கள். அவருக்கும் எமது நன்றிகள்.

காலத்தால் நலிவுற்ற சுவாமிகளின் நூல்களை, போட்டோ பிரதி நூல்களாக்கி தமது நூலகத்தின் சுவடிகள் காப்பகத்தில் பேணி வைத்துள்ளார்கள் யாழ். பல்கலைக்கழகத்தினர். இதன் மூலம் அருளம்பல சுவாமிகள் பற்றி ஆய முற்படும் எவர்க்கும் அவை கிடைக்க வாய்ப்பளித்துள்ளனர். அவர்களுக்கு எமது நன்றிகள். யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் விடயத்தில் யாழ். பல்கலைக்கழகம் இன்னமும் நிறைய பங்களிப்பைச் செய்யவேண்டியுள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் சுவாமிகளின் ஆக்கங்கள், அவரது தத்துவச் சிந்தனைகள், சித்தர் மரபில் அவருக்குரிய இடம் ஆகியவற்றில் ஆய்வுகள் செய்வதுடன் இன்னமும் அச்சேறாது இருக்கும் சுவாமிகளின் நூல்களை வெளியீடு செய்யவும் யாழ். பல்கலைக்கழகம் முன் வரவேண்டும்.

அருளம்பல சுவாமிகளின் பெருமையைப் பார் புகழப் பரப்ப வேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்டு அயராது உழைப்பவர் எமது செயலாளர் திரு. கு சிவநேசன் அவர்கள். அவர் செயலாளராக அமைந்ததில் சபையின் தலைவர் என்ற எனது பணி மிக இலகுவாயிற்று; அவருக்கு எம் நன்றிகள்.

எமது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பும் உதவியும் தந்தவர்கள் பலராவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றி கூற முடியாத போதும், எமது நன்றிகள் என்றும் உரியது.

தகவல்கள் சேகரிப்பின் போதும், நூல் வெளியீட்டு நிதி சேகரிப்பின் போதும் நூற்பதிப்பின் போதும் எமக்குப் பெரிதும் உதவிய திரு. சுரேஸ்குமார், திரு. க. ஈஸ்வரபாதம் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

இந்நூலை அழகுடன் அச்சிட்டுத் தந்த குமரன் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்.

தமது சமாதி ஆலயத்தில் இருந்து எமது பணிக்கு அருளாசி தந்து வரும் அருளம்பல சுவாமிகளின் திருவருள் அனைவர்க்கும் கிடைக்கும் என்பது நிச்சயம்.

நன்றி:

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபை
வியாபாரி மூலை
பருத்தித்துறை
01.02.92

எம். கே. முருகானந்தன்

# நூலாசிரியருரை

யாழ்ப்பாணத்தில் எண்ணிறைந்த ஞானிகள் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்களைப்பற்றி ஆழமான வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது எம் முன்னோர்களின் ஆத்மீக மேம்பாட்டை உணர்வதற்கு வழிவகுக்கும். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஞானிகள் பற்றி ஆராயும் வாய்ப்பு சமீபத்தில் ஏற்பட்டது. அதன் மூலம் வியாபாரி மூலையைச் சேர்ந்த அருளம்பல சுவாமிகளைப் பற்றி ஆழமாக அறியும் சந்தர்ப்பம் கிட்டியது. கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு ஆராய்கையில் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சாமி இவ்வருளம்பல சுவாமிகளே என்பது தெளிவாயிற்று.

அருளம்பல சுவாமிகள் பற்றிய செய்திகள் பெரிதும் இலை மறை காயாகவே இருந்து வந்துள்ளது. இந்நிலையில் 'பாரதி போற்றிய அருளம்பலசுவாமிகள்' எனும் இவ்வாக்கம் சுவாமிகளை ஆய்வுலகிற்கு எடுத்தாளுவதுடன் இவரே பாரதியால் போற்றப்பட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என்பதனையும் தெளிவாக்குகிறது. இவ்வாக்கம் அருளம்பல சுவாமிகள் பற்றிய ஆய்வின் முதற்கட்டமாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாக்கத்தை எழுத்தில் கொண்டுவந்தபோது அதனை அச்சேற்றுவதில் தளராத ஊக்கத்துடன் முகவுரை எழுதிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் அவர்கள் எமது மனமார்ந்த நன்றிக்கும் அன்புக்கும் உரியவராவர். இந்நூல் ஆக்கம் பெறுவதற்குப் பலர் பல வழிகளில் உதவி புரிந்துள்ளனர். சுவாமிகளின் நூல்கள், கடிதங்கள் மற்றும் பயனுடைய பலவற்றையும் அவ்வப்போது தந்துதவியதுடன் பலரைப் பேட்டி காண்பதற்கும் ஒத்துழைப்பு அளித்த யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபைச் செயலாளர் திரு. கி. சிவநேசன் அவர்களும் நன்றிக்குரியவராவார். இவ்வாக்கத்தை ஆரம்பத்தில் தட்டச்சில் பொறித்துதவிய செல்வி இந்திரா இராசேந்திரத்துக்கும் எமது நன்றிகள்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களும் எமது அன்புக் கரிசனைக்குரியவராவார். இந்நூலுக்கு குறிப்புரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கும் எமது நன்றிகள். மேலும் இந்நூல் செழுமை பெற இவ்வாக்கத்தை நோக்கி அரிய பல ஆலோசனைகளை மனமுவந்து நல்கிய யாழ்ப்பாணத்துப் பல்கலைக் கழக மொழியியற் பேராசிரியர் சு. சுசீந்திரராஜா அவர்களும் எமது அன்பார்ந்த நன்றிக்குரியவராவார்.

நா. ஞானகுமாரன்

# பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்

## யாழ்ப்பாணத்து ஞானிகள்

இந்து மதம் செழித்து விளங்கும் பாரத நாட்டில் ஞானிகள், சுவாமிகள், சித்தர்கள் எனப் பலர் வாழ்ந்து ஆன்மீக வாழ்விற்கு மக்களை அருட்டுகின்ற வகையில் அரிய பல சேவைகள் செய்துள்ளனர்.[1] அவ்வாறே யாழ்ப்பாணத்திலும் காலத்திற்குக் காலம் பல ஞானிகள் வாழ்ந்து மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிகாட்டியமைக்கு ஆதாரம் உண்டு. இவர்களுள் பெரும்பாலானவர்கள் இந்தியத் தொடர்பினை ஏதோ ஒரு வகையில் கொண்டு விளங்கினர். சிலர் இங்கிருந்து இந்தியா சென்று நீண்டகாலம் வாழ்ந்திருக்கின்றார்கள்.[2] இன்னும் சிலர் இந்தியாவில் தங்கி நீண்டகாலம் வாழாவிடினும் தலயாத்திரையாகக் காசி, சிதம்பரம் போலப் பலவிடங்களைத் தரிசித்து வந்துள்ளனர்.[3] தமிழ்நாட்டுச் சுவாமிகள் சிலர் அங்கிருந்து இலங்கை வந்தும் வாழ்ந்திருக்கின்றார்கள்.[4] அல்வாய் வடக்கு, வியாபாரி மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகள் இங்கிருந்து இந்தியா சென்று பல ஆண்டுகள் அங்கு வாழ்ந்து ஆன்மீக விருத்தி பெற்றுத் திரும்பிய ஒருவராவர்.

## அருளம்பல சுவாமிகள் பற்றி அறிஞர் கொண்ட ஆர்வம்

இலங்கையில் வாழ்ந்த ஞானிகள் பற்றிய செய்திகளைத் தரும் குறிப்பிடத்தகும் நூல்கள் இரண்டு உள. ஒன்று ஈழத்துச் சித்தர்கள் எனும் நூல்; மற்றது ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து எனும் நூலாகும். இவற்றில் வியாபாரி மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகள் பற்றிய செய்திகள் எதனையும் காணோம்.[5]

அருளம்பல சுவாமிகள் பற்றி முதன்முதல் எழுதியவர் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை என்பவராவர். பாரதியினால் புகழ்ந்து பாடப்பெற்ற யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் யார் எனும் வினாவினை அ. ந. கந்தசாமி என்பவர் ஆகஸ்ட் 1961 ஸ்ரீ லங்காவில் ஞானம் வளர்த்த புதுவை எனும் கட்டுரையில் எழுப்பியிருந்தார்.[6] யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் யார் என எழுந்த அவ்வினாவிற்கு விடை அளிக்கும் முகமாகக் காலஞ்சென்ற பொ. சபாபதிப்பிள்ளை என்பவர் சித்திரை, 1962 ஸ்ரீ லங்காவில் பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமி எனும் கட்டுரையை வெளியிட்டார்.[7] அக்கட்டுரையே அருளம்பல சுவாமிகள் பற்றிய செய்திகளை முதன் முதலாக வெளிக்கொணர்ந்தது. அக்கட்டுரை மூலம் வியாபாரி

மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளே பாரதியின் ஞானகுரு வான யாழ்ப்பாணத்துச் சாமி எனக் கொள்வதுடன் அதனில் அரு ளம்பல சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும் ஓரளவு சுருக்கமா கத் தந்துள்ளார்.

இதனை அடுத்து அருளம்பலசுவாமிகளே யாழ்ப்பாணத்துச்சுவாமி என இனங்கண்ட வகையில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங் கத்தினர் 07.05.1963 ல் வியாபாரி மூலையில் ஒரு விழா எடுத்தனர். இவ்விழாவில் அன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரி வுரையாளராக இருந்த கைலாசபதி அவர்கள், சிவத்தம்பி அவர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.[8] இவ்விழாவை ஒட்டி அன்றைய தினகரன் பத்திரிகையில் (07.05.63) யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் நினைவிதழ் என ஒன்றும் வெளியாகியது. அம்மலர் சுவாமிகள் பற்றிய செய்திகளைக் காத்திரமான முறையில் தர முற்படவில்லை என்றே கூறவேண்டும். அருளம்பல சுவாமிகளின் படத்தினை அட் டையில் தாங்கிய வண்ணம், 15.5.63 இல் வெளிவந்த 'ஆத்மஜோதி' இதழ் ''பாரதியாரின் ஞானகுரு, யாழ்ப்பாணத்துச் சாமி அருளம் பலம்'' என்ற வாசகத்தோடு வெளிவந்திருந்தது.[9] இம் மலரில் பாரதி அறுபத்தாறு (40, 41, 42) பாடல்களும் மலராசிரியர் க. இராமச் சந்திரனின் பாரதி யார்? கட்டுரையும் சபாபதிப்பிள்ளையின் பாரதி யின் ஞானகுரு கட்டுரையும் யாழ்ப்பாணனின் பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சாமி அருளம்பலம் எனும் பாடல்களும் வெளிவந் திருந்தன. சபாபதிப்பிள்ளையின் கட்டுரை ஸ்ரீ லங்காவில் முன்னர் சொல்லப்பட்ட கட்டுரையின் மறுபதிப்பேயாகும். இராமச்சந்திர னின் கட்டுரையும் யாழ்ப்பாணனின் நான்கு பாடல்களும் அருளம் பலசுவாமிகள் தான் பாரதியார் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துச் சாமி என அறிந்து கொள்வதற்கு வேண்டிய தக்க செய்திகளைத் தர வில்லை. இது போலவே பரசுராமமூர்த்தி, ஞானபாஸ்கரன், அம்பி கைபாகன் போன்றவர்களின் கட்டுரைகளும் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் யார் என்பதற்கான ஆதாரத்தைத் தர வில்லை. இவை பற்றிப் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவா மிகள் எனும் தலைப்பில் (ஆ) பின்னர் விரிவாகக் காணலாம். இவ் வாறு அருளம்பல சுவாமிகளை ஆய்வுமூலம் கண்டறிய முற்பட்ட வர் மிகச் சிலரே. இன்றுவரை அருளம்பல சுவாமிகள் வாழ்க்கை வரலாறு, ஆக்கிய நூல்கள், நூற்சிறப்புக்கள், சிந்தனை, ஆன்மீக மேம்பாடு போன்றவற்றைப் பற்றிச் செம்மையாக அறியாது இருக் கின்றோம்.

## ஆய்வின் நோக்கு

அருளம்பல சுவாமியை ஆராய்ந்து அறிவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வு இரு பகுதிகளாக அமைகின்றது. முதற் பகுதியான இக்கட்டுரை பின்வரும் மூன்று அம்சங்களை ஆராய்வு தாகும்;

அ. அருளம்பல சுவாமிகளின் வாழ்க்கை.
ஆ. பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள்.
இ. அருளம்பல சுவாமிகளின் நூல் விபரங்களும் நூற் பொருண்மையும்.

இரண்டாவது பகுதி சுவாமிகளின் ஆத்மீக சிந்தனை, சிந்தனை வளர்ச்சி, ஆளுமை, தாக்கம் போன்றவற்றைச் சற்று நுட்பமாக, விரிவாக ஆராய்வதாகும்.

ஆய்வு ஆதாரங்கள்:

அருளம்பல சுவாமிகள் மறைந்து நாற்பத்தொன்பது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இன்று அவரைப் பற்றி ஆராயும்போது அவர் எழுதிய பதினொன்கு நூல்கள் பயன்படுகின்றன. அந்நூல்கள் அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி, கற்புநிலை, அநாதிபோதம் சங்கவினாவிடை, சைவவினாவிடை, தர்க்க சாஸ்திரம், அருவாச தேவஆரம், சிவதரிசி, நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம், நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல், கற்புநிலைச் சுருக்கம் பழைய வேற்பாட்டுடன் படிக்கை, ஆதிபுராணம், ஆதிநீதி என்பனவாகும். இந்நூல்களில் சுவாமிகள் எழுதிய முகவுரை, அறிவிப்பு, அறிக்கை போன்றனவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவரால் எழுதப் பெற்ற உரைநடை, பாடல்கள் போன்றவையும் அவர் பற்றிய பலதரப்பட்ட செய்திகள் பெறுவதற்குப் பயன்படுகின்றன. மேலும் சுவாமிகளால் காலத்துக்கு காலம் பிரசுரிக்கப் பெற்ற துண்டுப் பிரசுரங்கள், அன்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அச்சிலேறாத கையெழுத்துப் பிரதிகள் போன்றனவும் பயன்படுகின்றன.

இவற்றைவிட சுவாமிகள் வாழ்ந்த வியாபாரி மூலை மக்களிடமிருந்தும் வதிரியில் வாழும் சுவாமிகளின் உற்றார் உறவினர்களிடமிருந்தும் பெறப்பட்ட செய்திகளும் இவ்வாய்வில் பயன்பட்டுள்ளன

ஆய்வில் எழும் சிக்கல்கள்

சுவாமிகளை ஆராய முற்படும் போது சில சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அருளம்பல சுவாமிகள் ஆய்விலே புறக்கணிக்கப்பட்ட ஒருவராக இருந்துள்ளார் என்பதை முன்னர் ஓரளவு சுட்டிக் காட்டினோம். அன்றோ பின்னரோ சிந்திக்கப்படாத ஒருவரை இன்று சிந்திப்பதென்றால் புதிய புதிய சிக்கல்கள் எழுவது இயல்பே.

அருளம்பல சுவாமிகள் பற்றி அவரது உறவினர்களும் ஊர் மக்களும் பல வாய்வழிச் செய்திகளைக் கூறுகின்றனர். அவற்றை முழு

மையாகக் கொள்ளுவதோ தள்ளுவதோ சிக்கலாக உள்ளது. உண்மை இருக்கலாம், இல்லாமற் போகலாம். சுவாமிகளின் சகோதரி சின்னப்பிள்ளையவர்கள் சமீப காலத்திலேயே காலமானார். அவர்கள் உயிரோடு இருந்த போதிலும் நீண்ட காலமாக உடல்நலக் குறைவுடன் இருந்தமையால் அவரிடமிருந்து அதிக அளவில் செய்திகளைப் பெறமுடியாது போயிற்று. எனினும் வருங்கால ஆய்வின் பொருட்டு இவற்றினைச் சுருக்கமாகக் குறித்து வைப்பது பயனுள்ளதாகும்.

அருளம்பல சுவாமிகள் பற்றி எழுதியவர் மிகச் சிலரே எனக் கண்டோம். அவர்கள் எழுத்துக்களிலும் சிக்கல்கள் உள. உதாரணமாக சுவாமிகளில் தீராத அன்பும் மதிப்பும் கொண்ட பக்தர்களில் ஒருவராகிய சபாபதிப்பிள்ளை எழுதிய 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச்சாமி' எனும் கட்டுரையில் படிப்பில்லாத மூடனாக பாடத் தெரியாத நிலையில் இருந்த தனக்குச் சுவாமிகள் பாடும்படி பணித்து, 'தத்துவம் தொண்ணூற்றாறு' எனும் அடிகளை எடுத்துத் தந்ததாகவும் தாம் பாடல்கள் பல பாடியதாகவும் கூறுகின்றார். ஆனால் இக் கூற்றுக்கு ஆதாரமாக அவ்வாறு தொடங்கும் பாடல் எதனையும் அருளம்பலம் சுவாமிகளைப் புகழ்ந்து பாடிய மூன்று பாடல்களினுள்ளும் காணப்படாதது அவரது கருத்தினையே ஐயப்பட வைக்கின்றது.[10] மேலும் இக்கட்டுரையாசிரியர் பிறிதொரு இடத்தில் தாம் சுவாமியை 1939, 1940ம் ஆண்டுகளில் தரிசிக்க நாகபட்டணம் போனபோது "நிஷ்டையில் கிடந்த ஆண்டுகள், நிஷ்டையில் எழும்பி அவர் இருந்த இடங்கள், ஒவ்வொரு இடத்திலும் இருந்த காலங்கள் இன்னும் இதர விபரங்களையும் சுவாமியிடத்தில் நேரே விசாரித்து அறிந்திருக்கலாம். ஆனால் விஷயங்களை ஆராய்ச்சி செய்வதில் அக்கறை எனக்கு அன்றுமில்லை இன்றுமில்லை எனச் சுட்டுகின்றமை அவரது மனப்பாங்கை எமக்கு தெளிவாகக் காட்டுகின்றது.[11] முற்போக்கு எழுத்தாளர் எக்காரணங்களுக்காக அருளம்பலசுவாமிகளே பாரதியாரால் போற்றப்பட்ட யாழ்ப்பாணத்துச்சாமி எனக் கொண்டனர் எனத் தெரியவில்லை. இந்து கலைக் களஞ்சியம் கொண்ட முடிவும் எதனடிப்படையில் எனத் தெரியவில்லை. அடிப்படை காட்டாது கொள்கின்ற முடிவுகள் அறிவியல் ரீதியில் ஆராயப்புகுவோர்க்குச் சிக்கலாகவே அமைகின்றன. அருளம்பல சுவாமிகள் தானா பாரதியால் குறிப்பிடும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என்பதைக் கண்டறிவதற்கு தமிழ்நாட்டுச் சான்றுகளைப் பெறுவது இக்காலச் சூழலில் சாத்தியமான தொன்றாக இல்லை. தமிழகத்தில் சான்றுகள் கிடைக்கக் கூடும் என்பதனை நினைவில் கொள்வோம். இங்கு நமக்கு கிடைக்கப் பெற்றவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராய்வோம்.

# அ: அருளம்பலசுவாமிகளின் வாழ்க்கை

## பிறப்பு

அருளம்பல சுவாமிகள் வேலுப்பிள்ளை, இலட்சுமி அம்மாள் ஆகியோரின் புதல்வராவர். வேலுப்பிள்ளை, வியாபாரி மூலையைச் சேர்ந்தவர். இலட்சுமி அம்மாள் வதிரியைச் சேர்ந்தவர். வேலுப்பிள்ளை தமது முதற்தார மனைவி செல்வம் இறந்த பின்னர் இலட்சுமியை இரண்டாம் தாரமாக மணம்புரிந்தவர். அருளம்பல சுவாமிகளுடன் கூடப்பிறந்த சகோதரி பொன்னாச்சி என்பவராவர். அருளம்பலம் சிறுவனாக இருக்கும்போதே தந்தை வேலுப்பிள்ளை இறந்துவிட்டார். இலட்சுமி அம்மாள் இரண்டாந்தாரமாக வதிரியில் வதித்த வாரித்தம்பி என்பவரை மணஞ் செய்து சின்னப்பிள்ளை அன்னப்பிள்ளை எனும் இரு பெண் மக்களைப் பெற்றெடுத்தார். அன்னப்பிள்ளை முன்னர் இறந்துவிட்டார். சின்னப்பிள்ளை சமீபத்தில் தான் இறந்தார்.

## பிறந்த தினம்

சுவாமி அருளம்பலம் அவர்களுடைய பிறந்த தினத்தினை இது தான் எனத்திட்டவட்டமாகச் சுட்டக் கூடிய சான்றுகள் எதுவும் இல்லாவிடினும் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெறப்பட்ட அக்காலத்துச் சேர்வுடாப்பு சுவாமி ஏறத்தாழ 1880 ம் ஆண்டில் பிறந்தார் என்பதனை உறுதி செய்கின்றது.. அதில் 01.08.1890 இல் வயது பத்து எனக் குறிப்பிட்டுள்ளது,

1927ம் ஆண்டு ஆடி மாதத்தில் அச்சிடப்பெற்ற 'அருவாச தேவ ஆரத்தின்' முகவுரையில் சுவாமிகள் ''எனக்கு இப்போ ஏறக்குறைய 45 வயதாகிறது'' எனக்கூறுவதைக் கொண்டும்,[12] 1926 ம் ஆண்டு கார்த்திகையில் வெளியிடப்பட்ட கற்புநிலை நூலில் சுவாமிகள். ''இப்போ ஏறத்தாழ 45 வருடங்களுக்கு முன் அண்டப் பூட்டிற்கும் எனக்கும் கொடுக்கப்பட்ட பாசம் அறுந்து விட்டது'' எனக் கூறுவதைக் கொண்டும்,[13] பார்க்கும் போது அவர் 1880ம் ஆண்டில் பிறந்தார் என்பது பெரிதும் பொருந்துவது போல அமைகிறது. அருவாச தேவ ஆரம்' 1927ம் ஆண்டு அச்சிடப்பெற்றாலும் வெளியிடப்பெறுவதற்கு ஒருசில காலம் முற்படவே அந்நூல் எழுதப்பெற்றிருக்கும் சாத்தியத்தினை அந்நூல் முகவுரை மூலம் ஊகிக்க முடிவதால் சுவாமிகள் பிறந்த ஆண்டு 1880 எனக் கொள்வது பொருத்தமானதாகலாம்.

தந்தை சின்னையா வேலுப்பிள்ளை அவர்கள் மீதும் தாயார் இலட்சுமிப்பிள்ளையவர்கள் மீதும் பாடப்பெற்று சுவாமிகளின் படத்துடன் வெளிவந்துள்ள தோத்திரத்துண்டுப் பிரசுரத்தின் மூலம் சுவாமிகள் சித்திரை மாதத்தில் பிறந்தார் என்பது அறியக்கூடியதாகும்.[14] அத்துடன் பிரசுரமாகாத கையெழுத்துப் பிரதி ஒன்றின் மூலம் சுவாமிகள் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தார் என்பதும் அறியலாம்.[15] ஆதலால் சுவாமிகளின் பிறப்பு 1880ம் ஆண்டு சித்திரை மாதத்து ரேவதி நட்சத்திரத்தன்று எனக் கொள்ளலாம். 1880ம் விக்கிரம ஆண்டுப் பஞ்சாங்கத்தின்படி இத்தினம் 07.05.1880 என அமைவதால் இத்தினமே அருளம்பல சுவாமிகள் பிறந்த தினமாகக் கொள்ளக் கூடியதாகும்.[16]

## கல்வி

வீட்டுச் சூழ்நிலை காரணமாக இளம் பிராயத்திலிருந்தே அருளம்பலம் பாட்டியார் (தந்தையின் தாயார்) காளியம்மையின் ஆதரவில் வியாபாரிமூலையில் வளர்ந்தார். இவரது ஆரம்பக் கல்வி எங்கு ஆரம்பித்தது என்பது தெளிவில்லாவிடினும் பத்துவயதில், 1.8.1890ல் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் சேர்ந்து 23.10.1894 வரை நான்காண்டுகள் படித்தார் என்பது தெளிவு.[17] மேலும் சுவாமிகள் தமது நூலொன்றில் தம்பசிட்டிப் பள்ளிக்கூடத்தில் படித்தமையைச் சுட்டுவதினின்று மேற்படி பாடசாலையிலேயே அவர் படித்தார் என்பது உறுதியாகிறது.[18] மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையே முன்னாள் தம்பசிட்டிப் பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்டதாகும். சுவாமி அருளம்பலம் அவர்கள் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும்போது சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை அங்கு 1893 ம் ஆண்டுவரை ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.[19] படிக்கின்ற காலத்தில் சுவாமிகளுக்குக் கதிரவேற்பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பிருந்தமை ஊரவர்களால் கூறப்படுகின்றது. பாடசாலையிலிருந்து விலகுவதற்குக் காரணம் 'பிறலூர்' எனப் பாடசாலையில் உள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனினும் அருவாசக தேவ ஆரத்தின் முகவுரையில் சுவாமிகள் ''தனது நடைவழிக்கு அந்நாளைய கல்வி நடப்பு ஒத்துவராததால் அது தன்னில் ஏறவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளமையும் அப்போது பள்ளிக்கூடத்தை மதித்துப் போகாது விடுவதானேன்'' எனக் குறிப்பிட்டுள்ளமையும் கருதத்தக்கமையாகும்.[20] பெரும்பாலும் இந்நிலையினால்தான் ஐந்தாம் வகுப்புச் சித்தி எய்திய நிலையில் சுவாமிகள் பாடசாலைக் கல்வி

யில் நாட்டமின்றி வெளியேறினார் என எண்ணத் தூண்டுகிறது. இத்துடன் பிறவூர் (கம்பளை) செல்வதும் காரணமாயிருந்திருக்கலாம்.

அருளம்பல சுவாமிகளின் பள்ளிக்கூடக் கல்வி பாரதியைப் போல ஐந்தாம் வகுப்பு வரையே அமைந்திருந்தாலும் அவர் பின்பு பல நூல்களைக் கற்றுணர்ந்தமையை ஊகிக்கமுடிகின்றது. கைவசம் கிடைத்த நூல்களூடாக நோக்கும் போதே பல பாடல்களைப் பாடிய புலமையினைச் சுவாமிகள் கொண்டிருந்தார் என்பது தெளிவாகும். 'அருளம்பலம் சந்தேக நிவர்த்தி'யில் வருகின்ற பாடல்கள் கருத்துக்களூடாக அவர் இராமாயணம், பாரதம், புராணங்கள், திருமந்திரம், அருணகிரிநாதர் பாடல்கள், பட்டினத்தடிகள் பாடல்கள், தேவாரப் பாடல்கள், திருக்குறள், சித்தர் பாடல்கள், சித்தாந்த சாஸ்திரங்கள், வேதாந்த நூல்கள் போன்றனவற்றில் பரிச்சயம் பெற்றிருந்தமை புலனாகின்றது. இதனைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

கல்வியானது மெய்யுணர்வினை உடைய இறைவனது தாள்களைப் பணிகின்ற தன்மையைத் தராவிடின் அந்தக் கல்வியினால் ஏதும் பயனில்லை என்ற கருத்தினைப் பொய்யா மொழிப்புலவன்,

''கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'' 21

என அழகுற எடுத்துரைத்தான். கல்வியானது இறைவனது உண்மையினை எடுத்தியம்பும் வகையில் அமைய வேண்டுமென எண்ணங் கொண்ட அருளம்பல சுவாமிகள் வள்ளுவரின் மேற்கூறிய கருத்தினையே மேலும் விரிவுபடுத்தி நிற்கின்றமையைக் காணலாம். கல்வியின் பயனால் இறைவன் தாள்களை வணங்குவதுடன் அவ்விறைவன் யாரென அமையும் தத்துவ விசாரத்தினைத் தருவதாக அமைய வேண்டி,

''கற்றதனா லாயபயன் கணித்துநிற்கும் வாலறிவு
நற்றாளைத் தொழுவதெனின் நற்றாள்யார் வாலறிவார்''22

எனக் கூறும் வகையில் குறளைக் கற்று விளக்கம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அருளம்பல சுவாமிகள் '' எழுத்து, இலக்கணம், நிகண்டு, இலக்கியம் என்பன தாம் கற்றறிந்ததல்ல'' என ஏற்கின்ற போதிலும் ''பொய்யுலகை நடப்பைக் கைக்கொண்டு நடக்கப் புகுந்தவர்கள் தங்கள் நடப்புக்கேற்ற வழியாக பல சாத்திரங்களையும் செய்திருக்

கலாம். ஆகையால் அவை எனது நடைவழிக்கு ஒத்துவராததால் நானும் எனது நடைக்கு ஏற்ற வகையில் நூல் செய்தேன் எனக் கூறுகின்றார். 23 ''இறையனாரகப் பொருள் போன்ற நூல் ஞான முடிவான நூலாயிருக்கலாம் என எண்ணி எடுத்து விரித்துப் பார்த்த போது அதில் எழுத்துக்களைப் பியத்துப் பிடுங்கி அடுத்துத் தொடுத் திருந்ததால் அது எனக்குக் கற்றுக் கொள்ளச் சுகப்படவில்லை, ஆன தால் விட்டுவிட்டேன்'' எனக் குறிப்பிட்டுள்ளமையும் காணலாம். 24 இதிலிருந்து இறையனாரகப் பொருள் போன்ற நூல்களைத் தனது சொந்த முயற்சியிலேயே கற்க முற்பட்டாரென்பது பெறக்கூடிய தாகும். இவ்வாறே இதர நூலறிவினையும் பெற்றிருக்கலாம் எனக் கொள்வது பொருத்தமாகும்.

## தொழில்

அருளம்பலம் தமது இளமையில் இன்னல் பலவற்றை எதிர் கொள்ள வேண்டி இருந்தது. இவரது பாட்டியார் காளியம்மையும் செல்வச் செழிப்போடு இருந்தாரில்லை. இளமைக்காலத்தில் விவ சாயம் செய்வதற்கும் வாணம், மத்தாப்பு போன்ற சிறுதொழில் செய்வதற்கும் பிறருக்கு உதவியாய் இருந்தார். 25 கம்பளையில் வாழ்ந்த தமது உறவினர் பரமுப்பிள்ளையின் பலசரக்குக் கடையில் சிறிது காலம் வேலை செய்தார். சிலகாலத்தின் பின்னர் கம்ப ளையை விட்டு வியாபாரி மூலைக்குத் திரும்பி வந்தார். கடையில் பெற்றிருந்த அனுபவத்தினால் தனியாக ஒரு கடை வைத்துத் தொழில் செய்ய விரும்பினார்; இதன் நிமித்தம் தமது சொத்துக் களை ஈடுவைத்தும் விற்றும் மட்டக்களப்பில் புகையிலை வியாபா ரம் செய்தார். ஆனால் சுவாமிகள் எதிர்பார்த்த வகையில் தொழில் வளர்ச்சியடையாது வீழ்ச்சியடையவே பெரும் ஏமாற்றத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளானார்.

## இறை நாட்டம்

அருளம்பலம் தொழில் முயற்சிகளினால் ஏமாற்றமடைந்த வேளை நோயினாலும் பீடிக்கப்பட்டுத் துன்புற்றிருந்தமையை அவ ரது பாடல்கள் மூலம் அறிகின்றோம்.

> '' கட்டபணி காரமெல்லாம் சுமையாக வந்திறங்க
> மட்டக் கிழப்பதனில் வாங்கியபுண் ணென்றாரே ''

என நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சலிலும். [26]

"...நோய் கொண்டே தேக மெங்கும்
மான்படு புள்ளி போல வடுக்
கொண்டே வருத்த முற்றேன்" [27] எனவும்

"என்னரசே நான் படும்பாட்டை யார்க்குரைப்பேன்
யார்க்குரைப்பேன்
மின்னலான தேகத்துள்வெந்து துள்ளி யாடுகின்றேன்
இன்னலினைத் தீர்த்தென்னை யிச்சிறைச்சா லையில்நின்று
பின்னலற நின்கருணைப் பேர்நோக்காற் பிரிப்பாயே"

எனவும் அருவாச தேவ ஆரத்திலும் சுவாமிகள் குறிப்பிட்டார். [28]

துன்பச் சுமையின் காரணமாகவே சுவாமிகளின் மனம் அதிகம் ஆன்மீக நாட்டத்தில் மூழ்கியதென் எண்ணக்கூடியதாக உள்ளது. அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது போல அனைத்துச் செயல்களுக்கும் இறைவனே காரண கர்த்தா என்பதனை உணர்ந் தார். எல்லாச் செயலும் இறைவனது செயலாக நோக்க முற்பட் டார். இந்நிலையினை,

"எச்செயலும் நீ செய்கின்றாய் எனைக் குற்றம் செய்ததென் றாய்" எனச் சீவதரிசியிலும், [22]

"எல்லாம் கடவுள்செய லெப்படியாய் நடக்குதம்மா" என நீலலோசனி அம்மை ஊஞ்சலிலும், [30] அழகாகக் குறிப்பிடுகின்றார். மேலும்,

"வஞ்சகமும் நோய்பேய்களும் வந்ததுன் றன் செயலினாலோ
மிஞ்சுதலாய் வேறோர்செய்த மிகையாதனா லுதித்திட்டதோ"

எனத் தீமையான செயல்களுக்கும் இறைவனே பொறுப்பானவன் என எடுத்தாள முற்படுவதும் நோக்கத்தக்கதாகும். [31]

தொழில் முயற்சிகளின் பிற்பட, முப்பது வயதுக்குட்பட்ட காலப்பகுதியில் சுவாமிகளின் உலகியல் நாட்டம் இறையியல் நாட்ட மாக நன்கு மலரத் தொடங்கியது. உள்ளூர் ஆலயங்களை வழிபட் டது மன்றி கதிர்காமம், திருக்கேதீஸ்வரம், திருகோணமலை போன்ற தலங்களுக்குச் சென்று தரிசித்துள்ளார். வியாபாரி மூலையில் உறவி னர் ஒருவரின் வீட்டு முற்றத்தில் சில கோலங்கள் வரைந்து பூக் கொண்டு தினமும் பூசைசெய்து வழிபட்டமையையும் அயலவர்கள் பலரும் அவருக்குப் பூக்கொய்து கொடுப்பது வழக்கமாய் இருந்தமையை யும் வாய்வழிச் செய்தியாக அறிகின்றோம். [32]

மேலும்,

"பூசை யநேகம் செய்தேன் புண்ணியா வுன்னவுக்குத்
தேசைச் செய் வயித்தியத்தின் திறம் கண்ட கூலியீவாய்"
எனவும் [33]

"தலமெல்லாம் சுற்றியாடித்
தாள்வலி கொண்டலைந்தேன்
நிலமெல்லாம் மெழுகிப்பூசை
நிவேதனம் படைத்துநின்றேன்
கலமெனக் காட்டும்யோகக்
கடுநடை கொண்டேயேங்கி
உலகெங்கு பழிப்பதாக
வுன்மத்த னயானலைந்தேன்" எனவும் [34]

"வான்படு முனதுசேவை வழிநடைப் படிநடந்தேன்
ஏன்பட்டே னிந்தப்பாட்டை இறையவா விளம்புவாயே"

எனவும் [35] சுவாமிகள் பலவாறாகப் பாடுவது அவரின் இறை பூசை, தலயாத்திரை போன்றவற்றை உறுதி செய்வதாக உள்ளது. சுவாமிகள் இறைநாட்டத்தில் ஒன்றி உலக வாழ்வினின்றும் துறவு வாழ்வினை நாடி நின்றார்.

"ஐந்துவய துதொடங்கி யையாறு வயதுவரை
பந்தமெனக் கும்பிட்டேன் பரமசிவனோர் பெண்தரலை"

எனக் கூறுகின்றார். [36] இந்த அடிகள் மூப்பது வயது வரை இறைவனைப் பக்தி சிரத்தையோடு பரவிய தன்மையினை எடுத்துக் காட்டுவதுடன் தமக்கு இல்லறவாழ்வை இறைவனே தரவில்லை என நையாண்டியாகச் சுட்டுவதனையும் உணரலாம். இதனையே பிறிதோரிடத்தில்,

"மங்கையாள் பாகமென்றும் மதிச்சடையோர் பெண்ணென்றும்
சங்கையா யுள்ளதென்ற சங்கர மூர்த்தியாரே
பாங்காக வுலகருக்குப் பதியானை நீக்கு மென்னப்
பொங்கவே வுரைத்த வுன்றன் புதுமையே தாகுமையா"

எனக் கிண்டல் செய்வது போலக் கூறுவதும் காணலாம். [37]

## ஆன்மீகத்தில் சுவாமிகள் நிலை

இறை நாட்டம் கொண்டிருந்த சுவாமிகள் தமது புலன்களை அடக்கியாள முற்பட்ட வேளை தாம் பட்ட துயரத்தினைத் தெளிவாகச் சுட்டுகின்றார்.

" சிதம்பரத்திற் தரிசனம்நேர் செய்யச்சொன்னா விலங்கையர்கள்
பதம் பெறலா யங்கு போகிப் பார்த்தாலங்கும் செம்புகல்லு"

எனக் குறிப்பிடும் முறையில் தமது பக்குவமில்லாத தன்மையை வெளிப்படையாகவே புலப்படுத்துகின்றார். 38

முன்னோர்கள் ஒருவன் முப்பது வயதினுள் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களின் பிடிப்பிலிருந்து விடுபட்டு ஒப்பில்லாத உண்மைப் பொருளான இறைவனை தன்னுள்ளே நாடுதல் வேண்டுமெனக் கூறிவைத்தனர். இவ்வகையான அனுபூதி ஞானமானது நிட்டையினாலல்லது பெறப்படாதமையால் நிட்டை உடம்பும் அறிவும் வளர்ச்சியடைந்த முதுமைப் பருவத்தில் கூடும் சாத்தியம் பெரிதுமின்மையால் குருவின் துணைகொண்டே கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை எனும் ஞான நிலைகளை ஒருவன் கைவரப் பெறுவது சிறந்ததாகும். இதனையே ஒளவையாரும்,

" முப்பதா மாண்டளவில் மூன்றற் றெரு பொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறானாயிற் - செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையர் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு "

என அழகுறக் கூறுதல் காணலாம். 39

இதனை உணர்ந்திருந்த அருளம்பல சுவாமிகள்,

" முப்பதான வாண்டினுக்குள் மூன்றுவிட வேணுமென்றாய்
தப்பான மும்மலத்தைத் தள்ளிற்தேகம் நின்றிடுமோ "

என இறைவனிடமே தனது இயலாமையினைக் கேள்விக் கணையாகத் தொடுக்கின்றமை காணலாம். 40 மேலும் இவ்வாறான இயலாத ◌யில் இறைவனையே உதவிக்கு அழைக்கின்ற பாங்கையும் காணலாம்.

" பஞ்சகிர்த்யம் செய்பவனே படித்தகல்வி வீரங்கொண்டு
மிஞ்சுங்காம மடக்கமாட்டேன் மீறிலடக் கிடுவாய்நீயே "

என்று சிவதரிசியில் குறிப்பிடுகின்றார். 41 அதேவேளை இதனையே,

" என்செயலால் முடியாதவை யென்னைச் செய்ப சொல்வாயானால்
உன்செயலால் முடியாதென வுரைத்திட்டாயோ வாகமத்தில் "

என நையாண்டியாகச் சுட்டுவதுடன் தமது இயலாத நிலையையும் வெளிப்படுத்துவதைக் காணலாம். 42

மேலும் "நான் தேகத்துள் இருந்து எப்படிப் புறப்படுவது என்ற கவலையாகவும் அதனுள் இருந்து படும் வேதனையால் அச்சம் கொண்டும் அப்படி என்னைத் தேகத்தால் மூடிப்பிடித்த பின் நானாகவே துறக்கப் புகின் என்னை அடிப்பார்கள் என அஞ்சி, நான் தேகத்துட் சும்மா இருக்கவும் என்னை ஆட்டி அலைக்கும் எண்ணங்கொண்டு பூமியிலிருந்து ஓர் விசையான பாசமாகிய பேய் எழுந்து உந்தியிலடித்துச் சுழன்றபடி அந்த மூச்சுத் தூக்கலாக ஏறியிறங்கும் நடைப்படி பல எண்ணமுண்டாகிறது. அதைத் தடுக்கின் அந்த ஆவி நீற்றுச் சேடமாகி அந்த விந்தே கபமாகக் கழியப்படுகிறது. அப்படி நடை நேர்வதாகப் பூமி உந்தியிலடித்து மேற் தூக்கலாகக் கிழம்பக் குத்தவும் மேகம் தலையிலூன்றியபடி கீழ் அமர்த்திக் குத்துகிறது" எனச் சுவாமிகள் அருவாச தேவ ஆரத்தில் கூறுகின்றார். மேலும் "இந்த நிலையில் அப்படியே என்னைத் தேகத்துள் அடைத்து விட்டு மேளத்திற்கு இருபக்கமும் அடிப்பதுபோல அடித்தும் சிலகாலம் கஞ்சாவும் எட்டிவிரையும் சேர்ந்த மயக்கமான புகையை உள்ளிட்டு மயக்கம் செய்தும் சிலபோது கள்ளுச் சாராயம், அபின் என்பனவற்றை உள்விட்டுக் கலக்கியும் ஆட்டியபோது தேகச்சுமையும் சுமந்தபடி ஆட்டங்கொண்டபோது பைத்தியம் ஏறிவிட்டது. அதனால் ஆடியபடி பல தலங்களையும் சுற்றியாடி அந்த மயக்கத்தால் நாகபட்டினத்திற் சிலகாலம் ஓர் தூக்கமாகவே தூங்கினேன்" எனக் குறிப்பிடுதலையும் காணலாம்.[43] பிறிதோரிடத்தில்,

"நிலைகொண்டு நிற்பதற்கு நிஷ்டைகொண்டே யிருப்பதற்கு
விலைகொண்டு வேண்டும்பொருள் விளங்கும் நாகபட்டினமே"

எனச் சுவாமிகள் குறிப்பிடுவதும் மேற்குறித்த செயல் சார்ந்ததாக இருக்கலாம்.[44]

ஞானநிலையை எட்டியவர்களின் வாழ்வில் இடம்பெறும் நிகழ்வுகள் அனைத்திற்கும் பொருள் கூறுவதோ விளக்குவதோ சாதாரண அறிவுடைய மாந்தர்களுக்கு இயலாததொன்றாகும். பொதுவாக ஞானிகள் சம்பிரதாயங்கள் சங்கற்ப விகற்பங்களுக்கும் அப்பாற்பட்டவர்கள்.

"ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையில்லை நாடுவதொன்றில்லைச்
சீலமிலைத் தவமில்லை விரதமோ டாச்சிரமச்
செயலில்லைத் தியானமில்லைச் சித்தமலம் இல்லை"

என விதிக்கப்பட்ட பல விதிமுறைகளையும் தாண்டி நிற்ப வர்கள் இவர்கள் என்பது அறிதற்குரியதாகும்.[45]

உதாரணமாக மது மாமிசங்களை விலக்காது ஏற்றுக்கொண்ட தன்மையை கடையிற் சுவாமிகள், பெரியானைக்குட்டிச் சுவாமிகள் போன்ற பலரது வாழ்வில் இடம்பெற்றமை அறியலாம். இவர்களின் நடத்தைகளுக்கு எல்லாம் விளக்கம் கூற முனைவதும் இயலாத நிலைக்கே இட்டுச் செல்லும் என்பது தெளிவு. இதுபோலவே அருளம்பல சுவாமிகளின் மேற்கூறிய நிலையும் நம்மனோரால் எளிதில் விளங்கிவிட முடியாததாக அமைந்துள்ளது.

## நிஷ்டை கற்க இந்தியா செல்லல்

அருளம்பல சுவாமிகள் 1910 ம் ஆண்டளவில், அதாவது அவர்தம் முப்பதாவது வயதில் தமது ஆத்மஞான ஈடேற்றத்தின் பொருட்டுச் சிதம்பரம் செல்ல எண்ணங்கொண்டு இந்தியா புறப்பட்டார் என ஊரவர்களால் நம்பப்படுகின்றது. இவ் வெண்ணத்தினைச் சுவாமிகள்,

> ''சிதம்பரத்திற் தரிசனம்நேர் செய்யச்சொன்னா
> ளிலங்கையரிகள்''

எனச் சீவதரிசியில் குறிப்பிடுகின்றார்.[45] சுவாமிகள் ஊரவர்கள் பலருக்கும் கூறாமலேயே இந்தியா சென்றதாக ஊரவர்கள் கூறு வதுண்டு: நாகை நீலலோசனி அம்மன் தோத்திரத்தின் முகவுரையில் சுவாமிகள் தமது நிலையைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்கள்:

> ''நாகபட்டணம் மவுனசுாவமி எனப் பெயர்பூண்ட நான் யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு என்னும் தலத்திலிருந்து புலன்பொறி கரணம் சீறியாடும் நிலைப்படி காவடியாக அலைந்து திரிந்தபோது தன்நிலை படியாததால் நிஷ்டை நிலையைப் படிக்க வேணும் என எண்ணிச் சிதம்பரம் போவதாக நாகபட்டணம் வந்தேன்''

எனக் கூறுகின்றார்.

## நாகபட்டணத்தில் ஞான நிஷ்டை

அருளம்பல சுவாமிகள் நாகையிற் கொடியாக, குவலயம் படைத்திட்ட நீலாச்சி அம்பாள், சிதம்பரம் போக இருந்த தன்னை அங்கே ஏன் போகின்றாய், என்னிடத்தில் ஞான நிஷ்டையைக் கற்றுக்கொள் என வேண்டியபடி அவ்விடத்திலேயே ஞானநிலையான ஞான நிஷ்டையைக் கற்றுத் தேர்ந்ததாக நாகை நீலலோசனி அம்

மன் பேரில் பாடிய தோத்திரத்தில் குறிப்பிடுகின்றார்.[48] நாகை நீலலோசனி அம்மன் ஆலய வாயிலில் சுவாமிகள் 1910 ம் ஆண்டு முதல் 1914 ம் ஆண்டு வரையில் நான்காண்டுகள் உணவின்றி நிஷ்டையில் இருந்தார்.[49] அவர்தம் ஞானநிஷ்டையின் கடுமையை அக்காலத்தில் புலித்தோல் விரித்த கதிரையில் இருக்க எடுக்கப்பட்ட புகைப்படம் புலப்படுத்தி நிற்கின்றது. சுவாமிகளின் மூன்று புகைப் படங்களின் விபரங்களும் சபாபதிப்பிள்ளை குலசபாநாதனுக்கு எழுதிய மடலூடாக அறியக் கிடக்கின்றது.[50]

1914 ம் ஆண்டளவில் நிஷ்டையிலிருந்து எழுந்த பின்னர் சுவாமிகள் வேதாரணியம், அகத்தியாம் பள்ளி, மாயவரம், சிதம்பரம் காரைக்குடி, பாண்டிச்சேரி (புதுவை) முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தார்.[51]

நாகபட்டணம், புதுவை ஆகிய இடங்களில் அதிககாலம் நிலையூன்றியிருந்தமையை அறிகிறோம். சுவாமிகள் எழுதிய நூல்கள் பெரும்பாலானவை இவ்விரு இடங்களிலேயே பதிக்கப்பெற்றவை. சுவாமிகள் ஆரம்பத்திலும் இறுதிக் காலங்களிலும் பெரிதும் நாகபட்டணத்திலேயே காலங் கழித்திருந்தார். அருளம்பல சுவாமிகள் நாகபட்டணத்தில் குறிப்பிடத்தக்க காலம் வாழ்ந்தமையினால் நாகபட்டணம் சுவாமி எனவும் நாகையில் மௌனத்தில் ஆழ்ந்திருந்த காரணத்தினால் நாகை மவுன சுவாமி எனவும் மௌனகுரு எனவும் யாழ்ப்பாணத்தினை பிறப்பிடமாகக் கொண்டிருந்தமையால் யாழ்ப்பாணத்துச் சுவாமி எனவும் நாகபட்டணத்தில் உள்ள நீலலோசனி அம்மன் பூந்தோட்டத்தில் இருந்தமையால் பூந்தோட்டத்து ஐயா எனவும் அழைக்கப்பட்டமையை அறியமுடிகின்றது.[52]

## நாகையில் ஏற்பட்ட அனுபவங்கள்;

யாழ்ப்பாணம், அல்வாய் வடக்கினை விட்டு இந்தியாவிற்குச் சென்றபோது அங்கு சுவாமியைப் பலரும் மதித்து நடந்ததாகத் தெரிகின்றது. நாகையில் வைத்திலிங்கச் செட்டியார் போன்றோர் சுவாமிகளுக்குப் பெரிதும் துணையாக இருந்தனர் என ஊரவர் கூறுவர். சுவாமிகளே ஓரிடத்தில் தன்னைப் பலரும் சாமியென மதித்தார்களேயன்றி பைத்தியக்காரன் என மதிக்கவில்லையெனக் குறிப்பிடுகின்றார்.[53] நாகையில் நிஷ்டையை ஆரம்பித்த காலப்பகுதியில் இவரது உண்மைநிலை புரியாத சிலர் இவரை வேடதாரி, பொய்ச்சாமி என எண்ணித் தகாத செயல்கள் செய்ததாகவும் சொல்

லப்படுகின்றது. ஒரு தடவை தீயில் காய்ச்சிய இரும்பினை இவரது பாதத்தில் சுட்டதாகவும் சுட்டபோது சுவாமி மௌனமாக இருந்ததாகவும் கூறப்படுகின்றது.[54]

நிஷ்டை ஆரம்ப நாட்களில் நீலலோசனி அம்மன் ஆலய ஐயர் இவர்மீது சினமுற்று இருந்தார். சுவாமிகள் ஒரு கொட்டிலில் இருந்தார் சுவாமியைத் தரிசிக்க வந்த பெண்மணி வழமையாக மூடியிருக்கும் சுவாமிகள் கண்கள் திறந்திருந்தமைகண்டு ஐயரிடம் கூறினார். ஐயர் வந்து பார்த்தபோது கண் பழையபடி மூடி இருந்தது. இவர் வேடதாரி எனக் கருதிய ஐயர் தாசிகளை இவரது குடிசைக்கு அனுப்பினார். தாசிகள் வந்தமையால் சுவாமிகள் வேறிடம் சென்றார். சுவாமிகள் இருந்த கொட்டிலும் தீ பற்றி எரிந்தது. ஐயர் சுவாமிகளுக்கு எதிராக தீ மூட்டிக் கொட்டகையை எரித்தார்; சுவாமிகள் பெண்களைப் பார்க்கின்றார் எனப் பொலிஸில் முறைப்பாடு கொடுத்தனர். பொலிஸார் சுவாமியைத் தமது இடத்துக்குக் கூட்டிச்சென்று ஓர் அறையில் பூட்டிவைத்தனர். சற்று நேரத்தில் அவர் அறையில் இல்லாமையையும் கடற்கரையோரத்தில் நிஷ்டையில் இருந்தமையையும் குதிரையில் வந்த நீதிபதி கண்ணுற்று இவரது உண்மை நிலையை உணர்ந்து கொண்டார். நீதிபதி அவரை எவரும் தொந்தரவு செய்யக்கூடாது எனப் பணித்ததாகவும் தெரிகின்றது.[55]

இந்நிகழ்வினையே சுவாமிகள் ஓரிடத்தில்,

"கொட்டகை சுட்டபழிக்கு - சிறையிட்டும்
கூடலாய் நிற்குது சாமீனொன்று
செட்டியார் பாதுகாப்புள்ளே - எமன்வந்து
சேட்டைகள் செய்திட முடியாது"

என நொண்டிச் சிந்தில் குறிப்பிடுவதாகக் கொள்ளக் கிடக்கின்றது.[56]

கொட்டகை சுட்ட நிகழ்ச்சியைச் சுவாமிகள் பிறிதோரிடத்தில் கீழ் வருமாறு விளக்குதல் நோக்கலாம்:

"நான் இருந்த கொட்டகையை மூலாக்கினி எழுந்து சுட்டது குற்றம் எனவகுத்த நீ மூலக் கனலை மதி மண்டலத்தின் மேலெழுப்பமாட்டாய் போல் தெரியப்படுகிறது, அதை விட்டாயாயின் பரவெளியான நீயே உன் இயல்பு தற்போது சுதந்திரமாகப் பரவெளியாய் விட்டாயானால் நான் அந்த வேலையைச் செய்ய எத்தனிக்க வேண்டியதில்லை. இனி நீ உனது செயலை என்னி

டம் ஏவிச் செய்விக்க நியாயம் இன்மையால் நான் என் மட்டிற் சும்மா இருக்கின்றேன். உனது செயலை நீயே செய்து கொள்.[57]

இந்த நிகழ்வு சுவாமிகளை வருத்தியுள்ளதென்பது புலனாகின்றது. இதனால் தான் ''நான் செய்த நிட்டை பிழை என என்னைப் பிடித்துச் சிறையில் வைத்துச் சாமினில் விட்டாய். இப்போ என்னை நிட்டை செய்யும்படி சொன்னாய்; செய், செய் என்கிறாயே, ஒருவன் முடிவாகச் செய்யவேண்டிய செயல் இன்னதெனப் பெரியவளாகிய உனக்கு இன்னும் தெரியவில்லையே'' என நாகை நீலாட்சி அம்மன் மீது அலட்டிக் கொண்டார் போலும்.[58]

கொட்டகை சுட்டது எனும் நிகழ்வின் பின்னர் சுவாமிகள் தாம் நாகபட்டணத்திலிருந்து வேதாரணியம் சென்றதாகச் சுட்டுகின்றார். இது பற்றிக் குறிப்பிடுகையில், ''பரமசிவனின் கொடுமையால் அவ்விடம் திரும்பிச் செல்லுவதில்லை என இருக்க அவனே தன் மனைவியினைக் கள்ள வேடமிட்டுப் பணிவிடை செய்து தனது பழைய இடத்திற்கு அழைத்து வந்தான்'' எனக் குறிப்பிடுவது நோக்கத் தக்கது.[59] இங்கு சுவாமிகள் வெருண்டபடி காடடைந்த பசுவைப் பிடிப்பதற்கு ஆடவர்கள் பெண்களை விட்டே கோடிக் காட்டில் வெருள் அடக்கிப் பிடிப்பார்கள் எனும் உதாரணத்தினை எடுத்தாண்டு வெருண்ட பசுவாகிய தம்மைப் பணிவிடை எனும் பாசக் கயிற்றைக் கொண்டு பரமசிவன் பிடித்தமையைச் சுட்டுவது நயக்கத்தக்கதாகும்.

## மௌன நிலை

அருளம்பல சுவாமிகள் ஏகமே நிலையாமெனக் கண்டபடி ஆட்டமின்றிச் சும்மா இருப்பதே எச் செயலிற்கும் முடிவான முடிவாகும் எனக் கருதினார். இப்போக்கே அவரை இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி பெரிதும் மௌனமாக இருக்கத் தூண்டியது எனலாம்.

மௌனத்தின் தன்மையினைச் சுவாமிகள் அழகுற எடுத்தாள்வது நயக்கத்தக்கதாகும். ''கைலாயத்தில் பார்வதி, பரமசிவன், இந்திரன் முதலிய தேவர்கள், பக்தர், சித்தர், முனிவரவர்கள் கூடிப்பேசிய சபையில் ஓர் ஞானி எழுந்து இப்போ நான் சொல்லப் போகின்றது தங்களுக்குத் தெரியுமா எனக் கேட்டார். அதற்குச் சபையோர் சொல்லப்போகின்றதைத் தெரியமாட்டாது

என்றார்கள். இப்போ ஞானி நான் சொல்லப்போகின்றதைத் தாங்கள் அறியமாட்டார்களாயின் சொன்னதாலும் தாங்கள் அறியப்போகின்றதில்லை; ஆதலால் நான் சொன்னதாற் பயனில்லை என்ற போது, தாங்கள் சொல்லப்போகின்றது எங்களுக்குத் தெரியும் என்றார்கள். அப்போ ஞானி நான் சொல்லப் போகின்றதைத் தாங்கள் அறிவீர்களாயின் நான் அதைச் சொல்ல வேண்டியதேயில்லை யென்றான். அப்போ சித்தர்கள் தன் நிலையில் தானசைந்து தன் இயைபாகத் தான் அறிவதே தன் நிலையிற்கான அறிவும் ஒருவர்க்கொருவர் சொல்வது புறச் செயலான எழுத்தொலி, நாதமாகிய பாசமும் அதன் செயலின் இயைபான பொருளாகிய பாசமும் அவரைப் பற்றி ஆட்டச் செயலை மூட்டும் பண்ணாகுமானாற் பரமசிவன் நாலுவேதம், இருபத்தெட்டு ஆகமங்களை யாதுகாரணம் பற்றிச் சொன்னாரோ என எண்ணலும் ஞானி அவர்களை நோக்கி அநாதி என்ற இடத்தில் ஓர் முதலெனக் காணலான காலமும் வெளியின் எல்லை முடியும் நேராகக் காட்டிச் சொல்ல முடியாததால் வெளியே வெளியாக நின்றபோது ஒன்றுமில்லை யென்பதே முடிவாகக் காணப்படும்'' என விளக்கி நின்றார்.[60] இவ்வாறு மௌனத்தின் சிறப்பினை எடுத்தாளுதல்.

''மோனங்கை வந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனங்கை வந்தோர்க்கு சித்தியும் மூன்னிற்கும்
மோனங்கை வந்ததுாமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைதங் கருமமும் முன்னுமே''

எனும் திருமூலரின் வாக்கினை நினைவுறுத்தி நிற்கின்றது.[61]

## இலங்கைக்குத் திரும்பியமை

சுவாமிகள் ''தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை'' எனும் வாக்கிற்கு ஏற்ப குடியிருந்த கோயிலை மேவிவரும் நோக்குடன் 1929ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து தமதூர் வந்தார். வியாபாரி மூலையிலும் வதிரியிலுமாகத் தங்கியிருந்தார். வதிரியில் சகோதரி சின்னப் பிள்ளையுடனும் வியாபாரி மூலையில் பெரும் பொழுதை சித்திவிநாயகர் ஆலய தெற்கு வீதியில் உள்ள மகிழ மரத்தின் கீழும் இருந்தார். இவ்வேளையில் ஆலய வசந்த மண்டபத்து சுவரில் சுவாமிகள் தெய்வப்படங்கள் சில வரைந்தார் என அறிகிறோம். இக்காலப் பகுதியில் சுவாமிகளிடம் பலர் தங்கள் குறைகளைக் கூறி நலங்கள் நாடித் தரிசிக்கச் சென்றமையையும் அறி

கின்றோம். சுவாமிகள் அன்பர்களின் வேண்டுதல்களை இறைவனிடம் சமர்ப்பிப்பதாகக் கூறுவதே வழக்கமாகும். இவ்வகையில் புலவரோடை யில் அவரது சகோதரி மகள் ஒருவர் பலகாலமாகப் பிள்ளைப் பேறற்று விளங்கிய காலை சுவாமியிடம் விண்ணப்பித்தார். சுவாமி கள் அவர் பொருட்டு அதனை இறைவனுக்குப் பாரப்படுத்தியமை யும்அவ்வேண்டுதல்பலித்து அப்பெண் ஒரு பெண் குழந்தைக்குத்தாயாகி யமையும் ஊரில்பேசப்படுகின்றது.[62] சுவாமிகளிடம் பலர் தங்கள் தங்கள் அன்றாடப் பிரச்சினைகள், எதிர்கால நிலைமைகள் பற்றிப் பல கோரிக்கைகள் விடுப்பதுண்டு. சுவாமியை நாடிவந்த பலர் தங்கள் குறை நீங்கியமையை இன்றும் நன்றியுடன் கூறுவதைக் காணலாம். சில அன்பர்களின் பிற்காலம் பற்றிச் சுவாமிகள் கூறிய வாக்குகள் பலித்தமை அவர்களுக்குச் சுவாமிகள் மீதிருந்த மதிப்பினை உயர்த் தியது. சுவாமிகள் தன்னைச்சேவிக்கும் அடியவர்கள் வேண்டுதல் களுக்கு ''என் செயலால் நடப்பது ஒன்றுமில்லை; எல்லாம் இறை வன் செயல். நான் ஒரு கருவியாக இருந்து உங்கள் வேண்டுதலை இறைவனுக்குக் கூறுகின்றேன்'' எனக் கூறுவாராம். சுவாமிகளின் உறவினர்கள், அன்பர்கள் சிலர் தற்போதும் தாங்கள் வணங்கும் இதர, தெய்வப் படங்களுடன் சுவாமிகளின் புகைப்படத்தினையும் வைத்துப் பூஜிப்பது சுவாமிகள் மீது அவர்கள் கொண்டிருக்கும் பக்தியோடு கூடிய மதிப்பிற்குச் சான்று பகர்வதாகும்.

சுவாமிகள் பயன்படுத்திய கட்டில், படுக்கை விரிப்பு போன்றன வதிரியில் அவரது சகோதரி வதித்த வீட்டில் புனிதப் பொருட்க ளாகப் பேணப்பட்டு வருகின்றன. அத்துடன் சுவாமிகள் செய்த கைப்பணிப் பொருட்களான யாகசாலைஅகப்பை போன்ற மர அகப்பை, சந்தணமரைக்கும் கல், வட்லிமட்டையிலான கைத்தடி போன்றவற்றினையும் பேணி வருகின்றனர். அண்மைக்கால இரா ணுவ நடவடிக்கைகளினால் சுவாமிகளால் செய்யப்பட்ட மண் விளக்கு, சட்டி, செம்பு போன்ற பொருட்களும் புத்தகங்கள் சிலவும் கைதவறிவிட்டன என அறிகிறோம். சித்திரங்கள் வரை யும் திறமை கொண்டிருந்த சுவாமிகள் கம்பனையில் கடையில் இருந்தபோது வரைந்த இலட்சுமி உருவப்படமும் தொலைந்து விட்டதாக அறிகிறோம்.[63]

### அற்புதங்களும் சித்துக்களும்

சுவாமிகள் ஒருநாள் பொலிகண்டிக் கடலில் தீர்த்தம் ஆடச் சென்றபோது கடல் நீரில் பல்வேறு இடங்களிலும் தமது தோற்றத்

தைக் காட்டினார் என்றும் அடியார்கள் கடல்நீருள் நின்றபோது சுவாமி மேற்பரப்பில் காட்சி கொடுத்தார் என்றும் ஊரவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் நாகை நீலலோசனி அம்மன் ஆலய வாயலில் நான்கு வருடம் ஞான நிஷ்டையில் இருந்த சுவாமிகள் நிஷ்டை முடிந்து எழுந்து நாற்பத்தொரு நாட்கள் வாயுறு நீரில் இருந்தார் எனும் செய்தி அவரின் அன்பர்களால் அற்புதம் எனக் கருதப்படுகிறது. ஆனால் சுவாமிகள் சித்துக்களில் அதிக நாட்டம் கொண்டவராக இருக்கவில்லை. அன்பர் ஒருவருக்கு எழுதிய மடலில் சுவாமிகள் "கடவுள் தொண்டையில் உள்ள நஞ்சாற் கொண்ட ஓர் மரத்தை, ஒரு சரீரத்தை எழுப்பிக் காட்ட என்னால் முடியும். நான் அந்த வேலையில் பிரவேசித்தாற் தம்பி அக்கினி கோபிப் பான். ஆனதால் அக் காரியத்தில் நான் தலையிடுவதில்லை" எனக் குறிப்பிடுகின்றார். 64 இதிலிருந்து சுவாமிகள் சித்துக் களைத் தாம் செய்ய விரும்பியதில்லை என்பதை அறிய முடி கின்றது.

செத்தாரை யெழுப்பிடுமோ சேயிழை நூற் கம்பளங்கள்" எனவும் 65 "சாம்பலது பெண்ணாகத் தங்கிடுமோ வெம்பரனே" எனவும் 66

சுவாமிகள் கேட்பதும் "சாம்பல் பெண்ணாயுறிற் கலையாம்" எனக் குறிப்பதும் நோக்கத்தக்கவை. இவை நாயன்மாரால் செய்த செயல் களைக் குறிப்பதாக அமையுமோ என்பது கருதற்குரியதாகும், மேலும் சுவாமிகளது காலத்தில் வாழ்ந்த ஒருவரின் இவ்வாறான செயல் களைச் சுவாமிகள் குறிப்பால் சுட்டுவதும் பின்வரும் பாடல் மூலம் தெரியவருகிறது.

"சாத்திரப் புரட்டுகள் பேசி - அவர் அங்கே இருக்கிறார்.
சாற்றுவதை நம்பிப் பூசியெனவே
நேத்திரம் கட்டிய வித்தை - வாய்மொழி
நிச்சயமாகாது உச்சியிலேறினும்"

எனக் குறிப்பிடும் அடிகள் சுவாமிகளின் உள்ளக் கிடக்கையைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம். 67

மீண்டும் இந்தியா செல்லல்

*1929* ம் ஆண்டு இலங்கை வந்த சுவாமிகள் குறுகிய காலத்திலும் அதாவது *1930* ம் ஆண்டின் பிற்பகுதியில் மீண்டும் நாகபட்டணம்

சென்றார். சுவாமிகள், சபாபதிப்பிள்ளைக்கு எழுதிய கடிதத்தின் மூலம் ஊரில் இருந்தகாலம் அவருக்குத் திருப்திகரமானதாய் அமைய வில்லையோ என எண்ணத் தூண்டுகின்றது.[68]

சுவாமிகளின் பக்தர்கள்

சுவாமிகளை மறவாத அன்புகொண்ட பக்தர்கள் இலங்கையில் இருந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. சுவாமிகள் இந்தியாவில் இருந்தவேளைகளிலும் அன்புக் கரிசனைகொண்டு பல அன்பர்கள் அவருக்குக் கடிதங்கள் எழுதியமையை அறியலாம். அன்பர்களின் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதற்கு அக்காலத்தில் மூன்று சத முத்திரை வாங்க முடியாத நிலைமையில் சுவாமிகள் இருந்தமை அவரது கடிதங்கள் மூலம் தெரியவந்துள்ளது. சுவாமிகளின் பொருளாதாரக் கஷ்டநிலை அறிந்த அன்பர்கள், இங்கிருந்து பழவகைகள், உணவு, காவிவேட்டி போன்ற உடைகள், காசு போன்றவற்றை அவ்வப்போது அனுப்பி வைத்தமையை அறிய முடிகிறது.[69] மேலும் சில அன்பர்கள் சுவாமிகளின் ஆசி வேண்டி நாகபட்டணம் சென்று வந்தமையும் அறிய முடிகின்றது.[70] இதிலிருந்து சுவாமியை ஊருக்கு வந்தபோது அன்பர்கள் அவரை ஆதரித்திருப்பார்களென எண்ணலாம். அன்பர்கள் தங்களது குறைகளை மனந்திறந்து சுவாமிகளுக்குத் தெரிவிப்பதுடன் சுவாமிகளுக்கிருந்த அடியவர்களைப் போலத்தங்களையும் ஆட்கொள்ளுமாறு வேண்டியமையும் அறியக்கூடியதாகும். சுவாமிகள் அன்பர்களின் பக்குவத்திற்கேற்ப புத்திமதிகள் வழங்கியுள்ளமை அவரின் கடிதங்களூடாகக் காணலாம்.

சுவாமிகளின் ஈழத்து அடியார் குழாத்தில் சிறப்பிடம் பெற்றவர் செல்வந்தரான சிவப்பிரகாசபிள்ளைகளாவர். நீண்டகாலமாக சுவாமிகளின் அன்பராக இருந்ததுடன் பலவகைகளில் சுவாமிகட்கு வேண்டிய உதவிகளைத் தாமே முன்வந்துதவினார். வேதாரணியத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான கப்பல் மூலமான வர்த்தகத்தினை நடத்தியமையால் சுவாமிகளை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பினைக் கொண்டிருந்தார். 1930 ஆம் ஆண்டிற்கு முன்னதாக நாகபட்டணத்தில் காணி வாங்கி சுவாமிகள் தங்குவதற்காக ஒரு மடமும் கட்டிக் கொடுத்தார். இம் மடம் இன்றும் பேணப்பட்டு வருகின்றது. 1929 ஆம் ஆண்டிலேயே சபாபதிப்பிள்ளையவர்களுக்கு அருளம்பலசுவாமிகள் மீதான பிணைப்பு ஏற்பட்டது. "மானிட சென்மம் எடுத்தவர்களுள் பதரும், பிரபஞ்சக்கடலுள் தத்தளித்துக் கொண்டிருந்த தன்னை, தமது பத்தொன்பதாவது

வயதில் ஆட்கொண்டதாக "த் தமது கட்டுரையில் சபாபதிப்பிள்ளை குறிப்பிட்டிருப்பது காணலாம். 71 அருளம்பலநம என்பதனைத் தமது வாழ்நாளில் பெரிதும் கடைப்பிடித்த சபாபதிப்பிள்ளை எல்பவரும் குறிப்பிடத்தக்க அன்பராவர். இவர் ' புற்றளைக்கரசே ', ' குழந்தை அருளம்பலம் ', ' அம்பலமே ' எனும் பாடல்களினைச் சுவாமிகளை நோக்கிப் பாடியுள்ளார். இவர் புற்றளைக் கரசே எனும் நூலை நினைவாக வெளியிட்டதுடன் நாகை நீலலோசனி அம்மன் ஊஞ்சல் நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம் ' எனும் சுவாமிகளின் இரு நூல்களையும் மறுபதிப்புச் செய்து வெளியிட்டார். ' பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமி ' எனும் கட்டுரையும் ஸ்ரீ லங்கா ( 04 - 1962 ) ஆத்மஜோதி ( 15 - 5 - 63 ) ஆகியவற்றில் வெளிவந்ததுடன் புற்றளைக்கரசிலும் மறுபிரசுரமாகியுள்ளது. இவர்களைவிட விஸ்வலிங்கம், தம்பிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, சொக்கநாதப்பிள்ளை போன்றோரும் சுவாமிகளின் அன்பர்களாக விளங்கினார்கள்.

## இறுதி விஜயம்

1942 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி சுவாமிகள் அன்பர் சிவப்பிரகாசம் பிள்ளையவர்களோடு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார். அவ்வேளை வியாபாரி மூலையில் சிவப்பிரகாசம் பிள்ளையவர்களின் இல்லத்திலேயே தங்கியிருந்தார்.


தமது தேகம் இறுதிக் காலத்தினை நோக்குகின்றதென்பதனைச் சுவாமிகள் தெளிவாக உணர்ந்திருந்தார். அவ்வேளையிலும் தமது தாயாருக்கு ஆற்றும் கடமை ஒன்று இருப்பதனையும் மறந்துவிடவில்லை. தனதுபாட்டியார், காளிப்பாட்டியினது இறுதிக்காலத்துக் கடமைகளை முறையாகச் செய்தவர் சுவாமிகளாவர். இதனை,

> "திதிசெய்தே யந்தணர்க்குச் சேவடி யபிஷேகித்து
> விதியுறப் பூசைசெய்து விண்ணோர்க்கும் பூசைசெய்தேன்
> பதியினிற் தானமீந்தேன் பாட்டியின் கடமையெல்லாம்
> கதிபெறக் காட்டிச்செய்தேன் கடனுமுண் டோவெனக்கே"

எனக் கேட்பதிலிருந்து உணரலாம். 72 அவ்வகையில் தமது இறுதிக் காலத்தில் தமது தாயாரிடம் தம கடமைகளைச் செய்வதற்கு இருக்க வேண்டுமோ என வினவினார். தாயார் வேண்டாம் எனக் கூறியதற்கமைய தனக்காகச் சிவப்பிரகாசம் பிள்ளையவர்களே தமது தாயின் இறுதிக் கடனை ஆற்றுமாறு கூறினார். இவற்றையெல்லாம் உற்றார் உறவினர்களிடம் இருந்து அறிகிறோம்.

## சுவாமிகள் சமாதி அடைதல்

இறுதிக் காலத்தினை உணர்ந்து தமது சொந்தவூரிலேயே சமாதி அடைவதனை நாடிய சுவாமிகள் வியாபாரி மூலைக்கு வந்தமை அவர் அம் மண்ணுக்கு அளித்த பெருமை எனக் கூறலாம். சுவாமிகள் 1942 ஆம் ஆண்டு மார்கழி அத்தத்தில் 3ந் திகதி சம்மாணங் கொட்டியபடியே நிஷ்டையில் அமர்ந்திருந்து மகாசமாதி அடைந்தார். அவரது பூதவுடல் மார்கழி மாதம் 5 ஆம் திகதி முறைப்படி வியாபாரி மூலை வீரபத்திர சுவாமி கோயிலுக்கு ஈசான திசையில், பெருந்திரளான மக்கள் கூடியிருக்க, சமாதி வைக்கப் பெற்றது. ஈழத்தில் உள்ள இதர சமாதி ஆலயங்களிலிருந்து வேறுபட்ட கட்டிட அமைப்புடன் பெருங்கற்களால் அழகுற அமைந்த இவ்வருளம்பல சுவாமிகள் சமாதி ஆலயமும் ஆ. வே. சிவப்பிரகாச பிள்ளையவர்களின் அன்பின் பரிமாணமேமே என்றால் மிகையாகாது. சமாதி ஆலயம் நித்திய பூசையுடன் ஆரம்பித்து அவரது மார்கழி அத்தத்தில் சிறப்பாகக் குருபூசையுடன் பேணப்பட்டு வருகின்றது.



அருளம்பல சுவாமிகள் (1931)

# ஆ. பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள்

யாழ்ப்பாணத்துச்சாமி மகிமை

சுப்பிரமணிய பாரதியார் தமது 'பாரதி அறுபத்தாறு' என்னும் பாடலில் யாழ்ப்பாணத்துச் சாமி என ஒருவரைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். பாரதியார் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிப் பாடிய பாடல்கள்;

கோவிந்த சாமி புகழ்சிறிது சொன்னேன்
குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்
தேவி பதம் மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி
பரமபத வாயிலெனும் பார்வையாளன்
காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்''

''தங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்
சமைத்துமவற் றினிலீசன் தாளைப் போற்றும்
துங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்
தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்
மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர் கோன் யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்
சங்கரனென் றெப் போதும் முன்னே கொண்டு
சரணடைந்தால் அதுகண்டீர் சர்வசித்தி''

என அமைந்துள்ளன. 73 இவற்றைவிட, குவளைக் கண்ணன் புகழ் கூறும் அடுத்து வரும் பாடல்களிலும் யாழ்ப்பாணத்துச் சுவாமி பற்றிய செய்தியைக் காணலாம்.

''யாழ்ப்பாணத் தையனையென் னிடங்கொணர்ந்தான்''
எனவும்74

"மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர்;
வானவரெல்லாங் கண்ணன் அடியா ராவார்;
மிகத்தானு முயர்ந்த துணிவுடைய நெஞ்சின்
வீரர்பிரான் குவளையூர்க் கண்ணன் என்பான்
ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச்
சாமிதனை யிவன்னெறன் மனைக் கொணர்ந்தான்
அகத்தினிலே அவன்பாத மலரைப் பூண்டேன்
அன்றேயப் போதேவீ டதுவே வீடு"

எனவும் குறிப்பிட்டுள்ளார். 75

பாரதியார் பெரும் புலவர். அவர் சிறப்புப் பற்றி விதந்து கூற வேண்டியதில்லை. அப்புலவர் பெருமான் "குவலயத்தின் விழி போன்ற யாழ்ப்பாணத்தான்" "தீரஞானி" சிதம்பரத்து நடராஜ மூர்த்தி", பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி" பரமபத வாயிலெனும் பார்வையாளன்" "மங்களஞ்சேர் திருவிழியால் அருளைப்பெய்யும் வானவர் கோன்", யாழ்ப்பாணத் தீசன்" சங்கரனெனப் போதும் முன்னே கொண்டு சரணடைந்தால் அது கண்டீர் சர்வ சித்தி', ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச்சாமி, "அகத்தினிலே அவன்பாதமலரைப் பூண்டேன் அன்றேயப்போதே விடதுவே வீடு" என்றெல்லாம் அந்தச் சுவாமிகளின் மகிமையைப் புகழ்ந்து பாடியுள்ளார் என்றால், உண்மையிலே அந்த யாழ்ப்பாணத்துச்சாமி யார் என்று அறிய நாம் ஆவல் கொள்வது இயல்பே.

யாழ்ப்பாணத்துச் சாமி, அவர் யார்?

யாழ்ப்பாணத்துச் சாமி எனப் பாரதியாரால் குறிப்பிடப்பெற்றவர் யார் எனச் சிந்தித்து அறிஞர் சிலர் எழுதியுள்ளனர். இவ்வாறு எழுதியவர்கள் பலர் வியாபாரி மூலையைச் சேர்ந்த அருளம்பல சுவாமிகள்தான் பாரதியார் போற்றிய யாழ்ப்பாணத்துச் சாமி என்னும் கருத்தைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறிய கருத்தை ஒரு சிலர் மறுத்தும் உரைத்துள்ளனர். இருசாரார் கருத்தையும் ஆராய்ந்து பெற்ற ஒரு முடிவின் அடிப்படையிலேயேஆய்வுக் கட்டுரைத் தலைப்பை "பாரதி போற்றிய அருளம்பலசுவாமிகள்" எனத் துணிந்து அமைத்துள்ளோம்.

அ. ந. சந்தசாமி என்பவர் ஸ்ரீ லங்கா (ஆகஸ்ட் 1961) இதழில் 'ஞானம் வளர்த்த புதுவை' எனும் தலைப்பின் பாரதி கூறும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் யார் என்னும் வினாவை முதன் முதலாக

எழுப்பியிருந்தார். 76 அவர் தனது சிறிய கட்டுரையில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் யாரென்பதனை ஆராயவேண்டுமெனக் குறிப்பிட்டாரே ஒழிய எவரையும் யாழ்ப்பாணத்துச் சுவாமியாக இனங் காணவில்லை.

## அருளம்பல சுவாமிகளே அவர் எனும் கருத்து

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் யார் எனும் கேள்வி எழுந்ததன் பின்னர், அருளம்பல சுவாமிகளின் அன்பரான காலஞ்சென்ற சபாபதிப் பிள்ளையவர்கள் ''பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமி'' எனும் தலைப்பில் ஒரு கட்டுரையை (ஏப்பிரல் 1962) வெளியிட்டாரென்பதை முன்னர் கூறினோம். அருளம்பல சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்புக்களைக் கொண்டிருந்த இக் கட்டுரையில் அருளம்பல சுவாமிகளே பாரதியால் போற்றப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாமி என்னும் கருத்தினை வெளியிட்டார். தமது கருத்தினை 1939ம் ஆண்டு மார்கழி மாதம் தாம் முதன் முதலாகச் சுவாமியைத் தரிசிக்க நாகபட்டணம் சென்றபோது தமக்கு ஏற்பட்ட அனுபவ அடிப்படையிலேயே கூறியுள்ளார். 77 அங்கு புகையிரத நிலையத்திலிருந்து வெளியே வந்து ஒரு கரத்தைக் (வண்டி) காரனை ''அருளம்பல சுவாமியாருடைய இடத்துக்குக் கொண்டுபோய் விடு'' எனக் கேட்டபோது, ''அப்படி இந்த ஊரில் அருளம்பலச் சாமி என்று ஒரு சாமி இல்லையே'' எனக் கூறியவன் சொற்ப நேரத்தில் ''மவுன குரு சாமியா? , ''யாழ்ப்பாணத்துச் சாமியா?'' எனக் கேட்டான் எனவும் தான் ''ஆம்'' எனக் கூறியதாகவும் பின் அவன் தம்மை அருளம்பல சுவாமிகளின் இருப்பிடத்திற்குக் கொண்டு சென்று விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்ற போது வியாபாரி மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளையே யாழ்ப்பாணத்துச் சாமி என அங்கு மக்கள் அழைத்தனர் என்பது புலனாகின்றது.


1960 இல் திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்றிருந்த சி. மு. தம்பிராசா அவர்கள் அங்கு பொந்துக்குள் சுவாமி எனப்பட்ட சுவாமியைச் சந்தித்த போது பெற்ற செய்திகளும் அருளம்பல சுவாமிகளே பாரதியால் சுட்டப்பெற்ற யாழ்ப்பாணத்து சுவாமிகள் என்பதனை வெளிப்படுத்துகின்றது. எட்டயபுரத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட பொந்துக்குள் சுவாமியை மேற் குறிப்பிட்ட அன்பர் சந்தித்தபோது சுவாமிகள் அந்த அன்பரின் ஊரினைக் கேட்டார். அதற்குப் பருத்தித்துறை எனக் கூறியபோது பருத்தித்துறை

தானே யாழ்ப்பாணத்துச் சுவாமியின் ஊர்; அவர் பாரதியின் குருவாக இருந்தவர், தங்கம் போன்ற சுவாமி'' எனக் குறிப்பிட்டார்; என்பதனை அறியக் கிடக்கின்றது. [78]

## சுவாமிகளுக்கு எடுத்த விழா

அருளம்பல சுவாமிகளே பாரதியால் புகழப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாமி எனக் கொண்டு 07-05-1963 இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் ஒரு விழாவினை வியாபாரிமூலையில் எடுத்தனர் என்பதை முன்னர் கூறினோம். சங்கத்தினர் இவ்விழாவில் அருளம்பல சுவாமிகளின் சமாதி ஆலயத்தருகில் ''பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சாமியார் நினைவாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிறுவியது'' எனும் வாசகம் பொறித்த நடுகல் ஒன்றை நாட்டினர். [79] இவ்விழாவில் காலஞ்சென்ற கைலாசபதி அவர்கள், சிவத்தம்பி அவர்கள் போன்ற பல அறிஞர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவை முன்னிட்டு அன்றைய தினகரன் பத்திரிகையில் யாழ்ப்பாணத்துச் சுவாமியார் நினைவிதழ் ஒன்று வெளியானதும் ஏலவே குறிப்பிட்டோம். [80] இதில் கைலாசபதி அவர்களின் 'ஞானியரின் நட்புறவு' கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் 'இலக்கிய வளர்ச்சியில் இன்னொரு கட்டம்' தேவராசன் அவர்களின் 'ஈழம் தந்த இருமணிகள்' போன்ற கட்டுரைகளும் சுவாமிகளால் புதுவையில் வெளியிட்ட 'காற்றை நிறுத்தக் காணுவன் விடையை' எனும் துண்டுப் பிரசுரமும் வெளிவந்தன. இதில் மௌன சாமியின் வாழ்க்கைக் குறிப்புக்கள் மிகச் சுருக்கமாகவே சுட்டப்பட்டிருந்தன. இக்கட்டுரைகள் யாதும் காத்திரமான முறையில் அருளம்பல சுவாமிகளே பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சாமி என்பதனை நிலை நாட்டுவதற்குப் பொருத்தமான ஆதாரங்களை முன்வைக்கவில்லை.

யாழ்ப்பாணத்துச் சுவாமிக்கு எடுக்கப்பட்ட விழாவை முன்னிட்டுப் பல பத்திரிகைகள் அந்நாட்களில் செய்திகளை வெளியிட்டன. 'ஈழத்துச் சோமு'வின் புதுயுக எழுச்சி பாடும் எழுத்து இலக்கிய மாநாடு' எனும் கட்டுரையும் [81] டாக்டர் செ. சிவஞான சுந்தரத்தின் (நந்தி) 'மக்கள் இலக்கிய விழா' எனும் கட்டுரையும், [82] ஈழநாடு பத்திரிகைகளில் வெளிவந்தன. இவற்றில் யாழ்ப்பாணத்துச் சுவாமிக்கு முற்போக்கு எழுத்தாளரின் விழா பற்றிய செய்தி வெளியாகியிருந்ததே தவிர குறிப்பிடத்தக்க வகையில் அருளம்பல சுவாமிகளின் செய்திகள் எதுவும் வெளிவரவில்லை.



அருளம்பல சுவாமிகள் (1941)

## விழா எதிர்ப்பும் கருத்து மோதலும்

அரசியல் சார்புடைய சுதந்திரன் வார இதழில் (05-05-63) "பாரதியாருக்கு இழுக்கு ஏற்படுத்தவா பருத்தித்துறையில் மாநாடு-முற்போக்கு வாதிகளே இலக்கியத்திலும் உங்கள் இடக்கு வாதம் வேண்டாம்'' எனும் தலைப்பில் பண்டிதர் பரசுராமமூர்த்தியின் கட்டுரை பிரசுரமானது. "பாரதியின் ஞானகுருவெனக் கருதப்படும் யாழ்ப்பாணத்துச் சாமி யார்?'' என இக் கட்டுரை ஆராய்வதாகப் பத்திரிகை ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார். [83] இக் கட்டுரையில் புதுவையில் வாழ்ந்த பாரதிக்கு ஏற்பட்ட சாமியார்கள் தொடர்பு பற்றியும் பாரதியின் போதைப்பொருள் பாவனை பற்றியும் குறிப்பிட்டு, "உயரிய தகுதிக்குரிய ஞானகுருவாக யாழ்ப்பாணத்துச் சாமி இருக்கவில்லை'' என எடுத்தாளப்பட்டுள்ளது. இக்கருத்தைப் பாரதியின் சுவாமிகள் பற்றிய விளக்கத்தில் விரிவாகப் பின்னர் நோக்குவோம். யாழ்ப்பாணத்துச் சாமியார்களின் தெளிவான வரலாறு நம்மிடம் இல்லை எனவும் இது வரை யாழ்ப்பாணத்துச் சாமியார் யார் என ஆதார பூர்வமாக நிறுவவில்லை எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கட்டுரையாசிரியர் யாழ்ப்பாணத்துச் சாமியாரென எடுத்தாளமுற்படவில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் சமாதி வைக்கப்பெற்ற அருளம்பல சுவாமிகளின் சமாதியையிட்டு "எவனோ ஒரு ஊர் பேர் தெரியாத ஆளுடைய சமாதியைப் பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமியினது என்று மயங்க வேண்டாமெனக் கேட்பதிலிருந்து "அருளம்பல சுவாமிகளை நையாண்டி செய்வதாகவும் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என்பதை மறுப்பதாகவும் கொள்ளக்கிடக்கின்றது. பாமா ராஜகோபாலின் "பாரதிக்கு இழுக்குத் தேடிய பருத்தித்துறை மாநாடு'' எனும் 'மக்கள் குரல்' செய்தியும் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்தது.[84] இதில் சொல்லப்பட்ட கருத்து பண்டிதர் பரசுராமமூர்த்தியின் கருத்தை ஏற்றிருந்தது. இவ்விரு கட்டுரைகளும் அருளம்பல சுவாமிகள் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அல்ல என்பதை ஆதாரபூர்வமாக மறுத்ததாகக் கொள்ளமுடியவில்லை. அதேவேளை யாழ்ப்பாணத்துச் சுவாமி யாரென்பதையும் தெளிவாக்க முடியவில்லை.

ஞானபாஸ்கரன் அவர்களின் "பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சாமியார் பருத்தித்துறையைச் சேர்ந்தவரே'' எனும் கட்டுரை, பண்

டிதர் பரசுராமமூர்த்தியின் கட்டுரைக்குப் பதில் போல் சுதந்திரனில் வெளிவந்தது.[85] இக்கட்டுரை முன்னர் குறிப்பிட்ட சபாபதிப்பிள்ளையின் ''பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சாமி'' எனும் கட்டுரையில் சொல்லப்பட்டவற்றையே சுருக்கமாகத் தந்துள்ளது.

அருளம்பல சுவாமிகளே பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமியார் என்பதை ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் தாம் 9-5-63இல் 'யாழ்ப்பாணத்துச் சாமியார்' எனும் தலைப்பில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் ஏற்றிருந்தார்.[86] 15-5-63இல் வெளியான 'ஆத்மஜோதி' இதழின் அட்டையில் அருளம்பல சுவாமிகளின் படம் பிரசுரிக்கப்பட்டு பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமி என வெளிவந்தமையை முன்னர் குறிப்பிட்டிருந்தோம். 'பாரதியார்' எனும் கட்டுரை எழுதிய ஆத்மஜோதி ஆசிரியர் இராமச்சந்திரன் அவர்கள் அதில் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.[87]

## மீண்டும் அருளம்பல சுவாமிகளே அவர் எனக் கொளல்

சபாபதிப்பிள்ளையவர்கள் அருளம்பல சுவாமிகள்மீது பாடிய மூன்று பாடல் தொகுதிகளைக் கொண்ட 'புற்றளைக்கரசே' எனும் நூலை 1979ல் வெளியிட்டார். ஸ்ரீ லங்கா பத்திரிகையில் (1962) இவரால் வெளியிட்டிருந்த கட்டுரையும் இந் நூலில் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதே கட்டுரை 'பாரதியின் ஞானகுரு' எனும் தலைப்பில் ஆத்மஜோதியிலும் (1963) பிரசுரமாகியிருந்தது.

சி. மு. தம்பிராசா அவர்கள் 'பாரதி வர்ணித்த ஜெகத்தினில் உவமை இல்லாத யாழ்ப்பாணத்துச் சாமி' அருளம்பல சுவாமிகளே என 22.11.1981ல் வீரகேசரியில் அருளம்பல சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு எழுதியுள்ளார்.[88]

பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிய அம்பிகைபாகன் அவர்கள் இரு கட்டுரைகள் வீரகேசரியில் வெளியிட்டார். அவரது 'பாரதியும் பலஞான சித்தர்களும் பாரதி சந்தித்த யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்?' எனும் முதல் கட்டுரை 31.1 82இல் அருளம்பல சுவாமிகளின் படத்துடன் வெளிவந்தது.[89] இக்கட்டுரையில் பாரதிக்குச் சமயத்தில் இருந்த ஈடுபாடும் பாரதி அறுபத்தாறில் போற்றப்பட்ட குள்ளச்சாமி, கோவிந்தசாமி பற்றிய கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. இக்கட்டுரையைத் தொடர்ந்து 'பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சாமி' எனும் அவரது கட்டுரை அருளம்பல சுவாமி

களின் பிறிதொரு படத்துடன் வெளியானது.[90] பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சாமியே அருளம்பல சுவாமிகள் எனக் கருதிய அம்பிகைபாகன் அவர்கள் தமது கருத்திற்கு சபாபதிப்பிள்ளையின் எழுத்துக்களையே பெரிதும் ஆதாரமாகக் கொண்டிருந்தார். கட்டுரையின் ஆரம்பத்தில் 'சபாபதிப்பிள்ளை சுவாமியாருடன் பழகும் வாய்ப்புப் பெற்றவர், அவர் நாகபட்டினத்தில் வாழ்ந்த காலத்தில் அங்கு சென்று தரிசித்தவர். மேலும் தாம் அறியாத விஷயங்களை சுவாமிகளோடு தொடர்புடையவர்களிடம் விசாரித்து அறிந்தவர்' என அம்பிகைபாகன் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் சபாபதிப்பிள்ளை கூறிய கருத்துக்கள் முழுவதையும் அப்படியே ஏற்றுக் கொள்வதிலோ தள்ளுவதிலோ உள்ள சிக்கலை ஏலவே கூறியுள்ளோம்.

'தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதிக்கு முன்னும் பின்னும்' எனும் கட்டுரையில் ஆ. சபாரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணத்துச் சுவாமி என்று பாராட்டப்பட்டவர் அருளம்பல சுவாமிகளே எனக் குறிப்பிட்டுள்ளார்.[91] இதற்காதாரமாகத் தாம் சிறுவனாக இருந்தபோது அருளம்பல சுவாமிகள் சமாதி அடைந்த நான்காம் நாள் சென்று பார்த்ததாகவும் தமது ஆசிரியர் அங்கு 'அருளம்பல சாமியார் என்று அழைக்கப்பட்டவர் தமிழ்நாட்டுக்குச் சென்றபொழுது பாரதியாரின் கொள்கைகள் இவரைக் கவர்ந்ததால் பாரதியாருடன் ஈடுபாடுடையவராக இருந்தார். எனவே இவருக்கு யாழ்ப்பாணத்துச் சாமியார் என்ற பெயரும் பாரதியால் வைக்கப்பட்டதென்றும்' குட்டிப் பிரசங்கம் செய்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்து கலாசார அமைச்சினால் கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அண்மையில் வெளியிடப்பெற்ற இந்துக் கலைக்களஞ்சியத்தில் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி வியாபாரி மூலையைச் சேர்ந்த அருளம்பல சுவாமிகள் எனக் கொள்ளப்பட்டுள்ளது.[92] ஆதாரங்கள் எதுவும் காட்டப்படவில்லை என்றாலும் அக்கருத்தை இதுவரை யாரும் மறுத்ததில்லை.

## யாழ்ப்பாணத்துச் சாமி கடையிற் சுவாமிகள் எனும் கருத்து

அரசாங்க கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பத்தாம் வகுப்புச் சைவநெறிப் புத்தகத்தில் (8ம் பாடத்தில்) 'எங்கள் ஞானியார்' பற்றிக் குறிப்பிடுகையில் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள்,

யோகர் சுவாமிகள் என்றொரு ஞான பரம்பரையைப் பெற்றுள் ளோம் எனக் குறிப்பிட்டுள்ளது. [93] இலங்கையிலே இத்தகைய ஞானநிலையை அடைந்த ஒரு ஞான பரம்பரைக்கு வித்திட்டவர் யாழ்ப்பாணத்துக் கடையிற் சுவாமி என்பவராவர் என ஒரு பந்தி யில் ஆரம்பித்துவிட்டு, பாரதி அறுபத்தாறில் வரும் யாழ்ப்பாணத் துச் சுவாமி பற்றிய

''குவலயத்தின் விழிபோன்ற............
............ சர்வசித்தி''

எனும் (40ம் 41ம்) பாடல்களைத் தந்துள்ளனர். இதனைப் படிப்பவர்களுக்கு யாழ்ப்பாணத்து கடையிற் சுவாமிகளும் யாழ்ப்பா ணத்துச் சுவாமிகளும் ஒருவரே என்ற கருத்துத் தோன்றுகின்றது. இந்நூலை விட வேறு யாரும் இக்கருத்தைக் கூறியதாகத் தெரிய வில்லை. பாட நூல் கூறும் கருத்திற்கு ஆதாரம் எதுவும் தரப்பட வில்லை. ஆதலால் இங்கு ஒரு வினா எழுவது இயல்பே; பாடநூல் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா? பாடநூலில் கடையிற் சுவாமி கள் பற்றிக் கூறப்பெற்றுள்ள செய்திகளில் சுவாமிகளுக்கும் பாரதி யாருக்கும் ஏதேனும் தொடர்பு இருந்தமை பற்றி ஒன்றுமே இல்லை என்பதை நாம் முதற்கண் உளங்கொள்ளுதல் வேண்டும். மேலும் பாரதியால் பாடப்பெற்ற யாழ்ப்பாணத்துச் சுவாமி கடையிற் சுவாமியாக இருக்கும் நிலை அசாத்தியமானதே. கடையிற் சுவாமி களின் பிறப்புப் பற்றித் தெரியாவிடினும் அவர் ஏறத்தாழ 1862ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்ததாகவும் முப்பதாண்டுகள் யாழ்ப் பாணத்தில் பல அரிய செயல்கள் செய்ததாகவும் அறியக்கிடக்கின்றது. இவர் 1891 ம் ஆண்டு புரட்டாதிச் சதயத்தில் சமாதியடைந்தமை யும் அறிகிறோம். [94] அதேவேளை 1882 மார்கழியில் பிறந்த பார திக்கு சுவாமி சமாதியடைந்த போது ஏறத்தாழ எட்டு வயதே ஆகும். பாரதி புதுவையில் வாசம் செய்த காலம் 1908 முதல் பத் தாண்டுகளேயாகும். எனவே ''புதுவையில் அவனைக் கண்டேன்'' எனும் பாரதி, 1891ம் ஆண்டு சமாதியடைந்த கடையிற் சுவாமி களைச் சந்தித்திருக்க முடியாதென்பது தெளிவு.

## புதுவையில் அருளம்பல சுவாமிகள்

பாரதியார் 1908 முதல் 1918 வரையிலான பத்தாண்டு காலப் பகுதியைப் புதுவையில் கழித்தார் எனக் கண்டோம். 1908 ஆம் ஆண்டில் ''இந்தியா'' எனும் வாரப் பத்திரிகை மீது அன்றைய சர்க்கார் பார்வை திரும்பியதும், ''இந்தியா''வின் சட்டபூர்வமான ஆசிரியர் கைதானதும் பாரதியார் மீது வாரண்டு பிறப்பிக்கப்பட்டி

ருந்ததும் பாரதியின் புதுவை வருகைக்குக் காரணங்களாயிற்று. இப்பத்தாண்டுகளின் பிற்கூற்றுப் பகுதிகளிலேயே அருளம்பல சுவாமிகள் புதுவை சென்றுள்ளார். குறிப்பாக 1914ம் ஆண்டு நிஷ்டை முடித்து எழுந்த பின்னரேயே அருளம்பல சுவாமிகள் புதுவை சென்றிருத்தல் வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு ஏதும் இருக்கமுடியாது. பாரதி அறுபத்தாறு பிறந்ததும் 1916 ம் ஆண்டிலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்துச் சாமியும் பாரதி போற்றிய ஏனைய இரு சுவாமிகளும்

"பாரதி அறுபத்தியாறில்" பாரதி புகழ்ந்து பாடிய சுவாமிகள் யாழ்ப்பாணத்துச் சுவாமி, மாங்கொட்டைச் சுவாமி என அழைக்கப்படும் குள்ளச்சுவாமி, கோவிந்த சுவாமி எனும் மூவராவர். பாரதிக்கும் இம் மூன்று சுவாமிகளுக்கும் இடையிலுள்ள தொடர்புகள், அவர்களின் வாழ்க்கை வரலாறு என்பன தெளிவான முறையில் தமிழக அறிஞர்களால் ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும் இவர்களுள் குள்ளச்சாமி, கோவிந்த சாமி பற்றிய செய்திகள் சிலவற்றைத் தமிழக அறிஞர் சிலர் வெளியிட்டுள்ளனர். பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிய செய்திகள் எதுவும் தமிழக அறிஞர்களால் வெளிக்கொணரப்பட்டதை அறிய முடியவில்லை.

பாரதி அறுபத்தாறில் குள்ளச் சுவாமியாரைப் பற்றிப் பதினேழு பாடல்களும் கோவிந்த சுவாமியாரைப் பற்றிப் பதின்மூன்று பாடல்களும் பாடப்பெற்ற வேளை யாழ்ப்பாணத்துச் சுவாமியாரைப் பற்றி இரண்டு பாடல்களும், குவளைக்கண்ணன் புகழில் சில அடிகளுமே பாடப்பெற்றமையைக் காணலாம். இவற்றினூடாக சுவாமிகள் பற்றி முழுமையான செய்திகளை அறிய முடியவில்லை. குள்ளச்சாமி குள்ளமாகவும் கறுப்பாகவும் சிறிய தலையுடையவராகவும் இருந்தார். "இவர் கஞ்சா, கள் போன்றவற்றை அருந்தும் பழக்கமுடையவரெனினும் போதை ஏற்பட்டதாக, விபரீதம் நடந்ததாக எவரும் இதுவரை கூறியதில்லை". எனக் கோதண்டராமன் "பாரதியாரும் குளளச் சாமியும்" எனும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். 95 குள்ளச்சாமியின் தொடர்பாலேயே பாரதியாருக்குக் கஞ்சா சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டது இதனை யதுகிரி அம்மாள் எழுதிய "பாரதி நினைவுகள்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். சாமியார் பண்டாரம் முதலிய சிலரின் கூட்டுறவு இவரை (பாரதி) இவ்வழியில் இழுத்துச் சென்றது என்கிறார். 96 இங்ஙனம் ஐயர், பண்டாரம் என்று குறிப்பிட்டது குள்ளச் சாமியைத்தான். குள்ளச்சாமி எல்லாப் பண

டாரங்கள், பரதேசிகளைப் போல கஞ்சா சாப்பிட்டு வந்தார் என்பதும் பாரதியாருக்குக் கஞ்சா சாப்பிடும் வழக்கம் குள்ளச்சாமியின் பழக்கத்தால் ஏற்பட்டது என்பது தெரிந்த விஷயம் எனக் கோதண்டராமன் குறிப்பிட்டுள்ளார்.[97] பரலி சு. நெல்லையப்பர் "ஒரு சாமியாரின் கூட்டுறவால் புதுவையில் இருந்தபோது கஞ்சாப் பழக்கம் ஏற்பட்டது என்று மிகத் தெளிவாகத் தமது 'பாரதி புதையலில்' கூறியிருக்கின்றார்.[98] ஆனால் பாரதியாருக்கு ஏற்பட்ட கஞ்சாப் பழக்கத்திற்கும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளுக்கும் தொடர்பிருந்ததாக கூறுவதற்கு இன்று எழுத்திலே ஏதும ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. எனவே 'உயரிய தகுதிககுரிய ஞான குருவாக யாழ்ப்பாணத்துச் சாமி இருககவில்லை'' எனப் பண்டிதர் பரசுராம மூர்த்தி கூறியமைக்கு ஆதாரம எதுவும இருப்பதாகத்தெரியவில்லை.[99]

"தவநிறைந்த", "சாந்தநிலை அளித்த", "தெளிந்த ஞானி" எனப் பலவாறாகப் பாரதியால போற்றபபட்ட குளளச்சாமி சாதாரண மனிதன அலல எனபது தெளிவு. ஒரு சமயம் அரவிந்தர் "குளளச்சாமியைப் பாிகாசித்த சீடருககு அவர் (குள்ளச்சாமி) ஒரு சாதாரண மானிடா அலல என்றும் தனக்கு ஞானமார்க்கத்தில் ஒரு நெருககடியான தருணம சாமி தோன்றி ஒரு கோப்பையைக் கவிழ்த்துவிட்டுப பின் அதை நிமிர்த்தி விட்டுக குடுகுடு என்று சென்றார். அந்த சங்கேதத்திலால தாம் குறிபபுக்கள பெற்றதாகக் கூறியுள்ளமையை" அறியலாம.[100] "குளளச்சாமியார் உயர்ந்த ஞான சித்தா; பரமஹம்ஸ யோகி எனபதில தடையில்லை" எனச் சுத்தானந்த பாரதியாா தமது பாரதி விளக்கத்தில கூறுவதும் இங்கு நோககத்தககது.[101] குள்ளச்சாமியின் உயர்வினை அறிந்தே புதுவையை விட்டுச் சென்னை சென்ற பாரதி குளளச்சாமியை அங்கு வரவழைத்து வைத்திருந்தார் எனும் செய்தியும் அறியக்கிடக்கின்றது.[102]

ஆரம்பத்தில் கோவிந்த சுவாமி யானைக்காலோடு வந்து பாரதியின் காலில் விழுந்தபோது பாரதியார் நடுங்கினார் என்பதை அவரது நண்பர் குவளைக் கண்ணன் மூலம் அறிகிறோம்.[103] அதே பாரதி கோவிந்த சுவாமியை

"துன்பமுறு முயிர்க் கெல்லாந் தாயைப் போலே
சுரக்கு மருளுடைய பிரான் துணிந்த யோகி
அன்பனுக்குக் கடலையுந்தான் விழுங்கவல்லான்"

எனப் பாடிப் போற்றுகின்றமை காண்கிறோம்.[104]

பாரதி அறுபத்தாறில் சுவாமிகள் பற்றிய செய்திகள் 'குருக்கள் துதி' (குள்ளச் சாமி புகழ்) எனும் நான்கு பாடல்களுடன் ஆரம்பிக்கின்றன. அடைப்புக்குறிக்குள் குள்ளச்சாமி புகழ் என எழுதப்பட்டிருந்தாலும் முதல் பாடல் "குருக்கள் துதி" யைக் குறிப்பதாகக் கருத இடமுண்டு. குரு எனும் சொல் கள் விகுதி பெற்று குருக்கள் எனப் பன்மையில் இருப்பது மரியாதை குறிக்கும் ஒருமையெனக் கொள்ள முடியுமாயினும் இவ்விடத்து பாரதி தாம் போற்றிய சுவாமிகள் மூவரையும் "குருக்கள்" எனும் சொல்லால் குறிப்பிடுகின்றார் எனக் கொள்வதற்குப் போதிய சான்றுகளைக் காட்டக் கூடியதாக இருக்கின்றது. 'குருக்கள் துதி'யின் முதல் பாடல் பின் வருமாறுள்ளது.

"ஞானகுரு தேசிகனைப் போற்றுகின்றேன்
நாடனைத்துந் தானாவான் நலிவிலாதான்
மோனகுரு திருவருளால் பிறப்புமாறி
முற்றிலுநா மமரநிலை சூழ்ந்துவிட்டோம்;
தேனனைய பராசக்தி திறத்தைக் காட்டிச்
செதியினியல் காட்டி மனத்தெளிவு தந்தான்
வானகத்தை யிவ்வுலகி லிருந்து தீண்டும்
வகை யுணர்த்திக் காத்தபிரான் பதங்கள் போற்றி" 105

இப்பாடலில் முதலீரடிகள் குள்ளச்சாமியைச் சுட்டுவதாகவும் அடுத்த ஈரடிகள் யாழ்ப்பாணத்துச் சுவாமியைக் குறிப்பதாகவும் அடுத்து வரும் ஈரடிகள் கோவிந்தசுவாமியைச் சுட்டுவதாயும் இறுதியான ஈரடிகள் அனைவரையும் போற்றி நிற்பதாகக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். முதலீரடிகளில் வரும் 'ஞானகுரு' 'தேசிகன்', 'நலிவிலாதான்' ஆகிய சொற்றொடர்கள் குள்ளச்சாமியைச் சுட்டுகின்றமை நுணுகி ஆராயுமிடத்துப் புலப்படும். குள்ளச்சாமி புகழ், குருதரிசனம், உபதேசம் ஆகிய பகுதிகளில் குள்ளச்சாமியைச் சுட்டுவதற்கு, 'ஞானகுரு புகழினை...' 106 'மெய்யறியா ஞானகுரு 107 'சிதம்பர தேசிகன்' 108 'அப்பனே தேசிகனே' 109 'குற்றமற்ற தேசிகனும்' 110 'தேசிகன் கைகாட்டி' 111 'நலிவிலாதோன்' 112 என்னும் தொடர்களைப் பாரதியார் பயன்படுத்தியிருப்பதை காணலாம். மகாகவியான பாரதியார் கோவிந்தசாமியைக் குறிக்கவோ அல்லது யாழ்ப்பாணத்துச் சாமியைக் குறிக்கவோ மேற்குறிப்பிட்ட தொடர்களைப் பயன்படுத்தவில்லை என்பது தெளிவு. எனவே பாடலின் முதல் ஈரடிகளிலும் பாரதியார் குள்ளச்சாமியையே குறிக்கின்றார் என ஊகித்துக் கொள்ளலாம்.

"தேனனைய பராசக்தி திறத்தைக் காட்டிச்
சித்தினியல் காட்டி மனத்தெளிவு தந்தான்"

என வரும் அடிகள் கோவிந்த சாமியைக் குறிப்பதாகக் கொள்ள லாம். பராசக்தியின் உபாசகனான பாரதிக்கு பராசக்தி திறத்தைக் காட்டும் வகையில் சித்துசெயலைச் செய்தவர் கோவிந்த சுவாமிகளே யாவர். பாரதி வீட்டிற்கு ஒருநாள் சென்று அவரின் தந்தையை ஞாபகமிருககிறதோ எனக் கேட்டு விட்டுப் பின் தந்தையையும் தாயையும் தாமே காட்டி நின்றதாக அறிகின்றோம். இதனையே பாரதி

"... இறந்த வெந்தை
தன்னுருவங் காட்டினான் பின்னரென்னைத்
தரணிமிசைப் பெற்றவளின் வடிவமுற்றான்
அன்னவன் மாயோகி யென்றும் பரம ஞானத்
தனுபூதி யுடையனென்று மறிந்து கொண்டேன்."

எனக் கோவிந்தசாமி புகழில் பாடி நிற்பதைக் காண்க. 114 இதி லிருந்து "சித்தினியல் காட்டி மனத்தெளிவு தந்தான்" எனும் சொற்றொடருக்குரியவர் கோவிந்தசாமியே என்றால் தவறாகாது.

"மோனகுரு திருவருளாற் பிறப்பு மாறி
முற்றிலுநா மமரநிலை சூழ்ந்து விட்டோம்"

எனும் அடிகள் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளையே சுட்டுவதாகக் கருதவிடமுண்டு. முன்னர் காட்டிய நான்கடிகளும் குள்ளச்சாமியை யும் கோவிந்த சுவாமியையும் குறிக்கும் முறையில் "மோனகுரு" எனத் தொடங்கி நிற்கும் ஈரடிகள் யாழ்ப்பாணத்துச் சுவாமியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

இங்கு "மோனகுரு" என்பது யாழ்ப்பாணத்துச் சுவாமியைக் குறிக்கும் பெயர் எனக் கொள்வது பொருத்தமாகும். மூன்று சுவாமி களின் புகழ் பாடிய பாரதியார் இறுதியில் "பாங்கான குருக்களை நாம் போற்றிக்கொண்டோம்" எனக் கூறுவதிலிருந்து 'குருக்கள் துதி'யில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளும் உள்ளடங்குகின்றார் என் பது உணரற்பாலதாகும்.

## அருளம்பலசுவாமி - யாழ்ப்பாணத்துச்சுவாமி - மௌனசுவாமி மூவரும் ஒருவரே

பாரதியார் யாழ்ப்பாணத்துச் சுவாமியை ஒரேஒரு தடவை யாயினும் 'மோனகுரு' என அழைத்தமையைக் கருத்தில் கொள்ளு

தில் வேண்டும். இந்தியாவில் அருளம்பலசுவாமிகள் மௌனசுவாமிகள், மௌனகுரு எனப் பெரிதும் அழைக்கப்பட்டமையை முன்னரே விரிவாக கண்டோம். (மோனமும் மௌனமும் ஒரு பொருட் கிளவிகளாகும்). எனவே இதுகாறுங் கூறியவற்றால் அருளம்பல சுவாமிகளும் மோனகுருவும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளும் ஒருவரே எனக் கொள்ளுவது மிகப் பொருத்தமாகும். மேலும் சிலவற்றைக் கருதுவோம்.

பாரதியார் புதுவையில் நாற்பது நாட்கள் 'மௌனவிரதம், கடைப்பிடித்தமையை அறிகிறோம்.[115] மௌனசுவாமியின் உறவே சுறுசுறுப்பான பாரதியார் இவ்வாறு மௌனவிரதம் கொள்வதற்கு காரணமாயிற்றோ என எண்ணத் தூண்டுகின்றது. இது பற்றிச் சிந்தித்து மேலும் ஆதாரங்களைத் தேடுதல் வேண்டும்.

## யாழ்ப்பாணத்துச்சாமியின் குணாதிசயங்கள் அருளம்பல சுவாமிகளுக்குப் பொருந்துமாறு

பாரதி தாம் போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகளிடம் கண்ட தன்மை, இயல்புகள் ஆகியவை அருளம்பல சுவாமிகளுக்குப் பொருத்தமானவையோ என ஆராய்வது தெளிவு பெறுவதறகுத் துணையாகும்.

பாரதியார் யாழ்ப்பாணத்துச்சாமியை "தேவி பதம் மறவாத தீரஞானி" என வருணித்துள்ளார்; அருளம்பல சுவாமிகள் தேவி பக்தனாக வாழ்ந்ததுமன்றித் தமது ஞான குருவாக நாகை நீல லோசனி அம்மனைக் கொண்டிருந்தமையைக் கூறினோம். அருளம்பல சுவாமிகள் தமது பாடல்களில் 'குருவாக நின்ற கொடியே', [116] 'குருவான நாகையில் கொடியாக எழுகின்ற குமரியே நீலாதாஷியே [117] 'குருமூர்த்தி நாகை நீலாச்சியே' [118] எனப் பலவாறாகச் சுட்டுகின்றமை நாகை நீலலோசனியை அவர் குருவாகக் கொண்டு வாழ்ந்தமைக்குச் சான்று பகர்கின்றது.

நிஷ்டை கற்கச் சிதம்பரம் நாடி வந்த சுவாமிகள் தம்மை தேவி நீலாச்சி அங்கு செல்ல வேண்டாமெனத் தடுத்துத் தானே நிஷ்டை கற்பிக்க வந்தமையையும் நாகை நீலலோசனி அம்மன் பேரில் பாடிய தோத்திரப் பாடல் அறிவிப்பில் வெளிப்படுத்துகின்றார்; நிஷ்டையைப் பயில முற்பட்ட சுவாமிகள்,

"......நீ
பழக்கிடும் ஞான நிஷ்டையதை நான் படித்திலேன்
பரனேயன் னிஷ்டை செய்து
பலருக்கும் பேரின்ப நிலைகாட்டப் பணிக்குவாய்
பார் பூத்த புரையினானே" என

நீலாச்சியிடமே வேண்டுகின்றார். [119] "ஞான நிஷ்டையினைக் கற்று அதில் தேர்ச்சியடைந்த போது பரிசோதிக்க வேண்டிய காலமேற்பட்டதை அறிந்த சுவாமிகள், "சர்வ வல்லமையுள்ள பலசாலியாகிய பரமபதியே நிலைகொண்டு நில்லாது ஆடியலைந்து தோடுவிழத் தில்லைக் காளி எதிர்காண நடைபெற்றிருக்கும்போது சர்வ மூடனாகிற ஏழையேன் அவ்வளவு காரியம் செய்து காட்டி நிற்க முடியாது. இன்னும் பராபரமே அப்படிப்பைப் படித்துச் செய்ய அவரிடத்திறறானோ நியமித்து அவரையே தாங்கள் பரிசோதிக்க வேணும்" என அழகிய கற்பனை வளத்தோடு நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம் செய்தமையையும் காண்க, [120] தேவிபதம் மறவாத அவர் கொண்ட காதல் நீலலோசனி அம்மை ஊஞ்சல்–தாலாட்டு தோத்திரம் ஆக வெளிவந்தன. இவற்றைவிட சுவாமிகளின் அச்சிலேறாத "புலம்பல்கள்" எனும் ஆக்கமும் நீலாச்சியை நோக்கிப் பாடுவதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குருவான நீலாச்சியே தமக்கு உணவளிப்பதாகக் கூறும் சுவாமிகள் சிலவேளைகளில் நீலாச்சி செய்கின்ற குறும்புகளினை நாயகனிடம் கூறுகின்றார்.

"பலகாரம் படைப்பதெனப் பரிந்தபடி முகமன் செய்தாள்
சிலநேரம் பொறுத்துண்ணச் சென்றபோது மறைந்துவிட்டாள்
கலமாக வவளின் செயல் கண்டாயோ வம்மானே
நலமாக நஞ்சுசர்ப்பம் நகையாக அணிந்தவனே" [121]

எனும் பாடல் மூலம் தேவி உணவுண்ண அழைத்து விட்டு உணவை ஒளித்து வேடிக்கை செய்தமையை முறையிடுகின்றமையைக் காணலாம். இவ்வகையில் 'தேவி பதம் மறவாத தீர ஞானி' எனும் மகாகவியின் கூற்றுக்கு அருளம்பல சுவாமிகள் குறைவறப் பொருந்துவாரென்பது தெளிவு.

யாழ்ப்பாணத்துச் சாமி புகழ் கூற வந்த பாரதி அவரை 'சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாக' வும், 'சங்கரனாகவும் காண்கின்றார். மானிட நிலை கடந்த தெய்வ நிலைக்குரியவராக யாழ்ப்பா

ணத்துச் சாமியைக் காண்கின்ற வகையிலேயே "ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச் சாமி" எனக் குறிப்பிட்டார் எனக் கொள்ளக்கிடக்கின்றது.

இந்த ஜகத்தினில் உள்ள எந்த ஒரு பொருளையும் உவமையாகக் கொண்டு கூறமுடியாத அளவிற்கு உயர்ந்தவராகச் சுவாமிகள் விளங்கியது கண்கூடு. ஒவ்வொரு சுவாமிகளும் தங்களின் ஞான வாழ்விற்குப் பெரும்பாலும் ஒரு குருவின் துணைகொண்டே ஆன்மீக முதிர்ச்சியும் உயர்ச்சியும் பெற்றுள்ளனர். ஆன்மாக்களின் பக்குவ நிலைகளுக்கேற்ப இறைவன் மானிட வடிவில் குருவாய் வந்து ஆட்கொள்ளுவான் என்பது இந்து தத்துவம் எடுத்தாளும் போதனையாகும். இவ்வாறே தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்த சுவாமிகள் பலரை நோக்கும் போதும் இவ்வாறாகச் சற்குரு வாய்த்திருப்பது காணலாம். ஆனால் அருளம்பல சுவாமிகளின் வாழ்வினை உற்று நோக்குவோமாயின் இவருக்கு வாய்த்த குரு இதர சுவாமிகளுக்கு வாய்த்த குருவிலிருந்து வேறுபட்டமைவது குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும். இதர சுவாமிகளுககு வாய்த்த குரு மானிடர்களாக இருக்குமவேளை அருளம்பல சுவாமிகளுக்கு வாய்த்த குரு நாகை நீலலோசனி அம்மனாக இருப்பது குறிபபிடத்தக்கதொன்றே. சைவ நாயன்மார்கள் சிலரது வாழ்வில் இறைவனே நேரில் வந்து அருள் புரிந்தது போல் அருளம்பல சுவாமிகள் வாழ்வில் அம்மனே ஞான குருவாக வாய்த்தமை சுவாமிகளின் உயர்ந்த தன்மைக்குச் சான்றாகும்.

"சாத்துப்படி யினி வேண்டாம் முதல்வன் நிலை
சந்தித்தபடியாகக் காட்டட்டுமெங்கும்
எத்தலை ஞானிகளானோர் எவனையும்
எனக்கவன் நாயக னென்றிடவில்லை"

எனச் சுவாமிகள் குறிப்பிடுவதைக் காண்க. 122 இங்கு சுவாமிகள் இறைவன் தமக்கு குருவாக வேறு எவரையும் கொள்ளுமாறு பணிக்கவில்லை எனக் கொண்ட எண்ணம் தெளிவாகிறது.

இனி, "பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி" எனவும் சங்கரனென்றெப்போதும் முன்னே கொண்டு சரணடைந்தால் அது கண்டீர் சர்வசித்தி" எனவும் "அகத்தினிலே யவன் பாத மலரைப் பூண்டேன் அன்றேயப் போதேவீடதுவே வீடு" எனவும் பாரதி போற்றியமை அருளம்பல சுவாமிகளுக்குப் பொருந்துமாற்றினைப் பார்ப்போம் அருளம்பல சுவாமிகள் பிறரது துன்பங்கள பாவங்களைப் போக்கி நல்வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டுமெனும் குண இயல்பு

உடையவராக விளங்கியவராவர். சுவாமிகள் எப்போதும் ''என் செயலால் நடப்பதொன்றில்லை. அனைத்தும் அவன் செயலே'' எனக் கொண்டு வாழ்ந்தவர். எனினும் தன்னை நாடி வந்த அன்பர்களின் குறைகளை இறைவனுக்குப் பாரப்படுத்தி நற்கதியளிக்க முனைந்தமையை அறியலாம். [123] மேலும்,

"... எவரேனு மேகாந்தத்தில் யாவர் செய்வினையுந்தாங்கில்
பவமற விடு காட்டிற் பார்ப்போம் நாம் சாமி யென்றே''

எனச் சுவாமிகள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. [124] பிறரது வினைப்பலன்களையும் தாமே ஏற்று, அவர்களுக்குரிய பாவத்தை அற்றுப் போகச் செய்து சாமி எனும் வகையில் முத்தியான வீட்டின் பத்தினை வழங்க நினைத்தமை இப்பாடலடிகளூடாகத் தெளிவாகும். இப்போக்கே,

''நிஷ்டை செய்து பலருக்கும் பேரின்ப நிலை
காட்டப் பணிக்குவாய்'' எனச் [125]

சுவாமிகள் தேவியைக் கேட்பதற்குக் காரணமாயிற்றெனலாம்; இவ்வாறான இயல்பே பாரதியாரை ''பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி'' எனவும் பிறவாறாகவும் பாடியதற்குத் தூண்டியதெனக் கொள்ளலாம். மேலும்,

''காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்''

எனப்பாரதி குறிப்பிடுவதும் அருளம்பல சுவாமிகளுக்குப்பொருந்துவதாகும். அருளம்பல சுவாமிகள் புதுவையில் வாழ்ந்தவர் என்பது தெளிவாகும். சுவாமிகள் புதுவை சென்ற செய்தியை ஏலவே கூறினோம். மேலும் சுவாமிகள் வெளியிட்ட நூல்களுள் அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி, கற்புநிலை, அருவாச தேவ ஆரம், சீவதரிசி ஆகிய நான்கு நூல்களும், ஒரு துண்டுப் பிரசுரமும் புதுவையிலேயே அச்சிடப் பெற்றுள்ளன. மேலே சுட்டப்பெற்ற நான்கு நூல்களை விட கைவசம் கிடைக்காத நூல்கள் நான்கும் புதுவையிலேயே அச்சிடப்பெற்றிருக்கலாமெனக் கருத இடமுண்டு இதனைப் பின்னர் நூல் விபரங்கள் பற்றிய பகுதியில் பார்ப்போம். மேலும் புதுவையில் சுவாமிகளுக்கு நெருங்கிய அன்பர்கள் இருந்தார்கள் எனபது சுவாமிகளின் கடிதங்களூடாகத் தெரிகின்றது. இவற்றைக் கொண்டு சுவாமிகளே புதுவையில் பாரதி கண்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனக்கொள்ளல் பொருத்தமானதாகும்.

இதுகாறுங் கூறிய கருத்துக்களின் மூலம் பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகளின் இயல்புகள், தன்மைகள் அருளம்பல சுவாமிகளுக்குப் பெரிதும் பொருந்துகின்றன என்பது தெளிவாகின்றது.

## அருளம்பல சுவாமிகள் தம்மைத்தாம் யாழ்ப்பாணத்துச் சாமி எனக் கூறாதது ஏன்?

எமது பார்வைக்குக் கிட்டிய கைவசமுள்ள நூல்கள், கடிதங்கள் துண்டுப் பிரசுரங்கள் வழிப் பார்க்கின்றபோது சுவாமிகள் எவ்விடத்திலேனும் தாமே யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனக் குறிப்பிட்டாரில்லை. இந்நிலைக்கும் ஏதும் வலுவான காரணமுள்ளதோ என்பதனை ஆராய்வதும் இக் கட்டுரையின் நோக்கத்திற்கு பயன் பயப்பதாகும். சுவாமிகள் எழுதிய புத்தகங்களில், 'நாகைக மவுனசாமி என வழங்கும் யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு வியாபாரி மூலை சி.வே. அருளம்பலம்' எனும் விபரங்களையே குறிப்பிட்டுள்ளார்.

அருளம்பலசுவாமிகள் தம்மைத் தாம் யாழ்ப்பாணத்துச் சுவாமி என அழைக்க வில்லையே, ஏன் என ஒரு வினா எழலாம். சுவாமிகள் தம்மை யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என வழங்காமல் இருந்தமைக்கு அக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வேறும் பல சுவாமிகள் இருந்தமையே காரணமாயிருக்கலாம். அக்காலத்தில் கடையிற் சுவாமிகள் ( - 1891 ), பரமகுரு சுவாமிகள் (–1904), சின்னத்தம்பி சுவாமிகள் ( - 1908 ) , குழந்தைவேற் சுவாமிகள் ( – 1908 ), செல்லப்பா சுவாமிகள் ( – 1915 ), கனகரத்தினம் சுவாமிகள் ( – 1922 ), இ. அருளம்பல சுவாமிகள் (1865 – 1925) , மகாதேவ சுவாமிகள் (1874-1942) , நயினாதீவுச் சுவாமிகள் ( – 1949), யோகர் சுவாமிகள் ( 1872 – 1964), சின்னச்சுவாமிகள், கடைவரத சுவாமிகள், குடையிற் சுவாமிகள், பொன்னையன் சுவாமிகள் எனப் பல சுவாமிகள் யாழ்ப்பாணத்தில்வாழ்ந்தார்கள்.

அருளம்பல சுவாமிகள் தமது பெயரை 'யாழ்ப்பாணம் அருளம்பலம்' எனக் குறிப்பிடாது 'யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு, வியாபாரி மூலை' எனத் தமது பகுதியினைச் சேர்த்துச் சூட்டியதோடு தமது பெயரின் முதலெழுத்துக்கள் இரண்டினையும் சேர்த்து, அதாவது யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு வியாபாரி மூலை சி. வே. அருளம்பலம் எனத் தந்துள்ளார். இவ்வாறு குறிப்பிடுவதற்கு அக் காலத்தில் அருளம்பலம் எனும் நாமத்துடன் யாழ்ப்பாணத்தில் பிறிதொரு சுவாமிகள் இருந்தமையே காரணமென எண்ணத் தூண்டு

கின்றது. வண்ணார் பண்ணையில் உள்ள இராமநாதருக்கும் சின்னாச்சிப் பிள்ளைக்கும் மகனாக 1865 ஆம் ஆண்டு பிறந்த ஒருவர் அருளம்பலம் எனப் பெயர் பெற்றவர். இவர் மற்றிக்குலேஷன் பரீட்சையில் சித்தி எய்திப் பலகாலம் அரசாங்க உத்தியோகம் வகித்தவர். தமது நாற்பத்தொன்பதாவது வயதில், அதாவது 1914ம் ஆண்டில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார்.

பின்னர்,

> ''... கன்னெஞ்சற் கமுத மழை காட்டிவிட்ட
> தன்னிறமிங் காரறிவார் குழந்தை வேலா
> தஞ்சம் வேறிலையுனது சரணந்தானே'' 126

எனக் குழந்தைவேற் சுவாமிகளைக் குருவாகக் கொண்டு சுவாமியாகி 1925 ஆம் ஆண்டில் கீரிமலையில் சமாதியடைந்தார். எனவே யாழ்ப்பாணத்தில் தமது நாமம் கொண்ட சுவாமிகள் வேறு ஒருவரும் இருப்பதை அறிந்தே தம்மை யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு வியாபாரி மூலை கி. வே. அருளம்பலம் எனக் குறிப்பிட்டுக் கொண்டார் என எண்ண இடமுண்டு.

இதனைவிடத் தமது பிறப்பில் இடப்பட்ட பெயரில் உள்ள ஆழ்ந்த பொருள் நுட்பமும் 'அருளம்பலம்' எனும் நாமத்தினை வலியுறுத்தி வந்தமைக்கு ஒரு காரணமாக இருந்திருக்கவேண்டும். சுவாமிகள் 'அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி'' என ஒரு நூலை ஆக்கியதைக் கருதுக ''காற்றுக்கு அரு எனப் பெயர்; வெளியிற்கு அம்பலம் எனப் பெயர். காற்றும் வெளியும் ஒத்தபடி அருளம்பலம் எனச் சொல்லும் அந்தப் பெயர் அவர்களுக்கு ஒக்கமாட்டாது. அறிவாகிய சுத்தவெளியான சிவனுக்கு அருளம்பலம் என்றபெயர் இயல்பாகவுள்ளது' எனச் சுவாமிகள் கற்புநிலையில் அருளம்பலம் பற்றி விளக்கமளிக்கின்றார். 127 ''அருளம்பலம் அநாதியாகவுள்ளது. தன்மயமாய் இச்சையின் வடிவாய் அறிவின் பிரகாசமாயுள்ள சிவனாகும். ஓர் மறைப்புமில்லாத பரவெளியிற்கு அருளம்பலம் முடிவு பார்த்தபோது தன்னிசைவின் பிரதிபிம்பமே நெருப்பாகக் காணப்பட்டது. அப்போ முன்னிலைச் சுட்டாற் தன்நிலை குலைந்து அருளம்பலம் பல பிரிவாகப் பிரிந்துவிட்டது. அருளம்பலம் தன்னிற் பிரிந்து நீண்டபோது நெருப்பும் நீண்டது அருட்பிரகாசத்திற்கு வேறாக நீண்டது! என அருளம்பலம் பற்றிய ஆதிதோற்ற விபரம் சுவாமிகளால் எடுத்துரைக்கப்பட்டது காணலாம். 128 அருளம்பல நாமச் சிறப்புக் கருதியே சுவாமிகள்,

''என்பே ரென்றுமி சையரு ளம்பலம்
அன்று மப்பேரா யாடித்தி ரிந்திட்டேன்
இன்று மப்பேரா யிருந்தேயி ருக்கின்றேன்
நன்றும் தீதும் நாடாதென் நாட்டமே''

என அருவாச தேவ ஆரத்தில் சுட்டுகின்றார்.[129] மேலும்

''அருளம்ப லம்பேரென்ன வடுத்த பேர் தொடுத்தபேராய்
வருநாக பட்டணத்து மவுனமாம் சுவாமி யென்றார்
இரு போர்வை யெதற்கா வென்ன யாபாரி மூலையார்கள்
தருகற்கை வைத்த பேரே சமாதான மெங்கட்கென்றார்.[130]

எனக் கூறும் வகையில் பிறப்பில் வைத்த' அருளம்பலம்' எனும் பெயரையேஅவர் தொடர்ந்தும் வைத்திருக்கவிரும்பியமை புலனாகின் றது. இதுவும்தம்மை யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என அழைக் காமல் இருந்தமைக்குரிய காரணமாக இருந்திருக்குமானால் அது வியப்பில்லை.

அருளம்பல சுவாமிகளுக்கு அன்னிய தேசத்தில் – புதுவையில் வழங்கப்பெற்றது 'யாழ்ப்பாணத்துச் சாமி' எனும் பெயர். அவர் புதுவையில் வாழ்ந்த காலத்தில் அங்கு யாழ்ப்பாணத்தவர் அவர் ஒருவரே ஆக இருந்திருக்கலாம். எனவே அவ்வூர் மக்களுக்கு மட்டும் தான் அவர் யாழ்ப்பாணத்துச் சாமி ஆக இருந்திருப்பார். அப் பெயரைத் தாமும் ஏற்று வழக்கில் கொள்வதற்கு எந்தவிதமான அவ சியமும் அருளம்பல சுவாமிகளுக்கு இருந்ததில்லை எனவும் கொள் ளலாம்.

## தயக்கம் வேண்டாம்

இதுகாறும் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் ஒருங்கே கொள் ளும் போது பாரதியாரால் பாடப்பெற்ற யாழ்ப்பாணதுச் சுவாமி கள் அருளம்பல சுவாமிகளே எனக் கொள்வது தவறாகாது எனக் கொள்ளும் முடிவிலே எந்தவித தயக்கமும் கொள்ளவேண்டிய தில்லை யன்றோ? தக்க தடைகளும் சான்றுகளுடன் கூடிய மறுப்புக் களும் இருப்பின் அறிஞர் அவற்றைக் கூறுவதற்குத் தயங்க வேண்டா.

# இ. அருளம்பல சுவாமிகளின் நூல் விபரங்களும் நூற் பொருளமைவும்

## சுவாமிகளின் நூல்கள்

அருளம்பல சுவாமிகளின் பள்ளிக்கூடக் கல்வி பாரதியைப் போல ஐந்தாம் வகுப்புவரையே அமைந்திருந்தது. எனினும் அவர் பல நூல்களைக் கற்றுணர்ந்திருந்தமையை அவரது நூல்களூடாகக் காணமுடிகிறது. அவர் தாம் அறிந்து உணர்ந்த உண்மைப் பொருளை மற்றவர்களும் தெரிந்து பயன் பெற வேண்டுமெனக் கருதிப் பல நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார். அருளம்பல சுவாமிகளால் வெளியிடப்பட்ட நூல்களை முன்னர் குறிப்பிட்டோம். இவற்றுள் நான்கு நூல்கள் எமது கைக்குக் கிடைத்தில என்றோம். சுவாமிகளினால் வெளியிடப்பட்ட பதினான்கு நூல்களை இங்கு பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம். [131]

| நூலின் பெயர் | பிரசுரித்த இடம் | ஆண்டு | பக்கம் |
|---|---|---|---|
| 1. அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி | புதுவை ஜெகநாதம் அச்சுக்கூடம் | 1924 | 64 |
| 2. கற்புநிலை | புதுவை கலாநிதி அச்சுக்கூடம் | 1926 | 128 |
| 3. அநாதி போதம் | கைவசமில்லை | — | — |
| 4. சங்க வினாவிடை | கைவசமில்லை | — | — |
| 5. சைவ வினா விடை | கைவசமில்லை | — | — |
| 6. தர்க்க சாஸ்திரம் | கைவசமில்லை | — | — |
| 7. அருவாச தேவ ஆரம் | புதுவை கலாநிதி அச்சுக்கூடம் | 1927 | 40 |
| 8. சிவதரிசி | புதுவை கலாநிதி அச்சுக்கூடம் | 1927 | 20 |
| 9. நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம் | ஜனோபகார அச்சுக்கூடம் நாகபட்டணம் | 1928 | 16 |
| 10. நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல் | ஜனோபகார அச்சுக்கூடம் நாகபட்டணம் | 1928 | 16 |

| | | | |
|---|---|---|---|
| 11. கற்புநிலைச் சுருக்கம் | ஜனோபகார அச்சுக்கூடம் நாகபட்டணம் | 1929 | 68 |
| 12. பழைய வேற்பாட்டுடன் படிக்கை | ஜனோபகார அச்சுக்கூடம் நாகபட்டணம் | 1931 | 42 |
| 13. ஆதி புராணம் | காமினி அச்சுக்கூடம் கண்டி, சிலோன், | 1935 | 72 |
| 14. ஆதி நீதி | ஜனோபகார அச்சுக்கூடம் நாகபட்டணம் | 1941 | 15 |

மேற்கூறப்பட்ட நூல்களைவிட அச்சிலேறாத கையெழுத்துப் பிரதிகளாய் உள்ள சில நூல்களைப் பற்றி முன்னர் குறிப்பிட்டோம். அவற்றுள் 'மண்வின் வினாவிடை' நீலாச்சியை நோக்கிப் பாடப்பெற்ற 'புலம்பல்கள்' 'கலியாண வினா' போன்றன சுவாமிகளாலேயே தலைப்பிடப்பட்டு விளங்குகின்றன.[132] இவற்றைவிட சுவாமிகளால் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் பற்றியும் குறிப்பீட்டோம். இப்பிரசுரங்கள் சில 'தேகி' என்ற பெயரில் வெளிவந்திருக்கின்றன. தேகி என்ற பெயரில் தாமே சில பிரசுரங்களை வெளியிட்டதாகச் சுவாமிகள் தமது நூலில் சுட்டியிருத்தலும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.[133]

## நூல்கள் எழுந்த காலம்

சுவாமிகள் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றும் வெளியிடப்பெற்ற காலம் அந்த நூலில் சுட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்நூல்களை எழுதிய காலம் பற்றிய தகவல்கள் நூல்கள் எதிலும் தெரிவிக்கப்படவில்லை. சபாபதிப்பிள்ளை தமது கட்டுரையில் 'நூல்கள் அச்சிடப்பட்ட காலம் எழுதிய காலத்துக்கு மிகப் பிந்திய காலமே' எனக் குறிப்பிட்டுள்ளார்.[134] இது ஏற்கத்தக்கதாக உள்ளது. சுவாமிகள் அருவாசதேவ ஆரத்தின் முகவுரையில் "இச் சாத்திரங்களைப் பரமசிவன் அறியவேணும் என அச்சிட்டு வெளிப்படுத்த எத்தனித்த போது பல தடவையோடு இருக்க இடமும் நிதானமின்றிய ஆட்டமும் அலைப்பு வந்து அலைந்தபடி பல தொல்லைகள் பூண்டு கொண்டது" எனக் கூறுவதைக் கொண்டு[135] நூல்கள் எழுதிய காலத்திற்கும் அச்சிட்ட காலத்திற்கும் இடையில் இடைவெளி இருத்தல்சாத்தியம் என்பதனை உணரலாம்.

கையெழுத்துப் பிரதியில் விளங்குகின்ற 'மண்விண் வினாவிடை' 'புலம்பல்கள்' கலியாண வினா' என்பனவும் எக்காலத்தில் எழுதப் பெற்றன என்பதற்குச் சான்றுகள் கிடைத்தில.

'காற்றை நிறுத்தக் காணுவன் விடையை' எனும் தலைப்பிலமைந்த துண்டுப் பிரசுரம் புதுவையில் கலாநிதி அச்சகத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது, எனினும் எக்காலத்தில் வெளியிடப்பட்டதென்பதற்கான தெளிவான ஆதாரம் கிடைத்திலது. இத்துண்டுப் பிரசுரத்தில் பன்னிரண்டு சந்தேகத்திற்குரிய கேள்விக்களைகள் விடையை எதிர்பார்த்து 'தேகி' எனும் பெயரில் விளம்பரப்படுத்தப் பட்டுள்ளது. கற்புநிலைச் சுருக்கத்தில் சுவாமிகள், "நான் சிவனது உதவி பூண்டபடி உனது காரியதரிசியான சரஸ்வதியுடன் எதிரிட்ட படி தேகி விளம்பரத்திற் பன்னிரண்டு கேள்வி உன்னையே கேட்டேன்? எனக் குறிப்பிட்டுள்ளார்.[136] இத்துண்டுப் பிரசுரமும் பன்னிரன்டு கேள்விகளைத் தேகி எனும் பெயரில் விளம்பரப்படுத்தப்பட்டதால், அதுவே இதுவாயின், இத் துண்டுப் பிரசுர்ம் கற்புநிலைச் சுருக்கத்திற்கு அதாவது 1928 க்கு முற்பட்டதாகக் கருத இடமுண்டு. இதனைவிடக் 'காங்கிரஸ் நிச்சயம்' எனும் தலைப்பிலான துண்டுப் பிரசுரம் ஒன்று சுவாமிகளால் 1929 ல் வெளியிடப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.[137] எனினும் இப்பிரசுரத்திலடங்கிய விடயங்களைப் பற்றி விபரம் தெரியவில்லை. "யாழ்ப்பாணம்,வியாபாரி மூலை சின்னையா வேலுப் பிள்ளை பேரிலும் வதிரி ஆறுமுகம் மகன் இலட்சுமி பேரிலும் தோத்திரம்" எனும் துண்டுப் பிரசுரம் சுவாமிகளின் படத்துடன் வெளியாகியுள்ளது. இத் துண்டுப் பிரசுரம் 1931ம் ஆண்டு நாகபட்டணத்தில் வெளியிடப்பட்டதெனும் தகவல் சபாபதிப்பிள்ளை எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் கிடைக்கிறது.[138] இத்துண்டுப் பிரசுரம், தோத்திரம் எழுந்ததற்கான விளக்கத்தோடு பதினெட்டுப் பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

சுவாமிகள் எழுதிய நூல்களைப் பற்றிச் சபாபதிப்பிள்ளை தமது கட்டுரையில் குறிப்பிடுகையில் சந்தேக நிவிர்த்தி (1924), கற்புநிலை (1926), சிவதரிசி (1927) அருவாச தேவ ஆரம் (1927) ஆகிய நான்கையும் குறிப்பிட்டு விட்டு ஏனையவை 1928 ற்குப் பின்னரே அச்சிடப் பெற்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.[139] ஆனால் இக்கூற்று பொருத்தமானதாயில்லை. ஏனெனில் 1927 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட அருவாச தேவ ஆரத்தின் முகவுரையில் இதற்கு முற்பட எழுதப் பெற்ற அருணம்பலம் சந்தேக நிவிர்த்தி, கற்புநிலை, அநாதிபோதம், சங்கவினாவிடை, சைவவினாவிடை, தர்க்கசாஸ்திரம் ஆகிய ஆறுநூல்

ளைப்பற்றிசுவாமிகள் பிரஸ்தாபிப்பது காணக்கூடியதாயுள்ளது. 140 எனவே எமது கைக்கெட்டாத அநாதிபோதம், சங்க வினாவிடை, சைவ வினாவிடை, தர்க்க சாஸ்திரம் என்பன 1927 ஆம் ஆண்டுக்கு முற்பட்டவையாகக் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி, கற்புநிலை, சிவதரிசி, அருவாச தேவ ஆரம் ஆகிய நான்கு நூல்களும் புதுவையில் அச்சிடப்பெற்றன என்பதனைச் சபாபதிப்பிள்ளை தமது கட்டுரையில் சுட்டியுள்ளார். அதேவேளை ''ஏனைய நூல்கள் எல்லாம் நாகபட்டணத்தில் 1928ம் ஆண்டிலும் அதற்குப்பின்னும் அச்சிடப்பெற்றமை எனக்கூறியுள்ளார். 141 இது பொருந்தாத கூற்றாகும். முதற்கண் 1935 ல் பிரசுரிக்கப் பெற்ற ஆதிபுராணம் கண்டியில் உள்ள காமினி அச்சுக்கூடத்திலேயே அச்சிடப்பெற்றதாகும். மேலும் கைவசம் கிடைக்காத அநாதிபோதம் சங்கவினாவிடை, லசைவ வினாவிடை தர்க்க சாஸ்திரம் ஆகிய நூல்கள் 1927 ம் ஆண்டுக்கு முற்படவே அச்சிடப் பெற்றிருக்க வேண்டு மாதலாலும் அக்காலத்தில் அச்சேறிய சுவாமிகளது இதர நூல்கள் யாவும் புதுவையிலேயே அச்சிடப் பெற்றமையினாலும் மேற்சுட்டிய நான்கு நூல்களும் புதுவையில் அச்சிடப் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

சங்க வினாவிடையை ஒரு தனி நூலாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கற்புநிலைச் சுருக்க நூலில் ஒரு பகுதி சங்க வினா விடை எனத் தலைப்பிடப்பட்டு விளங்குகிறது. 142 இச்சங்க வினா விடைப் பகுதி எமது கைக்குக் கிட்டாத சங்கவினாவிடை நூலைத் தான் குறித்து நிற்கின்றதோ எனும் சந்தேகத்தை எழுப்புதல் நியாயமானதே. ஆனால் சங்க வினாவிடை 1927 ம் ஆண்டுக்கு முற்படப் பிரசுரமாகியுள்ள தன்மையால் 1928 ம் ஆண்டில் வெளி வந்த கற்புநிலைச் சுருக்கநூலில் ஒரு பகுதியாக வரும் சங்கவினா விடையைத் தனி நூலாகக் கொள்ள வாய்ப்பில்லை. மேலும் இந் நூல் முடிவில் கற்புநிலைச்சுருக்கம் முற்றிற்று எனக் குறிப்பிடப்பட் டிருப்பதனால் அதன் நடுப்பகுதியில் அமையும் சங்கவினாவிடை அந்நூலின் ஒருபகுதி என்பதே பொருத்தமுடையது.

## நூல்களின் பிரசுரம் ; யார் உதவினர் ?

சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை நோக்குங்கால் அவர் பண வசதி படைத்தவராக இருக்கவில்லை என்பது புலனாகும். இவ் வாறான நிலையில் சுவாமிகள் எவ்வாறு பலநூல்களை அச்சேற்றி னாரென்பது தெளிவாயில்லை. சுவாமிகளின் அன்பர்கள் எவரேனும் உதவி செய்தார்களோ என்பதும் தெரியவில்லை. நூல்களின் முக

வுரை, அறிவிப்பு, அறிக்கைகள் போன்றவற்றின் மூலமும் இதுபற்றி எதுவும் அறிய முடியவில்லை. அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி எனும் நூலைக் குறிப்பிட்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் எனும் தகவல் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளது.[143] இவர்கள் புத்தகப் பிரசுரத்தில் ஈடுபட்டு உதவினார்களோ என்பதும் தெரியவில்லை. ஆனால் அதில் சுட்டப்பட்ட புதுவை மரியநாத நாயக்கர் தொடர்ந்து பல காலமாக சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாரென்பது சுவாமிகளின் கடிதங்கள் சிலவற்றால் தெளிவு.[144]

இதேபோல 1935இல் வெளியான 'ஆதிபுராணம்' கண்டியில் அச்சிடப்பட்டதாகும். அக்காலத்தில் சுவாமிகள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தமைக்குச் சான்றுகள் எதுவுமில்லை. எனவே கண்டியில் வர்த்தகத் தொடர்புடைய வியாபாரிமூலை அன்பர்கள் உதவியுடன் அந்நூல் அச்சேறியிருக்கலாம் என எண்ணுவதற்கு இடமுண்டு.

## நூல்களின் அமைப்பும் பொருளும்

சுவாமிகள் ஆக்கிய நூல்களில் சில உரை நடைவடிவிலும் சில பாடல்களிலும் சில உரைநடையும் பாடலும் இணைந்த வகையிலும் அமைந்திருக்கின்றன. இந்நூல்களுள் அருவாச தேவ ஆரம், நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல்; நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம் எனும் மூன்று நூல்களும் இறைவனின் புகழ் பாடும் தோத்திரப் பாடல் தரத்தக்கதாக அமைந்துள்ளன. ஏனைய நூல்கள் ஆன்மீக, தத்துவ சார்பான விடயங்களை மையமாகக் கொண்டமைந்திருப்பது காணலாம். சுவாமிகளின் நூல்கள் பற்றி அம்பிகைபாகன் அவர்கள், ''யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பல செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் பெரும்பாலானவை நாகை நீலலோசனி அம்பாள் மீது பாடப்பட்டவையாகும்'' என்றார்[145] இக்கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. கிடைக்கப்பெற்ற நூல்கள் வழிநோக்கும்போது சுவாமிகள் ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு பாடல்கள் பாடியுள்ளார். அதில் தோத்திரப் பாடல் தரத்தன இருநூற்றைம்பதற்கும் குறைந்த தொகையேயாகும். மேலும் இவர் ''பொதுவான விஷயங்கள் பற்றி எழுதப்பட்ட சந்தேக நிவிர்த்தி, கற்புநிலை, சீவதரிசி, அருவாசதேவ ஆரம்'' எனும் நூல்கள்'' எனக் குறிப்பிடுவதும் பொருத்தமானதாயில்லை. முதல் மூன்றும் ஆன்மீக, தத்துவவிடயங்களைப் பேச இறுதியானது தோத்திர நிலைக்குரியதாக அமைந்துள்ளது. இனி சுவாமிகளின் நூல்களைப் பற்றித் தனித்தனியாகச் சுருக்கமாக நோக்குவோம்.

## அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி

இந்நூல் அருளம்பல சுவாமிகளால் முதல் பிரசுரிக்கப்பட்ட நூலாகும். இது உரைநடையில் அமைந்துள்ளது; தத்துவ விளக்கங்களை எடுத்தாளுகின்றது. இந்நூல் முகவுரையில், ''கடவுளின் முடிவைக் கண்டதில்லை; சாத்திரங்களின் முடிவைக் கண்டதில்லை, எம பயந் தீர்த்ததில்லை, நோய் பேய் அகற்ற முடியவில்லை, உண்ண, உடுக்க, அணிய வரவில்லை, வீடு கட்டவில்லை, புத்திர பாக்கியம் வேண்டியது வரவில்லை, தானியம் விளையவில்லை, மற்றப் பயிர்களைப் பலவிதமான பிராணிகள் இடையூறு செய்கிறது. புருஷனை பிரிந்த கவலை, பெண் பிரிந்த கவலை, வாது தீராக் கவலை, தாழ்ந்த சாதியில் பிறந்த கவலை, சமயவாதக் கவலை, சாதகத்திற்கு கிரகம் நல்ல இடத்தில் நில்லாக் கவலை, கடன் கவலை, முதலாகச் சொல்லப்பட்ட கவலைகளெல்லாவற்றையும், கேட்ட கவலையோடு கவலை நீங்கவும், வாதபித்த சேடத்தின் சுதந்திர நடப்பை நீக்கிச் சிவசுந்தரமாகத் தன்மயம் நிலை பெறுவதாக இந்தச் சாத்திரத்தை வெளியிட்டது'' எனச் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.[146] அருளம்பலம் ஆதி தோற்றிய விபரம், சிவநிலை, வாதமிறந்தது, பித்த மிறந்தது, சேடமிறந்தது, சோதிடவாதிடம், சாத்திர வாதிடம், பகுத்தறிவு, சைவம், மூடியது வேடம், சித்தயின சாலம், உத்தியோகம், தொழின்முறை, சிவனல்லாதது சிவமயம், காப்பது யார், அறிந்தது ஞானம், திறந்தது வெளிச்சம் எனும் அமிசங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. நூலின் இறுதியில் ராகுகேதுவின் விளக்கங்கள் படங்களுடன் சேர்ந்து 'உருச்சிலேடை' எனும் தலைப்பில் அமைந்துள்ளன. இவற்றின் பொருள் விளக்கம் போல் 'உருமாற்றம்' அமைந்துள்ளது.

ஔவையார் பாடல்கள், புராண, இதிகாச, தேவார திருமுறைகள், திருக்குறள், சித்தர்பாடல், சித்தாந்த வேதாந்த சாஸ்திரங்கள் பற்றிச் சுவாமிக்கிருக்கும் புலமை இந்நூலில் ஆங்காங்கு மேற்கோளாக எடுத்தாளுவதிலிருந்து புலனாகும்.

## கற்பு நிலை

இந்நூல் பாடல்களும் உரைநடையும் இணைந்த முறையில் அமைந்துள்ளது. பதிவிளக்கம் (285 பாடல்கள்), விதிவிளக்கம் (48 பாடல்கள்) சித்தி விளக்கம் (55 பாடல்கள்), பதார்த்த விளக்கம் (109 பாடல்கள்), அகண்டபரிபூரண விளக்கம்

(16 பாடல்கள்), எழுத்துற்பத்தி விளக்கம் (21 பாடல்கள்) எனும் விடயங்களை ஐந்நூற்றி முப்பத்தி நான்கு பாடல்களில் கூறி நிற்கிறது. இப் பாடல்களில் முதலிரண்டடிகள் பாங்கிமாரை விளித்துக் கேள்வி கேட்பதாகவும் மீதிரண்டடிகள் தலைவி மாரை விளித்துப் பதில் அளிப்பதாகவும் அமைந்துள்ளன. சுவாமிகள் முகவுரையில் ''சுழிமுனை நாடி தனது தான நிலையில் பற்றி நின்றாட அத்தான நிலையைத் தலைவியாக அமைத்தும் நடுத்தான விசை பக்கத் தானத்திற் தாக்க, அவ்விடத்திற் பற்றி நிற்கும் இடகலை, பிங்கலை நாடியைப் பாங்கி மாராக அமைத்தும் நடுவிசையும் பக்கவிசையும் இசை நடை கொள்ள என அங்கதான நிலை ஆடிக்கொண்ட பண்பட்டபடி இந்தக் கற்புநிலை பேசிக்கொண்டதும்'' எனக் குறிபபிடுதல் காணலாம்.[147] இந்நூற் பாடல்கள் பாலியல் தொடர்பான நிகழ்வுகளை மையமாகக்கொண்டு தத்துவார்த்தக் கருத்துக் களைக் கூறுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இந்நூலின் அரைவாசிப் பகுதி உரைநடையில் அமைந்துள்ளது. சிறு சிறு தலையங்கங்கள் இடப்பட்டு சத்திய விளக்கம், ஆட்டச் செயலின விளக்கம், அநாதி நின்ற நிலை, லீலை விளக்கம், மவுன விளககம், கற்கை விளககம், மங்கள விளக்கம், சீவ விளக்கம், கூலி விளக்கம், கவலைச் சூழலின் விளக்கம், தந்திர விளககம்,

திருமணக் காட்சி விளக்கம், சில்லறை விளக்கம், துறவு விளக் கம், ஞான விளக்கம், வினையெச்ச விளக்கம் எனப் பல வற்றிறகு ஆன்மீக நோக்கில் விளக்கமளிக்கப்பட்டுள்ளமையை காண லாம்.

அநாதி போதம்

சங்க வினாவிடை

சைவ வினாவிடை

தர்க்க சாஸ்திரம்

இந்நான்கு நூல்களும் எமது கைக்கு கிடைத்தில. அருவாச தேவ ஆரத்து முகவுரையில் இந்நான்கு நூல்களைக் குறிப்பிடுவதால் சுவா மிகள் அருவாச தேவ ஆரத்திற்கு (1927) முற்பட இவற்றை வெளி யிட்டிருக்க வேண்டும். இதுவரை தாம் இறைவன் புகழைத் தோத் திரமாகப் பாடாதமையால் இந்நூலை அவ்வாறு பாடியுள்ளதாக

அருவாச தேவ ஆரத்தில் சுட்டியமையினால் இந்நான்கு நூல்களும் அருளம்பல சந்தேக நிவிர்த்தி, கற்புநிலை போல சாத்திர நூல்களெனக் கருதவிடமுண்டு.

## அருவாச தேவ ஆரம்

இது பாடல்களும் உரைநடையும் கொண்ட நூல் ஆகும். இறைவன் தன்னைப் புகழ்ந்து தோத்தரிக்கும் படிப்பைப் படித்துக் கொள்ளவில்லை என்பதனால் எல்லாச் சாஸ்திர அடக்கத்தையும் உண்மையும் காட்டி நிலை பொருந்தத் தோத்திரமாகப் பத்துப் பதிகம் பாடியுள்ளதாக இந்நூல் முகவுரையில் சுவாமிகள் சுட்டியுள்ளார்.

இந்நூல் நூற்றைம்பது பாடல்களைக் கொண்டுள்ள பத்துப் பதிகமாகும். பரமசிவனின் முதற் பிள்ளையாகிய ஆகாய வெளியாருக்கு துதி கூறிய சங்கற்பததோடு விநாயகர் துதி, வைரவர் துதி வீரபத்திரர் துதி, முருகர் துதி என ஐந்து துதிப் பாடல்களையும் கொண்டுள்ளது.

பதிகத்தின் பின்னால் உரைநடையில் விளக்கம், அகத்தியர் வேதாரணி ப்யசுரனுக்கு விட்ட நிரூபகம், அகத்தியர் விளக்கிய விளக்கம் நாகபட்டணம் சாமியாகிய நான் கூறுவது, வினாவிளக்கம், இராக விளக்கம் முடிவு விளக்கம், எனும் தலைப்புக்களில் தமது வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல விடயங்களையும் இந்நூல் கொண்டுள்ளது.

## சீவதரிசி

இந்நூல் பாடல்களாக அமைந்துள்ளது. இந்நூலின் அறிவிக்கையில் "தேகத்துள் நிற்கும் அறிவொளியாகிய சீவனோடு வியாழன், சனி, செவ்வாயின் ஆவி கூடி நின்று சிறு பையன்களென ஆடித் தில்லாலைப் பாட்டுப் பாடுமிடத்தில் அவர்களைப் பெரியவரான மேகம், முகில், அவமதித்ததால் இருவினையுமொப்புப்பட நல்வினையாகிய பேரின்பத்தையும் தீவினையாகிய சிற்றின்பத்தையும் ஒப்புப்பண்ணி ஞான நிலையின் முடிவைத் தில்லாலைப் பாட்டாகப் பாடித் தரும்படி வியாழனும் சனியும், செவ்வாயும் கேட்டுக் கொண்டபடி பாடியது" எனக் குறிப்பிட்டுள்ளார். [143]

இந்நூல் ஈரடிகளைக் கொண்ட நூற்றெண்பத்தேழு தில்லாலைப் பாடல்களால் அமைந்தது. இந்நூல் பெரிதும் சாத்திர விடங்களைச் சார்ந்த போதிலும் சுவாமிகளின் வாழ்வின் சாயல்களையும் சில பாடல்களினூடாகக் காணலாம்.

## நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம்

இந்நூல் பாடல்களாக அமைந்துள்ளது. நாகையம்பதியில்வாழும் நீலாச்சியைப் போற்றிப் பரவும் பதினான்கு தோத்திரப் பாடல் களைக் கொண்டு இச்சிறுநூல் விளங்குகின்றது. தோத்திரப் பாடல் களில் முன் 'விநாயகர் துதி' அமைந்துள்ளது. இப்பதினான்கு பாடல் களில் பதினொரு பாடல்கள் பதினாறுசீரினாலமைய ஏனையவை நான்கு சீரினாலமைந்துள்ளன.

நீலாச்சியின் சிறப்பும் பெருமையும் கூறும் இப்பாடல்களில் நீலாச் சியே தமக்குக் குருவாக விளங்கியமையும் சுட்டப்பெற்றுள்ளது. நிஷ்டை கற்றுத் தேறிய சுவாமிகள் தம்மைப் பரிசோதிக்க வேண்டிய வேளையில் தமது ஏலாமை எண்ணிப் பரமபதியையே பரிசோதிக்க வேணும் என அம்பாளிடம் கேட்டுக் கொண்ட மனுவே இத் தோத் திர முடிவாகும் என இந்நூல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் 1958 இல் சுவாமிகளின் சிஷ்யர் விஸ்வலிங்க சுவாமிக ளாலும் 1979 இல் சுவாமிகளின் மற்றுமோரன்பர் பொ. சபாபதிப் பிள்ளையாலும் மறுபிரசுரம் செய்யப்பெற்றுள்ளது.[149] எனினும் இரு பதிப்புகளிலும் இரண்டாம் பதிப்பெனக் கூறப்பட்டுள்ளது.

## நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல்

இந்நூல் பாடல்களாக அமைந்துள்ளது. இவ்வூஞ்சல் பதிகம் முப் பத்தைந்து பாடல்களைக் கொண்டுள்ளது ஊஞ்சலிற்கு முன்னர் விநாயகர், சரஸ்வதி, இலட்சுமி, சுப்பிரமணியர், ராசராசேஸ்வரி, திருமால், சிவபெருமான், கடவுள் என எட்டுத்தனித்தனிப் பாடல் களிலான துதி அமைந்துள்ளது.

ஊஞ்சற் பாடலைத் தொடர்ந்து முப்பத்திரண்டு ஈரடிப்பாடல் களான தாலாட்டு உள்ளது.

நாகையில் வீற்றிருக்கும் நீலாச்சியை ஊஞ்சலில் ஆடவைப்ப தாய் ஊஞ்சற் பாடல்கள் அமைந்துள்ளன. இப் பாடல்களொவ் வொன்றும் "ஆடாய்" எனும் அடிமையினைப் பாடலடியில் கொண்டு அமைந்துள்ளன. தாலாட்டுப் பாடல்கள் நீலாச்சியின் சிறப்பு, பெருமை யினைச் சுட்டுவதுடன் ஓரிரு இடங்களில் சுவாமிகளின் நிலை, நாக பட்டணம் பற்றிய குறிப்புக்களையும் உள்ளடக்கிய நிற்கின்றன.

ஊஞ்சற் பாடல்களின் வகை, நோக்கிலிருந்து வேறுபட்டு அமையும் தாலாட்டு பிறிதொன்றாக எடுத்தாளத் தக்கது. இந்நூலை நாகை நீலலோசனி ஊஞ்சல் தாலாட்டு எனக் கொள்வது பொருத்தமுடையதாகலாம். இந்நூலும் சபாபதிப்பிள்ளையின் புற்றளைக்கரசேயில் மறுபதிப்புச் செய்யப்பெற்றுள்ளது.

## கற்புநிலைச் சுருக்கம்

இந்நூல் பாடல்களும் உரைநடையும் கொண்டது. இதில் நூற்றிப்பத்துப் பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் 'கற்புநிலை' நூலில் வரும் ''பாடல்களைப் போல முதலீரடிகள் பாங்கிமாரை விளித்துக் கேள்வி கேட்பதாயும் மற்றடிகள் தலைவிமாரை விளித்துப் பதில் அளிப்பதாயும் அமைந்துள்ளன. இப்பாடல்களினை அடுத்து சிவமகத்துவம் விளக்கப்பட்டுள்ளது.

இடையில் வரும் அறிவிக்கை, சுவாமிகளின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வினை விபரிப்பதாய் அமைந்துள்ளது. 'சங்கவினா விடை' எனும் தலைப்பிட்ட அடுத்துள்ள பகுதி இருபத்தேழு வினாக்களுக்கு அளிக்கப்பட்ட மூன்று தொகுதி விடைகளை மூன்று பாகமாகக் கொண்டமைந்துள்ளது. இவ்விடைகள் 1925–ஆம் ஆண்டு ஆடி மாதத்திற்கு முன் பெறப்பட்டதாகக் கொள்ளும் வகையில் 'குறிப்பு முடிவு' சுட்டுகின்றது.[150]

இக்கற்புநிலைச் சுருக்கத்தில் பராசக்தியின் வினாவும் பதியின் விடையும் இருபத்தொரு ஈரடிப்பாடல்களில் அமைந்துள்ளன. இறுதியில் தேச அறிவிப்பு அமைந்துள்ளது. கற்பு நிலை சுருக்கத்தில் அமைந்த பாடல்களிலும் கற்புநிலையில் அமைந்ததுபோல் பாலியல் செய்திகள் சுட்டப்பட்டிருத்தல் காணலாம்.

## பழைய வேற்பாட்டுடன்படிக்கை

இந்நூல் பாடல்களால் அமைந்துள்ளது. முதற்பகுதியில் 'கலியாணக் கும்மி' அமைந்துள்ளது. இக்கும்மியில் ஐம்பத்திமூன்று பாடல்கள் உள. அடுத்து தொண்டிச் சிந்து அமைந்துள்ளது. இதில் நூற்றி முப்பது சிந்துகள் உள. இவ்விரண்டு பகுதிக்கிடையில் 'சுயராச்சிய வெளிச்ச நிலை பரம்' சுருக்கமாக உரைநடையில் அமைந்துள்ளது.

இறுதியில் பதினாறு பாக்களால் ஆன யாபாரிமூலைப் புரா ணம், ஆல் நின்ற மணற் காண்டம், காளியம்மை உபதேச படலம் ஆகியவை உண்டு. இந்நூற் பயனைக் கூறும்பொழுது ''அநாதி முதலாகச் சர்வத்தையும் தானாகவே தாங்கி நின்ற துருவனை யாவருமோ சிலரோ நீக்கி விட்டுத் தம்தம் வசதிக் கேற்ற ஆதாரத்தைப் பிடித்துக் கொண்டார்கள். எவர்களாலும் முடிவு தாங்கப்படாது காணப்படும் காலத்தில் எமது சந்ததி யால் உலகத்தால் படும் வாதைகளுக்குப் பாத்திர வாதியாக மாட்டாதென்பதை விளக்கவே இந்நடை விதிகளைக் கூறியதா கும்'' என்கிறார்.[156] நூலின் பின்னிணைப்புப் போல ஸ்ரீமத் தம்பையா சுவாமிகள், உம்மணியம்மை, காரையடி மணல் இளையான், செட்டிஆறுமுகத்தார், பெம்பிளைச் சரவணமுத்து ஆகியோர் பேரில் துதிப்பாடல்கள் அமைந்துள்ளன. 'சாதிக்கும் சோதிக்கும் சாட்சி' யும் யாபாரி மூலைப் புராணமும் பல்வேறு செய்திகளைக் கூறுவதாயமைந்துள்ளன.

## ஆதி புராணம்

இந்நூல் பாடல்களாக அமைந்துள்ளது. நமக்குக் கிடைத்த நூல் பெரிதும் புத்தகப் பூச்சிக்கு இரையாகி உள்ளதால் நூலின் முழு இயல்பினையும் அறிய முடியவில்லை. நூலில் பதினைந்து பாகங்கள் (அத்தியாயங்கள்) உள்ளன. அநாதி நிலை கெட்ட சாஸ் திர மறுப்பு (323 பாடல்கள்), கலியாண விதிவிலக்கு (21 பாடல்கள்) கடவுள் விலக்கு (22 பாடல்கள்), ஆபரண விலக்கு (05 பாடல்கள்), கர்மாதி விலக்கு (06 பாடல்கள்), பொட்டுக் கட்டு விலக்கு (08 பாடல்கள்), திருநாள் விலக்கு (06 பாடல்கள்) சிவபோசிப்புக்காகிய பொருள் (31 சரடிப்பாடல்கள்), வைத்திய விசாரணை (10 பாடல் கள்), சோதிட விசாரணை (04 பாடல்கள்), நாம விலக்கு (07 பாடல்கள்), குறியீடு, புத்தர் வாதம், சமணர் வாதம், சாத்திர சூத்திரம், ஆகிய பாகங்கள் உள்ளமையை இந்நூலின் அட்டவணை வழி அறிகிறோம். இறுதியான நான்கிலும் எத்தனை பாடல்கள் உள்ளன என்பது தெரியவில்லை. கிடைத்த பாடல்களின் எண்ணிக்கை ஐநூற்றைம்பதாக உள்ளபோதிலும் பாடல்களைப் படித்துப் பெரி தும் பயன்பெற முடியாத நிலையில் பூச்சி அரித்திருப்பது துர் அதிர்ஷ்டமேயாகும்.

## ஆதி நீதி

இது பதினைந்து பக்கங்களைக் கொண்டு உரை நடையில் அமைந்த சிறிய நூலாகும். இந்நூலின் முகப்பிலேயே ''இது மேக

மண்டலத்திலிருந்து யாழ்ப்பாணம் யாபாரி மூலை காரையடி மணல் இளையதம்பி சொல்லியபடியும் மலையில் தட்டியர் சொல்லியபடியும் பூமி மேலிருந்து அருளம்பலம் கேட்டு எழுதியது எனச் சுட்டப்பட்டுள்ளது. முகவுரையில் நாகபட்டணம் ராமமூர்த்தி உபாத்தியார் கேட்டுக்கொண்டபடி இந்த நூல் பேசப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் உரைநடைப் போக்கு ஒருவரே விடாது தொடர்ந்து முன்னிலையில் நின்றுரையாற்றுவது போல அமைந்துள்ளது.

## ஞானியரின் ஞானத்தை உணர்தல்

இது காறும் கூறிய கருத்துக்கள் அருளம்பல சுவாமிகள் பற்றி அறிய விரும்புகிறவர்களுக்கும் ஆராய முற்படுபவர்களுக்கும் உறுதுணையாக நிற்கும் என நம்புகின்றோம். பாரதியாரால் 'யாழ்ப்பாணத்துச் சாமி' எனப் போற்றப்பட்ட அருளம்பல சுவாமிகள் இன்னமும் ஆய்விலே புறக்கணிக்கப்பட்டவராக இருப்பது விரும்பத்தக்கதன்று. நம்மை நாம் புரிந்துகொள்வதற்கு நம்மிடையே வாழ்ந்த ஞானிகளையும் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். அவர்களைப் புரிந்து கொள்வது மேற்போக்காக அமையக்கூடாது. அவர்கள் கூறிய தத்துவம் என்ன என்பதை விளங்குதல் வேண்டும். அருளம்பல சுவாமிகளின் தத்துவத்தை அவரது ஆக்கங்கள் மூலம் கண்டறிவது சாலவும் பயன்படும். அவரது தத்துவத்தை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஏனைய ஞானிகளின் தத்துவத்தோடு ஒப்பிட்டு நோக்குதலும் விரும்பத்தக்கது. இவை எளிதான காரியமன்று, எனினும் முயல்வோமாக; ஞானியரின் ஞானத்தை உணர்வோமாக.

# குறிப்புக்கள்

1. பிறர் ஞானிகள், சுவாமிகள், சித்தர்கள் எனக் குறிப்பிடுகின்ற அனைவரையும் பொதுவாக 'ஞானிகள்' என இக்கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது.

2. இவ் வரிசையில் பரமகுரு சுவாமிகள், பெரியானைக்குட்டிச் சுவாமிகள், முத்துக்குமாரசுவாமிகள் போன்றோர் பெயர்கள் நமக்குப் பழக்கமானவை

3. யோகர் சுவாமிகள் போன்றோரை இவ்வரிசையில் கொள்ளலாம்.

4. கடையில் சுவாமிகள், நவநாதசித்தர், சித்தானைக்குட்டிச் சுவாமிகள், நாகநாதச் சித்தர் போன்றோர் பெயரை இங்கே குறிப்பிடலாம்.

5. ''ஈழத்துச் சித்தர்கள்'' என்னும் நூல் முத்தையா. நா.(1980) எழுதியது. ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து' எனும் நூல் சண்முகசுந்தரம். த (1984) எழுதியது. இந்நூல்களில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றியோ வியாபாரிமூலை அருளம்பல சுவாமிகள் பற்றியோ யாதும் கூறாது புறக்கணித்தமை வியப்பிற்குரியதே. நா. முத்தையா 'ஆத்மஜோதி' யின் பதிப்பாசிரியராகக் கடமையாற்றியபோது 15. 5. 1963 இல் வெளியான இதழ் அருளம்பலசுவாமிகளின் படத்தினை அட்டையில் கொண்டிருந்ததுடன் 'பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்துக் சுவாமியின் புகழ்', பாரதி யார்? பாரதியின் ஞானகுரு', பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சாமி அருளம்பலம்' எனும் தலைப்பிலான கட்டுரைகளையும் பாடல்களையும் கொண்டு வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் 1942ல் வியாபாரி மூலையில் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் சுவாமிகள் சமாதி வைக்கப்பட்ட செய்தியை இவ்வாசிரியர்கள் அறியாதிருந்திருப்பார்கள் என எண்ணமுடியவில்லை.

6. கந்தசாமி: அ. ந., ஞானம் வளர்த்த புதுவை' ஸ்ரீ லங்கா இலங்கை அரசாங்கவெளியீடு. 1961. ஆகஸ்ட்.

7. சபாபதிப்பிள்ளை. பொ. 'பாரதியின் ஞானகுருவான யாழ்ப் பாணத்துச் சாமி' ஸ்ரீ லங்கா, இலங்கை அரசாங்க வெளியீடு 1962 சித்திரை.

8. இவ்விழாவில் கலந்துகொண்ட காலஞ்சென்ற கைலாசபதி. க அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவராவார். சிவத்தம்பி அவர்கள் தற் போதும் தமிழ்ப் பேராசிரியராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

9. இராமச்சந்திரன், க. ஆத்மஜோதி, ஆத்மஜோதிவெளியீடு, இலங்கை 15 - 5 – 1963.

10. மேற்குறிப்பிட்டது 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத் துச்சாமி'

11. முற்குறிப்பிட்டது.

12. நாகை மவுனசாமி, அருவாச தேவ ஆரம்; புதுவை கலாநிதி அச்சுக்கூடம் இந்தியா. 1927. ப. 3.

13. அருளம்பல மவுனசுவாமி, கற்புநிலை, புதுவை கலாநிதி அச்சுக் கூடம், இந்தியா 1926, ப. 98.

14. அருளம்பல மவுனசுவாமி, சின்னையா வேலுப்பிள்ளை பேரிலும் வதிரி ஆறுமுகம் மகள் இலட்சுமி பேரிலும் பாடிய தோத்திரம் (துண்டுப் பிரசுரம்) 1931 ல் நாகபட்டணத் தில் பிரசுரிக்கப்பட்டதென 28.06.1962 ல் பொ. சபா பதிப்பிள்ளை எழுதிய கடிதம் மூலம் அறிகின்றோம்.

15. சுவாமிகளினால் 'மண்விண் வினாவிடை', எனத் தலைப்பீடப் பெற்று பிரசுரமாகாத கையெழுத்துப் புத்தகத்தின் வழி அறி யக்கிடக்கின்றது.

16. 1880 ம் ஆண்டு, விக்கிரம வருட வாக்கிய பஞ்சாங்கத்தின் மூலம் (ப.8) 07.5.1880 சுவாமிகளின் பிறந்த நாளாகக் கொள்ள லாம்.

17. சபாபதிப்பிள்ளை. பொ. புற்றளைக்கரசே, கலாபவன அச்சகம், பருத்தித்துறை, 1979. முகவுரை.

18. மேற்குறிப்பிடப்பட்டது. கற்புநிலை ப. 127.

19. மேற்குறிப்பிட்டது. அருவாசதேவ ஆரம். ப.3.

20. குலரத்தினம், க.சி. வி. கல்யாணசுந்தர முதலியார்,
செந்தமிழ்ச் செம்மல் நா. கதிரைவேற்பிள்ளை, கதிரைவேற்
பிள்ளை கலாமன்றம்,
பருத்தித்துறை. 1969 ப. 14.

21. திருக்குறள், 2ம் குறள்.

22. நாகபட்டணம் மவுனசுவாமி, சீவதரிசி, புதுவை கலாநிதி அச்சுக்கூடம், இந்தியா 1927. 137ம் பாட்டு.

23. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவ ஆரம். ப.25

24. முற்குறிப்பிட்டது. ப. 25.

25. சுவாமிகளின் சகோதரியையும் பேத்தியையும் பேட்டி கண்ட போது (23. 9. 1991) பெறப்பட்ட தகவலாகும்.

26. அருளம்பலம் சி. வே, நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல், ஜனோபகார அச்சுக்கூடம், நாகபட்டணம். இந்தியா 1928. தாலாட்டு 31.

27. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவ ஆரம் 3 ம் பதிகம் 11 ம் பாடல்

28. முற்குறிப்பிட்டது. 3 ம் பதிகம் 5 ம் பாடல்.

29. நாகபட்டணம் மவுனசுவாமி, சீவதரிசி, 55ம் பாடல்.

30. மேற்குறிப்பிட்டது. நீலலோசனி அம்மை ஊஞ்சல் பாடல் 32

31. மேற்குறிப்பிட்டது – சீவதரிசி 56 ம் பாடல்

32. பரமுப்பிள்ளையின் மருமகளான திருமதி தியாகராசபிள்ளை பார்வதிப்பிள்ளை அவர்களைப் பேட்டிகண்டபோது பெறப் பட்டது.

33. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவஆரம் 3-ம் பதிகம் 1ம் பாடல்

34. முற்குறிப்பிட்டது. 3 ம் பதிகம் 9 ம் பாடல்.

35. முற்குறிப்பிட்டது. 3ம் பதிகம் 11 ம் பாடல்.

36. மேற்குறிப்பிட்டது. சிவதரிசி 144 ம் பாடல்.

37. அருளம்பலம் மவுனசுவாமி, ஆதிபுராணம், காமினி அச்சுக் கூடம், கண்டி, இலங்கை. ப. 24.

38. மேற்குறிப்பிட்டது. சிவதரிசி, 143 ம் பாடல்.

39. ஔவையார், நல்வழி 39 ம் பாடல்.

40. மேற்குறிப்பிட்டது. சிவதரிசி 145 ம் பாடல்

41. முற்குறிப்பிட்டது. 58 ம் பாடல்

42. முற்குறிப்பிட்டது. 59 ம் பாடல்.

43. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவ ஆரம் ப. 34

44. மேற்குறிப்பிட்டது. நீலலோசனி அம்மன் ஊஞ்சல் – தாலாட்டு 7.

45. சிவஞான சித்தியார் சுபக்கம் பாடல் 284.

46. மேற்குறிப்பிட்டது. சிவதரிசி, 143 ம் பாடல்.

47. நாகை மவுனசுவாமி. நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம், ஜனோபகார அச்சுக்கூடம், நாகபட்டணம், 1928. அறிவிப்பு ப. 3

48. முற்குறிப்பிட்டது. ப. 3

49. மேற்குறிப்பிட்டது. புற்றளைக்கரசே. ப. 31.

50. குலசபாநாதனுக்கு சபாபதிப்பிள்ளை அவர்கள் 28. 06. 1962ல் எழுதிய கடிதத்திலிருந்து அறியப்பெற்றது.

51. சுவாமிகளின் நூல்களினின்று இத் தகவல்களைப் பெறக்கூடிய தாகவுள்ளது. அருவாசதேவ ஆரத்தில் 'நாகபட்டணம்' சாமியாகிய நான் கூறுவது' எனும் பகுதிகளில் இத் தகவல் சுட்டப்பட்டுள்ளது. ப. 34 – 38.

52. அருளம்பல சுவாமிகளை நாகை மவுனசாமி, மௌனகுரு, யாழ்ப்பாணத்துச் சுவாமி, பூந்தோட்ட ஐயா என அழைக்

கப்பட்டமை சபாபதிப்பிள்ளையவர்களின் கட்டுரையில் சுட்டப் பட்டுள்ளது. பெரும்பாலான சுவாமிகளின் நூல்களில் நாக பட்டணம் மவுனசுவாமி அருளம்பலம்' எனச் சுட்டப்பட்டி ருத்தலும் காணலாம்.

53. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவ ஆரம். முகவுரை.

54. சுவாமிகளின் சகோதரி, பேத்தி ஆகியோரைப் பேட்டி கண்ட போது (23. 9. 91) பெற்ற செய்தி.

55. முற்குறிப்பிட்ட. பேட்டிமூலம் பெறப்பட்டதாகும்.

56. அருளம்பலம்பிள்ளை, பழையவேற்பாட்டுடன் படிக்கை. ஜனோபகார அச்சுக்கூடம், நாகபட்டணம், இந்தியா 1931. நொண்டிச் சிந்துப்பாடல் 62, ப. 24.

57. நாகபட்டணம் மவுனசாமி, கற்புநிலைச் சுருக்கம். ஜனோப கார அச்சுக்கூடம், நாகபட்டணம், இந்தியா. 1928. ப. 32.

58. மேற்குறிப்பிட்டது. அருவாசதேவ ஆரம். ப. 31.

59. முற்குறிப்பிட்டது. ப. 34

60. மேற்குறிப்பிட்டது. கற்புநிலை. ப. 70–71.

61. திருமூலர் திருமந்திரம். 1611ம் மந்திரம்.

62. சுவாமிகளின் பேத்தியைப் பேட்டிகண்டபோது பெறப்பட்ட செய்தியாகும்.

63. பரமுப்பிள்ளையின் மருமகளான திருமதி தியாகராசபிள்ளை பார்வதிப்பிள்ளையிடம் பேட்டி மூலம் பெறப்பட்டது.

64. சுவாமிகள் திகதி சுட்டாது சபாபதிப்பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில் சுட்டப்பட்டிருக்கிறது.

65. மேற்குறிப்பிட்டது. அருவாசதேவ ஆரம். 5ம் பதிகம் 5ம் பாடல்

66. முற்குறிப்பிட்டது. 5ம் பதிகம் 6ம் பாடல்.

67. மேற்குறிப்பிட்டது. பழையவேற்பாட்டுடன்படிக்கை ப. 25.

68. சபாபதிப்பிள்ளைக்கு அருளம்பலசுவாமிகள் நாகபட்டணத்திலிருந்து 1940 ல் எழுதிய கடிதத்தில் "நான் ஜெனன தேசம் வந்து பட்டபாடும் கெட்ட கேடும் என் உள்ளத்திற்கே தெரியும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

69. 29.4.1940, 15 6.1940 திகதிகளில் சபாபதிப்பிள்ளை எழுதிய கடிதங்களுக்கு அக்கடிதங்களின் பின்புறத்தில் சுவாமிகள் எழுதிய பதில் மூலம் பெறப்பட்டன.

70. வரத கணபதிப்பிள்ளை. தி. தணிகாசபிள்ளை. ஆ ந., சபாபதிப்பிள்ளை, போன்றோர் நாகபட்டணம் சென்று சுவாமியைச் சந்தித்து ஆசிபெற்றமையை குறிப்பிடலாம்.

71. மேற்குறிப்பிட்டது. புற்றளைக்கரசே. ப. 33.

72. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவ ஆரம். 3ம் பதிகம், 10ம் பாடல்.

73. பாரதியார் பாடல்-பாரதி அறுபத்தாறு பாடல்கள் 40, 41 இப்பாடல்களைத் தவிர, ஒரு கட்டுரையிலும் பாரதி யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிப் பெயர் குறிப்பிடாது கூறியுள்ளார் என க. கைலாசபதி கருதுகின்றார். காண்க. தினகரன் மே. 7, 1963. இது போதிய ஆதாரமற்ற ஓர் ஊகமாதலால் பாரதியின் அக்கட்டுரையை நாம் கொள்ளவில்லை.

74. முற்குறிப்பிட்டது. 42ம் பாடல்.

75. முற்குறிப்பிட்டது 43ம் பாடல்.

76. மேற்குறிப்பிட்டது. கந்தசாமி அ. ந. ப. 6-7

77. மேற்குறிப்பிட்டது. பொ. சபாபதிப்பிள்ளை-புற்றளைக்கரசே ப. 31.

78. வியாபாரிமூலையைச் சார்ந்த சி. மு. தம்பிராவைப் பேட்டி கண்டபோது பெறப்பட்டதாகும்.

79. இந் நடுகல் தற்சமயம் அங்கில்லை. ஆனால் சி. நா. சொக்கநாதபிள்ளை எழுதிய கைபெழுத்துப் பிரதியிலான நூலிலிருந்து பெறப்பட்ட தகவலாகும்.

80. யாழ்ப்பாணத்துச் சாமியார் நினைவிதழ் தினகரன் பத்திரிகை 7.5 1963 ப. 3-5

81. ஈழத்துச் சோமு - புதுயுக எழுச்சிபாடும் எழுத்து இலக்கிய மாநாடு, ஈழநாடு பத்திரிகை 5.5.1963. ப. 8.

82. சிவஞானசுந்தரம் - மக்கள் இலக்கிய விழா - ஈழநாடு பத்திரிகை 6.5.1963 ப.4.

83. சுதந்திரன் பத்திரிகை 5.5.1963 ப. 2ம் 15ம்.

84. முற்குறிப்பிட்டது. 26.5.1963. ப. 2ம் 15ம்

85. முற்குறிப்பிட்டது 19.5.1963 ப. 2ம் 15ம்

86. ஈழநாடு பத்திரிகை. 09.5.1963ம் ப. 4.

87. இராமச்சந்திரன். க, ' பாரதியார் ' ஆத்மஜோதி 15-5-1963. ப. 242.

88. வீரகேசரி பத்திரிகை, 22-11-1981. ப. 2

89. வீரகேசரி பத்திரிகை வார வெளியீடு 31-01-1982 ப. 13ம் 15ம் இக்கட்டுரையுடன் அருளம்பல சுவாமிகள் மகாசமாதி அடைவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படமும் பிரசுரமாகியிருந்தது.

90. வீரகேசரி பத்திரிகை வாரவெளியீடு. 07-02-1982 ப. 13. இக்கட்டுரையுடன் அருளம்பல சுவாமிகள் நிட்டையிலிருந்து எழுந்தபின்னர் எடுத்த படமும் பிரசுரமாகியிருந்தது.

91. தினகரன் வாரமஞ்சரி 31-01-1982 ப. 11.

92. பூலோகசிங்கம். பொ, இந்துக்கலைக் களஞ்சியம்-பகுதி 1 இந்து சமய இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை. 1990 ப. 77.

93. சைவநெறி, 10ம் வகுப்பு. கல்விவெளியீட்டுத் திணைக்களம். 1985 8ம் பாடம் ப. 40.

94. குலரத்தினம். க. சி, கடையிற் சுவாமிகள், மில்க்வைற் வெளியீடு, யாழ்ப்பாணம் 1975 ப. 14.

95. கோதண்டராமன். ப, புதுவையில் பாரதி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 1980 ப. 153.

96. யதுகிரி அம்மாள், பாரதி நினைவுகள், அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட் சென்னை 1958 ப. 72.

97. மேற்குறிப்பிட்டது கோதண்டராமன். ப. 153.

98. முற்குறிப்பிட்டது.

99. மேற்குறிப்பிட்டது – சுதந்திரன் 5–5–1963.

100. மேற்குறிப்பிட்டது. கோதண்டராமன் ப. 155.

101. சுத்தானந்த பாரதி, பாரதி விளக்கம், பாரதி பிரசுராலயம், இந்தியா 1937. ப. 29.

102. மேற்குறிப்பிட்டது. கோதண்டராமன் ப. 154.

103. பத்மநாபன், ரா. அ. தொகுப்பு, பாரதியைப் பற்றி நண்பர்கள். (குவளைக் கிருஷ்ணமாச்சாரியார் – பாரதி பாடிய கோவிந்த சாமி) வானதி பதிப்பகம் சென்னை. 1982 ப. 81.

104. பாரதி பாடல் பாரதி அறுபத்தாறு. பாடல் 38.

105. முற்குறிப்பிட்டது. பாடல் 19.

106. முற்குறிப்பிட்டது. பாடல் 23.

107. முற்குறிப்பிட்டது. பாடல் 29.

108. முற்குறிப்பிட்டது. பாடல் 20.

109. முற்குறிப்பிட்டது பாடல் 24.

110. முற்குறிப்பிட்டது. பாடல் 26

111. முற்குறிப்பிட்டது பாடல் 28

112. முற்குறிப்பிட்டது பாடல் 34.

113. மேற்குறிப்பிட்டது குவளை கிருஷ்ணமாச்சாரியார்; ப.84

114. பாரதிபாடல் - பாரதி அறுபத்தாறு. பாடல் 39

115. மேற்குறிப்பிட்டது. யதுகிரி அம்மாள் ப. 74 - 75.

116. மேற்குறிப்பிட்டது நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம் 7ம் பாடல்.

117. முற்குறிப்பிட்டது 8ம் பாடல்.

118. முற்குறிப்பிட்டது 9ம் பாடல்.

119. முற்குறிப்பிட்டது 4ம் பாடல்.

120. முற்குறிப்பிட்டது அறிவிப்பு.

121. மேற்குறிப்பிட்டது அருவாச தேவ ஆரம். 9ம் பதிகம் 10ம் பாடல்.

122. மேற்குறிப்பிட்டது பழைய வேற்பாட்டுடன்படிக்கை ப. 25.

123. சுவாமிகளின் சகோதரி, பேத்தியுடனான பேட்டியின்போது பெறப்பட்டதாகும்.

124. மேற்குறிப்பிட்டது. வேலுப்பிள்ளை பேரிலும் இலட்சுமி பேரிலும் தோத்திரம் பாடல் 16.

125. மேற்குறிப்பிட்டது. நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம். பாடல் 4.

126. கந்தையா, மு ''குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும்'' இ. அருளம்பல சுவாமிகளின் அகராதிச் சரணமாலை 2ம் பாடல் கீரிமலை குழந்தைவேற் சுவாமிகள் சமாதி தர்ம பரிபாலனசபை. 1965. ப. 66.

127. மேற்குறிப்பிட்டது. கற்புநிலை. ப. 114.

128. சாமி பட்டணம் மவுன சுவாமி, அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி, ஜ நாதம் பிரஸ், இந்தியா, 1924. ப. 3.

129. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவஆரம், 10ம் பதிகம் 19ம் பாடல்.

130. மேற்குறிப்பிட்டது. வேலுப்பிள்ளை பேரிலும் இலட்சுமி பேரிலும் தோத்திரம். பாடல் 5.

131. சமீப காலத்தில் இந்து கலாசார அமைச்சினால் வெளியிடப் பெற்ற இந்து கலைக்களஞ்சியத்தில் (ப. 77) அருளம்பல சுவாமிகள் இயற்றிய நூல்கள் ஆறு எனக் கூறப்பெற்றுள்ளமை தவறாகும்.

132. இக்கையெழுத்துப் பிரதிகள் சுவாமிகளினாலேயே எழுதப் பெற்றுள்ளமையை அவரது கடிதங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தெளிவாகப் புலனாகின்றது.

133. மேற்குறிப்பிட்டது, கற்புநிலைச் சுருக்கம். ப. 32.

134. மேற்குறிப்பிட்டது. சபாபதிப்பிள்ளை—புற்றளைக்கரசு ப. 32.

135. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவ ஆரம். முகவுரை.

136. மேற்குறிப்பிட்டது. கற்புநிலைச் சுருக்கம் ப. 32.

137. ''காங்கிரஸ் நிச்சயம்'' துண்டுப்பிரசுரம் அரசியற் சார்பான கருத்துக்களை எடுத்தாண்டதாகச் சொல்லப்படுகின்றது.

138. 28-06-1962ல் குலசபாநாதனுக்குச் சபாபதிப்பிள்ளை எழுதிய கடிதத்தின் மூலம் பெறப்பட்ட தகவலாகும்.

139. மேற்குறிப்பிட்டது. சபாபதிப்பிள்ளை, புற்றளைக்கரதே. ப. 32.

140. மேற்குறிப்பிட்டது. அருவாச தேவ ஆரம் – முகவுரை.

141. மேற்குறிப்பிட்டது. சபாபதிப்பிள்ளை, புற்றளைக்கரசே.ப. 32

142. மேற்குறிப்பிட்டது. கற்புநிலைச் சுருக்கம் ப. 33.

143. மேற்குறிப்பிட்டது அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி நூலில் அ. மரியநாத நாயக்கர் நெல்லித்தோப்பு – புதுச்சேரி எனும் முகவரி சுட்டப்பட்டுள்ளது. இதனைவிட வேதராணியத்தில் உள்ள இருவரின் முகவரியும் குறிக்கப்பட்டுள்ளது ப. 58.

144. இக்கடிதம் பற்றி சபாபதிப்பிள்ளை எழுதிய 'பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமி' எனும் கட்டுரையி லும் இடம்பெற்றிருப்பது காணலாம்.

145. மேற்குறிப்பிட்டது. அம்பிகைபாகன், பாரதி பாடிய யாழ்ப் பாணத்துச் சாமி (வீரகேசரி 7.2. 1982) ப. 13.

146. மேற்குறிப்பிட்டது. அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி. ப. 2

147. மேற்குறிப்பிட்டது. கற்புநிலை. ப. 2.

148. மேற்குறிப்பிட்டது: சிவதரிசி, ப: 2.

149. விஸ்வலிங்க சுவாமிகள் 'நாகை நீலாதாட்சி அம்மன் தோத்திரம் 2 ம் பதிப்பாகப் பதிப்பித்ததுடன் அருட்சந்திரன்' என்னும் செய்யுள், உரைநடையிலான சிறிய வெளியீட்டையும் இணைத்து 1958 ல் வெளியிட்டார். 1979 ல் 'புற்றளைக்கரசே' யில் நீலலோசனி அம்மன்தோத்திரத்தைப் பதிப்பித்த சபாபதிப்பிள்ளையவர்களும் தனது பதிப்பு 2ம் பதிப்பு எனச் சுட்டியுள்ளார். பின்னவரின் பதிப்பு 3 ம் பதிப்பாக அமைந்திருக்க வேண்டும்.

150. மேற்குறிப்பிட்டது: சற்புநிலைச் சுருக்கம், ப. 33

151. மேற்குறிப்பிட்டது: பழையவேற்பாட்டுடன் படிக்கை, ப. 35.

# உசாத்துணை நூல்கள்

## 1. நூல்கள்


அருளம்பல சுவாமிகள் — அருளம்பலம் சந்தேக நிவர்த்தி, புதுவை ஜெகநாதம் பிரஸ், இந்தியா, 1924.

கற்புநிலை, புதுவை கலாநிதி அச்சுக்கூடம், இந்தியா, 1926.

அருவாச தேவ ஆரம், புதுவை கலாநிதி அச்சுக்கூடம், இந்தியா 1927.

சிவதரிசி, புதுவை கலாநிதி அச்சுக்கூடம், இந்தியா, 1927.

நாகை நீலலோசினி அம்மன் பேரில் தோத்திரம், ஜனோபகார அச்சுக்கூடம், நாகபட்டணம், இந்தியா 1928.

நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல், ஜனோபகார அச்சுக்கூடம், நாகபட்டணம், இந்தியா, 1928.

கற்புநிலைச் சுருக்கம், ஜனோபகார அச்சுக்கூடம், நாகபட்டணம், இந்தியா, 1928.

பழையவேற்பாட்டுடன் படிக்கை, ஜனோபகார அச்சுக்கூடம், நாகபட்டணம், இந்தியா, 1931.

ஆதிபுராணம், காமினி அச்சுக்கூடம், கண்டி, சிலோன், 1935

ஆதிநீதி, ஜனோபகார அச்சுக்கூடம் நாக பட்டணம், இந்தியா, 1941.

இராமநாத பிள்ளை, ப. — சிதம்பரனார், அ. (விளக்கம், குறிப்பு) திருமந்திரம் பகுதி 11, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், இந்தியா. 1975.

கந்தையா. மு. — குழந்தைவேற் சுவாமிகளும் குரு பரம்பரையும், கீரிமலை குழந்தைவேற்சுவாமிகள் சமாதி தர்ம பரிபாலன சபை, 1965.

குலரத்தினம், க. சி. கடையிற் சுவாமிகள், மில்க்வைற் வெளியீடு, யாழ்ப்பாணம் 1975.

குலரத்தினம், க:சி. கல்யாண சுந்தர முதலியார், வி. செந்தமிழ் செம்மல் கதிரைவேற் பிள்ளை, கதிரைவேற்பிள்ளை கலா மன்றம், பருத்தித்துறை 1969.

கோதண்டராமன், ப. புதுவையில் பாரதி, பழனியப்பா பிரதர்ஸ் சென்னை, 1980.

சண்முகசுந்தரம். த. ஈழத்துச், சித்தர் சிந்தனை விருந்து, அருள் வெளியீட்டகம், தெல்லிப் பளை, 1984.

சபாபதிப்பிள்ளை, பொ. புற்றளைக்கரசே, கலாபவன அச்சகம், பருத்தித்துறை 1979.

சாமி சிதம்பரனார் (உரை) திருக்குறள், ஸ்டார் பிரசுரம், இந்தியா, 1962.

சுத்தானந்த பாரதியார், பாரதி விளக்கம், பாரதி பிரசுராலயம், இந்தியா, 1937

சைவநெறி (10ம் வகுப்பு) கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை, 1985.

திருவிளங்கம், மு. (உரை) சிவஞான சித்தியார் சுபக்கம், கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம் யாழ்ப்பாணம் 1971.

பத்மநாபன், ரா,(தொகுப்பு) பாரதியைப் பற்றி நண்பர்கள், வானதி பதிப்பகம் சென்னை, 1982.

பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம் சென்னை, 1986.

பூலோகசிங்கம். பொ. இந்து கலைக்களஞ்சியம், பகுதி 1, இந்து சமய இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை 1990.

முத்தையா. நா. ஈழத்துச் சித்தர்கள், ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை, 1980.

யதுகிரி அம்மாள், பாரதி நினைவுகள், அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1958.

## 2. கட்டுரைகள்

| | |
|---|---|
| கந்தசாமி, அ. ந. | ஞானம் வளர்த்த புதுவை - பாரதியின் யாழ்ப்பாணத்து சுவாமியார்?, ஸ்ரீலங்கா அரசாங்க வெளியீடு ஆகஸ்ட் 1961. |
| சபாபதிப்பிள்ளை, பொ. | பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமி, ஸ்ரீலங்கா, இலங்கை அரசாங்க வெளியீடு, ஏப்ரல் 1962. |
| ஈழத்துச் சோமு. | புதுயுக எழுச்சி பாடும் ஈழத்து இலக்கிய மாநாடு, ஈழநாடு இதழ் 5.5.1963. |
| பரசுராமமூர்த்தி, பா. | பாரதியாருக்கு இழுக்கு ஏற்படுத்தவா, பருத்தித்துறையில் மாநாடு - சுதந்திரன் 5.5.1963. |
| சிவஞானசுந்தரம், | மக்கள் இலக்கிய விழா-ஈழநாடு 6.5.1963. |
| கைலாசபதி. க | ஞானியரின் நட்புறவு - தினகரன் 7.5.1963. |
| சிவத்தம்பி, கா. | இலக்கிய வளர்ச்சியில் இன்னொரு கட்டம், தினகரன் 7.5.1963 |
| இராமச்சந்திரன், க. | பாரதியார்? - ஆத்மஜோதி 15.5.1963. |
| ஞானபாஸ்கரன், க. | யாழ்ப்பாணத்துச் சாமியார் பருத்தித்துறையைச் சேர்ந்தவரே, சுதந்திரன் 19.05.1963 |
| தம்பிராசா, சி. மு, | பாரதி வர்ணித்த ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச் சாமி. வீரகேசரி 22.11.1981. |
| அம்பிகைபாகன், ச. | பாரதியும் பல ஞானசித்தர்களும் - பாரதி சந்தித்த யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்?, வீரகேசரி 31.01.1982 |
| ..............................., | பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச் சாமி, வீரகேசரி 07.02.1982. |
| சபாரத்தினம், ஆ, | தமிழ்க்கவிதை வரலாற்றில் பாரதிக்கு முன்னும் பின்னும், தினகரன், 31.01.1982. |

111 துண்டுப்பிரசுரங்கள்

அருளம்பல சுவாமிகள் "யாழ்ப்பாணம் வியாபாரி மூலை சின்னையா வேலுப்பிள்ளை பேரிலும் வதிரி ஆறுமுகம் மகள் இலட்சுமி பேரிலும் தோத்திரம்" (1931 ம் ஆண்டில் நாகபட்டணத்தில் வெளியிடப்பட்டதாகக் கருதப்படுகிறது)

.............................. , "காற்றை நிறுத்தக்காணுவன் விடையை" (புதுவையில் வெளியிடப்பட்டது. 1928ற்கு முற்பட்டதாகக் கருத இடமுண்டு)

1 கையெழுத்துப் பிரதியில் உள்ள நூல்கள்

அருளம்பல சுவாமிகள், மண்விண் வினாவிடை

.............................. , புலம்பல்கள்

.............................. , கலியாண வினா



## நூல் ஆசிரியர்

கலாநிதி நாகநாதன் ஞானக்குமாரன் அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மெய்யியற் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமை புரிகின்றார். பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கை பலவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி செயற்படுபவர்களில் ஒருவர்.

களனி பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும், ஜவல்பூல் ராணி துர்க்காவதி பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் மெய்யியல், சைவசித்தாந்தம், வேதாந்தம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதுடன் இத்துறைகளில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வருகின்றார். மேலும் தென் இந்திய, வட இந்திய மெய்யியல் அறிஞர்கள் மத்தியில் அறிமுகமானவராய் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் கல்வியில் மாத்திரமல்லாது பொதுநல சேவைகளில் நாட்டம் கொண்டவராகவும், விளையாட்டு வீரராகவும் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதி வெளிவரும் 'அருளம்பல சுவாமிகள்" பற்றிய நூலைத் தொடர்ந்து மேலும் பல நூல்களை இவர் எழுத வேண்டும் என தமிழ் சமூகம் எதிர்ப்பார்க்கின்றது. இவற்றைச் செய்யக்கூடிய ஆற்றலும், முயற்சியும் இவரிடம் காணப்படுகின்றது. இவரது முயற்சிக்கு இறையாசி கிட்டட்டும்.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை, பி. எச்டி.
கலைப்பீடாதிபதி.